Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36
கதிர் : 101

ஞாயிற்றுக்கிழமை

மாசி 23 ஆம் நாள்
07 மார்ச் 2021

வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16+24
விலை : ரூ.40

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## தமிழருக்கு மீண்டும் ஏமாற்றம்

# வெளியான புதிய வரைவிலும் சர்வதேசப் பொறிமுறையில்லை

ஜெனிவா, மார்ச் 7

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை குறித்த தீர்மானத்தின் புதுப்பிக்கப்பட்ட வரைவு வெளியாகியுள்ளது. நகல் வரைவின் உரை மொழியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள போதிலும், சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறை குறித்த தமிழ் மக்களின் வேண்டுகோளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அது அமையவில்லை. 15

## பழைய முறையிலேயே மாகாணசபைத் தேர்தல்

இராஜாங்க அமைச்சர் ரொசான் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

பழைய முறையில் எதிர்வரும் ஜூலை மாதம் மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் 15

## அடுத்த ஆண்டு மார்ச்சில் உள்ளூராட்சித் தேர்தல்!

கொழும்பு, மார்ச் 7

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை 2022ஆம் 15



## இலங்கை பாரதிய ஜனதா யாழில் நேற்று உதயம்!

பெயரின் அர்த்தமே தெரியாது என்கிறார் தலைவர்

யாழ்ப்பாணம், மார்ச் 7

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி எனும் பெயரில் யாழ்ப்பாணத்தில் நேற்று புதிய கட்சி ஒன்று உதயமாகியுள்ளது என்று 15

## எவர் சொன்னாலும் இலங்கையில் போர்க்குற்ற விசாரணை நடக்காது

சரத் வீரசேகர திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 7

ஐ.நா. மனித உரிமைகள் சபையோ அல்லது வேறு எந்தத் தரப்போ கூறினாலும் இலங்கையில் போர்க் குற்ற விசாரணை ஒருபோதும் நடத்தப்படமாட்டாது. இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரி 15

## பொறுப்புக்கூறலில் இருந்து வெளியேறவே முடியாது!

கொழும்பை இறுக்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 7

பொறுப்புக் கூறலில் இருந்து இலங்கை வெளியேற முடியாது. இலங்கை 30/1, 34/1, 40/1 தீர்மானங்க 15

## இலங்கைக்கு எதிரான கூட்டணி; பிரிட்டன், கனடா உருவாக்கம்

கொழும்பு, மார்ச் 7

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என கொழும்பில் உள்ள பேரவை உறுப்பு நாடுகளின் தூதுவர்களிடம் 15

## மனித உரிமை ஆணையாளரை இலங்கைக்கு வருமாறு அழைப்பு

வெளிவிவகார அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச் 7

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டை இலங்கைக்கு 04

## மேலும் நால்வருக்கு வடக்கில் கொரோனா

ரயில் மோதி இறந்தவருக்கும் தொற்று உள்ளமை உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடக்கு மாகாணத்தில் மேலும் 4 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டது. மன்னாரில் நேற்று ரயில் 15

கிளிநொச்சியில்

## மாட்டுடன் மோதுண்டதால் பொலிஸ் அலுவலர் சாவு

கிளிநொச்சி, மார்ச் 7

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் 15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
செலான் வங்கி

Fun BLASTER இப்போது புதுப்பொழிவுடன்
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.
Dialog
எதிர்காலம் இன்றே.

# ஆசிரியர்கள் மீது குறை சொல்வதை அரசியல்வாதிகள் நிறுத்த வேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், மார்ச் 7**

**கடமையுணர்வோடும், அர்ப்பணிப்போடும் கடமை செய்கின்ற ஆசிரியர்களை குறைசொல்வதை அரசியல்வாதிகள் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.**

சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, ஒரு பிரதேசத்தைச் சார்ந்த ஆசிரியர்களின் ஆசிரியப்பணியை கொச்சைப்படுத்தும் விதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். இது ஆசிரியர்கள் மத்தியில் மனக் கவலையை தோற்றுவித்துள்ளது.


இலங்கையின் கல்வித்திட்டத்திலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அதிலும் தமிழர் பிரதேச கல்வியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

இது அரசியல் ரீதியில் திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒன்று. இதனை தமிழ் அரசியல் சார்ந்தவர்கள் கண்டுகொள்ளாமலும், அது பற்றிய தெளிவில்லாமலும் நடந்து கொண்டுவிட்டு ஆசிரியர்களைக் குறைசொல்வதும் பிரதேசரீதியாக பகிரங்கமாக பேசுவதும் ஆரோக்கியமானது அல்ல.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வி தொடர்பாக இனம் சார்ந்த அரசியல் தலைவர்களுடனும், இரண்டு மாகாணங்களின் மாகாணசபை உறுப்பினர்களுடனும் தனித்தனியே சந்திப்புக்களை நடத்தி இக் குறைபாடுகள் குறித்து ஆழமாக எடுத்துரைத்தோம். அதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்காதவர்கள் ஆசிரியர்கள் மீது குறைசொல்வதை நிறுத்திக்கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் மீது குறைசொல்வோர் முதலில் தாங்கள் முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும்.

ஒரு பிரதேசத்தில் பிறந்து அங்கேயே கற்று உயர்தொழில் கிடைத்ததும் அந்தப் பிரதேசத்தையே மறந்துவிட்டு அந்தப் பிரதேசத்துக்கு இன்னுமொருவர் வந்து சேவகம் செய்ய வேண்டுமென்று நினைப்பது வாழவைத்த பிரதேசத்துக்கே துரோகம் செய்யும் செயற்பாடாகும். என்றுள்ளது. (த-20)

# 90 ஆயிரம் கிலோ உழுந்து கொள்வனவு



வவுனியா,மார்ச் 7

வவுனியா மாவட்டத்தில் இதுவரை 90 ஆயிரம் கிலோ விதை உழுந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விதைத் தேவைக்காக சுத்திகரிக்கப்பட்ட ஒரு கிலோ உழுந்து 890 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படும் என வவுனியா விவசாயத் திணைக்களம் அறிவித்திருந்தது.

அந்தவகையில் திணைக்களத்தில் விதை உற்பத்தி திட்டத்துக்கும் சாதாரண தேவைக்குமாக விதை உழுந்தைக் கொள்வனவு செய்த விவசாயிகளிடம் இருந்து குறித்த உழுந்து மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

தரம் பிரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட நிலையில் ஒரு கிலோ உழுந்து 830 ரூபா தொடக்கம் 890 ரூபா வரை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. இதுவரை 90 ஆயிரம் கிலோ உழுந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அது சேமிக்கப்பட்டு விதைத் தேவைக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-110)

# வீதிகள் அபிவிருத்தி குறித்த கலந்துரையாடலில் சலசலப்பு

கிளிநொச்சி, மார்ச் 7

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், வீதிகள் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் சலசலப்பு எற்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமுன்மொழிவுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. இதிலே நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன், டக்ளஸ் தேவானந்தா, சிறீதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரின் மூலம் முன்வைக்கப்பட்ட திட்டமுன்மொழிவுகள் காணப்பட்டன.

இது தொடர்பில் தங்களிடம் எதுவும் வினவவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சுட்டிக்காட்ட இந்த விடயம் சர்ச்சையானது. இதன்போது கருத்துத் தெரிவித்த சிறீதரன், எனது திட்ட முன்மொழிவை அனுப்பி நெடுங்காலமாகிவிட்டது. தற்போதுதான் திட்ட முன்மொழிவுகள் வருகின்றன என்று கூறி சர்ச்சையிலிருந்து நழுவினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ், மாகாண சபையைத் தவிர ஏனைய எல்லோருக்கும் திட்ட முன்மொழிவுகள் கிடைக்கின்றன என்று கூறியபோது சபையில் இருந்தோர் சிரித்தனர். மாகாண சபை தவிர்ந்து வேறு யார் கேட்டாலும் கிடைக்கின்றன என்றும் ஆளுநர் தனது ஆதங்கத்தைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. எங்களுக்கு இவை தொடர்பாக அறிவிக்கவில்லை எவ்வாறு இந்தத் தெரிவு இடம்பெற்றது என்று சுமந்திரன் கூறவேண்டும் என்று கேட்டார். பதிலளித்த டக்ளஸ் தேவானந்தா, உங்களின் ஆட்சிக் காலத்தில் கம்பெரலிய என்ற திட்டத்தை நீங்கள்தான் செய்தீர்கள். அதன்மூலம் செய்த வேலைகளும் எமக்கு தெரியும் என்று தெரிவித்ததோடு, அதேபோன்றுதான் ஒவ்வொரு ஆட்சியாளர்களுக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சி நிரல் உள்ளது என்ற விடயத்தையும் கூறினார்.

இதன்போது கம்பெரலிய நிதியை நாம் கையாளவில்லை. திணைக்களங்கள் ஊடாகவே கையாளப்பட்டன என்று சிறீதரன் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், நீங்கள்தான் பட்டியலைக் கொடுக்கின்றீர்கள் என தெரிவித்தபோது, இப்போதும் நாங்கள்தான் பட்டியல் கொடுக்கின்றோம் என சிறீதரன் தெரிவித்திருந்தார்.

இதனிடையே குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் இரு அரசுகளும் மோதிக்கொள்வதில் பிரச்சினை இல்லை. ஆனால் மாகாணத்துக்கு என்று ஏதேனும் வைத்துக்கொண்டு கொடுத்தால் நல்லது என்று தெரிவித்தார்.

வீதிகள் என்ன அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன என்பது உட்பட சில கேள்விகளை அமைச்சரிடம் தொடர்ந்தும் சுமந்திரன் கேள்விகளை கேட்க இவ்வாறான விடயங்களை நாடாளுமன்றில் கதைப்போம். இந்த நேரத்தை ஏன் வீணடிக்க வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

கேள்வி கேட்டால் பதிலளிக்க வேண்டும் என்று சுமந்திரன் தெரிவித்தபோது, பதிலளிக்கலாம். ஆனால் எதற்காக இங்கு கூடினோமோ அதை நிறைவேற்ற முடியாது போய்விடும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். சுமந்திரன் தொடர்ந்தும் குறுக்கிட்டார். இந்த நிலையில் இருவருக்குமிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. சில நிமிடங்கள் சபை அமைதியாக இருந்தது.

(த-319.6)

# 60 வயதானோருக்கு 'கோவக்ஸ்' தடுப்பூசி

உலக சுகாதார ஸ்தாபனத்தால், கோவக்ஸ் திட்டத்தின் கீழ் கிடைக்கும் தடுப்பூசிகள் முதற்கட்டமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு செலுத்தப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

1.44 மில்லியன் டோஸ் தடுப்பூசியை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் இணங்கியுள்ளது. அதில் முதல் தொகுதி இன்று இலங்கைக்கு எடுத்து வரப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(க-இ)

# ஆயிரம் ரூபாவை கொடுக்க முடியாது

## பெருந்தோட்ட நிறுவனங்கள் பிடிவாதம்

கொழும்பு,மார்ச் 7


பெருந்தோட்ட நிறுவனங்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றன. அதனால் ஆயிரம் ரூபாவை தொழிலாளர்களுக்கு கொடுக்க முடியாத நிலையில் உள்ளோம் என்று பெருந்தோட்ட நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்க வேண்டும் என்று அண்மையில் சம்பள நிர்ணயசபை அறிவித்திருந்தது.

இந்தப் பிரச்சினைக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று பெருந்தோட்ட நிறுவன ஒன்றியத்தின் பேச்சாளர் ரொசான் ராஜதுரையிடம் ஆங்கில ஊடகமொன்று கேள்வி எழுப்பியது.

அதற்கு அவர் நேரடியாகப் பதிலளிக்கவில்லை. எவ்வாறெனினும் பல்வேறு வழிகளில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பளக் கோரிக்கை குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்று பதிலளித்தார். (க-இ)

# காயவைத்த நெல்லையும் விட்டு வைக்காத யானைகள்



புதுக்குடியிருப்பு, மார்ச் 7

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட வள்ளிபுனம் கிராமத்தில் காட்டுயானைகளின் தொல்லையால் மக்களின் வாழ்வாதாரம் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள். வள்ளிபுனம்,இடைக்கட்டு கிராமங்களுக்குள் புகும் காட்டுயானைகள் மக்களின் வாழ்வாதாரப் பயிர்களை அழித்து நாசம் விளைவிக்கின்றன.

விவசாய நிலத்துக்கு போடப்பட்ட வேலித் தூண்களைக்கூட முறித்துள்ளதுடன் தென்னை மரங்கள், வாழை, பலா போன்ற பலவற்றை அடியோடு அழித்துள்ளன. அறுவடையின் பின் வீட்டின் பின்னால் காயவைத்த நெல்லைக் கூட யானைகள் விட்டுவைக்காமல் உண்டுள்ளன. ஒரு விவசாயி காயவைத்த நெல்லில் 5 மூடைகள் நெல்லை யானை சாப்பிட்டுள்ளது. இதற்குத் தீர்வாக யானை வேலி அமைத்துத் தருமாறு கோரியும் இதுவரை யானை வேலி அமைக்காமையால் நாம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றோம் என கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(வ-19)

# இலங்கை விமானப்படை பலவீனம்; நட்பு நாடுகளின் ஆதரவு கட்டாயம்

*விமானப்படை தளபதி தெரிவிப்பு*



**கொழும்பு,மார்ச் 7**
**இலங்கையின் விமானப்படை பலவீனமானது என்பதே உண்மை. தாக்குதல் சக்தி 20 வீதத்துக்கும் குறைவானதா கும். தாக்குதல் விமானங்களும் பலவீனமானவையாகக் காணப்படுகின்ற காரணத்தால் நாம் நட்பு நாடுகளை நாட வேண்டியுள்ளது.**

இவ்வாறு விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன தெரிவித்தார். இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நடத்தப்பட்ட விமானப்படை கூட்டுக் கண்காட்சிகளில், இந்திய விமானப் படையை இணைத்துக்கொண்டமை தொடர்பில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையின் விமானப்படை கடந்த காலங்களிலும் பலவீனமாகக் காணப்பட்டது. எனினும் இப்போது புதிய வேலைத்திட்டங்களை உருவாக்கி விமானப்படைப் படைப் பிரிவுகளை பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. எம்மிடம் 'கிபீர்' விமானம் ஒன்றே உள்ளது. மேலும் இஸ்ரேல் அரசின் பாவனை யில் உள்ள ஐந்து 'கிபீர்' விமானங்கள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. கண்காட்சியில் இந்தியாவின் விமானப்படைகளை இணைத் தமை அரசியல் நோக்கம் கொண்டதல்ல. இலங்கையின் எல்லையைப் பாதுகாக்க வேண்டுமானால் இந்தியாவுடன் இணைந்தே செயற்பட வேண்டும். பாகிஸ்தான், ஆஸ்திரேலியா மற்றும் சில நாடுகளுடனும் நாம் இணைந்து பயிற்சிகளில் ஈடுபடுகின்றோம். நட்பு நாடுகளுடன் நட்புறவை மேலும் பலப்படுத்தவே இதனை மேற்கொள்கின்றோம். என்றார். (க-இ)

# மைத்திரி -ஞானசாரர் அவசர சந்திப்பு!

கொழும்பு, மார்ச் 7
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும், பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கும் இடையில் முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.
திறப்பு விழா தொடர்பான அழைப்பிதழொன்றைக் கையளிப்பதற்காக சென்றவேளையிலே சமகால அரசியல் நிலவரங்கள் குறித்தும் மைத்திரியுடன், கலகொட அத்தே ஞானசார தேரர் கலந்துரையாடியுள்ளார் என அறியமுடிகின்றது.
21/4 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் மைத்திரிபால சிறிசேன மற்றும் ஞானசார தேரர் ஆகிய இருவருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறித்த அறிக்கையை இரு தரப்புகளுமே நிராகரித்துள்ளன. இவ்வாறானதொரு நிலையில் அடுத்தகட்ட நகர்வுகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளன.
அதேவேளை, முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகிய இருவரையும் மைத்திரிபால சிறிசேன சந்தித்து கலந்துரையாடுவதற்கு திட்டமிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-44)



இலங்கை விமானப்படையின் 70ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விமான வான் சாகச கண்காட்சியின் நிறைவு விழா நேற்று முன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் காலிமுகத்திடலில் இடம் பெற்றது. (ச-இ)

கொழும்புத் துறைமுக

# மேற்கு முனையத்துக்கு ஒப்புதல் அளிக்கவில்லை

*இந்தியா அறிவிப்பு*

கொழும்புத் துறைமுக மேற்கு கொள்கலன் முனையத் திட்டத்துக்கு. இந்தியா ஒப்புதல் வழங்கியுள்ளது என்ற தகவலை இந்தியா மறுத்துள்ளது. இது தொடர்பில் இந்திய வெளியுறவு செய்தித் தொடர்பாளர் அனுராக் ஸ்ரீவாஸ்தவா தெரிவித்துள்ளதாவது,
அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டல லிமிடெட் நிறுவனம் முன்வைத்த இந்தத் திட்டத்துக்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஒப்புதல் அளித்துள்ளது என்று இலங்கை அரசு தெரிவித்திருந்தது. அந்தத் தகவல் தவறானது- என்றார்.கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்திக்கு, அதானி குழு இணைய இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது. அதற்கமைவாக இந்தத் திட்டத்துக்கு முதலீட்டாளர்களைப் பரிந்துரைக்குமாறு அமைச்சரவையை நியமித்த குழு. இந்தியத் தூதரகம் மற்றும் ஜப்பானியத் தூதரகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது என்று செய்திகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட 12 வயதுச் சிறுமி

கொழும்பு, மார்ச் 7
வளர்ப்பு மூதாட்டிக்கு முன்பே, 12 வயதுச் சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய சம்பவம் அநுராதபுரம் விலச்சிய பகுதியில் பதிவாகியுள்ளது.
சந்தேக நபர் 40 வயதுடைய திருமணமானவர். அவர் மூதாட்டியின் மருமகன் என்று தெரிவிக்கப்படுகிறது.
சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். மூதாட்டி சிறுமியுடன் சென்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.
மேலதிக விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு
அலுவலக சிற்றூழியர்
பிளம்பர்
வெல்டர்
எலக்ரீசியன்
ஆகிய வேலைகளுக்கு ஆள்கள் தேவை.
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
- தேவையேற்படின் தங்குமிட, வசதி, உணவு என்பனவும் வழங்கப்படும்.
இன்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணியிலிருந்து பி.ப 6 மணிக்கு
இடைப்பட்ட நேரத்தில், 392/6 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(கைலாச பிள்ளையார் கோயில் அருகில்)
என்ற முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்

# எரிவாயு விலை அதிகரிக்கக்கூடும்

கொழும்பு,மார்ச் 7
எரிவாயு விநியோக நிறுவனங்களின் கோரிக்கைக்கு அமைவாக, எரிவாயு விலையில் விரைவில் மாற்றம் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. எரிவாயு விநியோக நிறுவனங்களின் கோரிக்கை, அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். எரிவாயு சிலிண்டரின் விலைகளை அதிகரிக்குமாறு, இரு உள்நாட்டு நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளாக உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக விலையில் மாற்றம் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 7
வெள்ளவத்தையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.
நேற்றுக் காலை 5.45 மணிக்கு வெள்ளவத்தை கரையோர மார்க்கத்தில் பயணித்த காரொன்று பாதசாரிகள் மீது மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ய-இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி ....

*மனித...*

அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

படையினருக்கு எதிராக மனித உரிமைகள் மீறல் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றின் உண்மை நிலையை அறிந்துகொள்வதற்காக அவர்களை அழைக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது. அந்தவகையில் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் மற்றும் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கின்ற முக்கியமான நாடுகளின் பிரதிநிதிகளை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

## டிப்பர் விபத்தில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், பெப். 7

மீசாலை ஏ-9 வீதியில் இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞரொருவர்(வயது- 22) காயமடைந்தார். அல்லாரை தெற்கைச் சேர்ந்த இளைஞனே காயமடைந்தவராவார். அவர் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

# அரசியல்வாதிகளின் சுயநலன்களுக்காக சமுர்த்தித் திட்டத்தைப் பாவிக்கலாகாது

*யாழ். ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைமையை கடுமையாகக் கண்டிக்கின்றார் அமைச்சர் டக்ளஸ்*

கொழும்பு - மார்ச் 7

சமுர்த்தித் திட்டத்தை நெருக்கடியான சூழலில் நானே யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்தேன். சமுர்த்தி செயற்பாடுகளுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் தொடர்புகள் இருக்கலாம். ஆனால் எவரும் தமது சுய நலன்களுக்காக இந்த வேலைத்திட்டத்தை நடத்த முற்படக்கூடாது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சௌபாக்கியா வாரத்தை அங்குரார்ப்பணம் செய்து பயனாளிகளுக்கு உதவித்திட்ட காசோலைகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'யாழ். மாவட்ட மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரின் பெயரால் அவரின் இணைப்பாளர்கள் எனப்படுவோர் மிரட்டல் விடுக்கின்றனர் எனவும், அழுத்தம் கொடுக்கின்றனர் எனவும் பல முறைப்பாடுகள் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன.

அவ்வாறான அநாகரீகமான செயற்பாடுகள் குறித்த ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருக்கு தெரிந்து நடக்கின்றதா, தெரியாமல் நடக்கின்றதா என்பது தொடர்பாக அவருடன் கலந்துரையாடவுள்ளேன். அவருக்கு தெரியாமல் நடக்குமாக இருந்தால், இவ்வாறான அநாகரிகமான செயலை அவர் கட்டுப்படுத்த வேண்டும். மாறாக, அவருக்கு தெரிந்துதான் அரச அதிகாரிகளுக்கான மிரட்டலும், அழுத்தங்களும் அவரது இணைப்பாளர்களால் விடுக்கப்படுமானால் அது தொடர்பில் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் பேசி முடிவொன்றைக் காண்பேன். யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல கிளிநொச்சி அதிகாரிகளிடமும் அழுத்தங்களைப் பிரயோகித்திருக்கின்றனர். எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை யாழ். மாவட்டச் செயலரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு ஆலோசனை கூறியிருக்கின்றார்கள் என்றார். (ம)

## நூல் வெளியீடு

தமிழி அமைப்பின் ஏற்பாட்டில் முனைவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸின் 'சொல் விளையாட்டு விளையாடுவோம்' என்ற கையெழுத்துப் பிரதி நூல் வெளியீடு இன்று இடம்பெறவுள்ளது.

யாழ். பொது நூலகத்தில் இன்று காலை 10 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம-320)


## இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

### சுற்றுலாத்துறை அமைச்சு

சுற்றுலா மற்றும் ஏற்பாட்டியல் துறைகளில் மனிதவள மேம்பாட்டுக்கான கல்வியை வழங்கும் இலங்கையின் முதன்மை நிறுவனமே இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

## SLITHM யாழ்ப்பாணம் வெற்றிடங்கள்

### துணை விரிவுரையாளர் (ASSISTANT LECTURER) (AR1 பிரிவு)

- உதவி விரிவுரையாளர் - உணவு மற்றும் பான செயற்பாடுகள் - SLITHM யாழ்ப்பாணம்
- உதவி விரிவுரையாளர் - சமையல் - SLITHM யாழ்ப்பாணம்

**தகைமையும் அனுபவமும்** (கீழுள்ளவற்றில் 1 அல்லது 2 அல்லது 3)

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழவினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் விசேட பட்டம்
2. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழவினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் பட்டம் அத்துடன் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் முதுகலை பட்டம்.
3. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் சமையல்/ உணவு மற்றும் பான செயற்பாடுகளில் சிறப்பு பூரணமான பட்டம் பெற்றிருத்தல்.

   மற்றும்

   மூன்று அல்லது அதனிலும் கூடிய நட்சத்திர அந்தஸ்துகொண்ட ஹோட்டலொன்றில் குறைந்தது 2 வருட அனுபவத்துடன் நிறைவேறறு அதிகார மட்டத்தில் பணியாற்றிய அனுபவம்.

**வயதெல்லை:**

22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் அவசியம்.

**சம்பள அளவுத் திட்டம்:**

AR1-2016 ரு. (53,150/= 10 x 1,375/= 15 x 1,910/= ரு. 95,550/=) 2016ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத்திணைக்கள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் என்பன வழங்கப்படும். போக்குவரத்துக்காக மாதாந்தம் ரு. 4,000/- உம் மற்றும் தொழில்முறை கொடுப்பனவாக ரு. 3,000/- உம், தொலைபேசி கொடுப்பனவாக ரு. 2,500/- உம் வழங்கப்படும்.

### முகாமைத்துவ உதவியாளர் (MANAGEMENT ASSISTANT) (MA 1-2 பிரிவு)

- **தகைமையும் அனுபவமும்**

  க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி, அவற்றில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழி, கணிதம் என்பன அடங்கலாக நான்கு திறமை சித்திகள் உடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் (பொது பாடம் தவிர) சித்தி.

**வயதெல்லை:**

18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் அவசியம்.

**சம்பள அளவுத் திட்டம்:**

MA 1-2 ரு. [27,910 - 10x300 - 7x350 - 12x600 - 12x710 - 49,080] 2016ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத்திணைக்கள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் என்பன வழங்கப்படும். போக்குவரத்துக்காக மாதாந்தம் ரு. 4,000/- வழங்கப்படும்.

### பொதுத் தகவல்கள்:

**ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றுக்கான பங்களிப்பு**

+ ஊசேநி - அடிப்படைச் சம்பளத்தில் ஊழியர் 10% பங்களிப்பினையும் தொழில்தருநர் 15 % பங்களிப்பினையும் வழங்குவார்.
+ ஊநநி - அடிப்படைச் சம்பளத்தில் தொழில்தருநர் 3% பங்களிப்பினை வழங்குவார்.
+ ஊழியருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் கவர்ச்சிகரமான சுகாதார மருத்துவ காப்புறுதி காப்பீடு.

கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், வேலை அனுபவச் சான்றிதழ், உறவினரல்லாத இரண்டு சிபாரிசுதாரர்களின் பெயர்களுடன் பூரணமான சுயவிபரக் கோவையை (ஆங்கில மொழியில்) கீழ்வரும் முகவரிக்கு **2021 மார்ச் 25ஆம்** திகதிக்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியை தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் குறிப்பிடவும்.

பணிப்பாளர் நாயகம்

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

இல, 78 காலி வீதி, கொழும்பு 03

பொது விசாரணை: 0112 208360

UNLIMITED YouTube
HD quality up to 25GB*

மாதாந்தம் ரூ.249 +வரிகள்
அழையுங்கள் #170#> Content Based Plans> YouTube
www.sltmobitel.lk
4G
SLTMOBITEL
TRC/M/Promo/20/01


ABEC CONSULTANTS
UP TO £3500 SCHOLARSHIPS
ADMISSION OPEN FOR APRIL, MAY & SEPTEMBER 2021 INTAKES
STUDY, WORK & LIVE IN UNITED KINGDOM
நீங்கள் இப்போது இங்கிலாந்தில் வசிக்கும் போதும் வேலை செய்யும் போதும் உங்கள் உயர் கல்வியைப் பெறலாம்.
Earn your Bachelor Degree, Bachelor (Top up) or Master Degree at a World-Class University
Get Post Study Work Visa for 2 years after your graduation
IELTS not mandatory
Secure Globally Recognized Degrees
Attractive Scholarships
- Internship Opportunities.
- Part-time work rights 20 hrs Per Week & Full time workrights on vacation period)
- Bank Balance should be matured just 28 days (No need source of income or regular income proofs)
- 1 Year Master Programs & Travel with your Dependents for PG programs
We are Offering The best Service
ABEC Consultants Well experienced in International Education more than 15 years and we give you the Best Individual Service till the end of the process..IT'S OUR PROMISE TO YOU!
Call for more info 076 098 3859
No.101/1/1, D.S. Senanayake Street, Kandy
Upadhya@abeclk.com www.abec.lk

சாரதியுடனான வாகனம் தேவை
நாடளாவிய ரீதியில் பிரபல்யமான தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு வடமாகாணத்தில் சாரதியுடன் வாகனம் தேவை

Mini Van
Buddy Van
(டபிள் கப்)
2015 ஆம் ஆண்டுக்கு பிந்திய மொடல்

"English Numbers வாகனம் மட்டும்"
24 மணிநேர தொடர்புகளுக்கு
076 4202 151, 070 377 7230, 077 358 2644, 070 3777 232,
(011 268 8995 - தொடர்புகொள்ளவேண்டிய நேரம் 9.00 am-4.00pm)

# சாவகச்சேரியில் 207 பேருக்கு பி.சி.ஆர்.

*203 பேருக்கு தொற்றில்லை; நால்வருக்கு மாதிரிகளில் சந்தேகம்*

சாவகச்சேரி, மார்ச் 7

சாவகச்சேரி சுகாதார பிரிவினரால் கடந்த வியாழக்கிழமை ஆய்வுக்காக அனுப்பப்பட்ட 207 பேரின் பி.சி.ஆர் சோதனை மாதிரிகளில் 203 பேருக்கு தொற்று இல்லை என்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

அத்துடன் கொடிகாமம் பொதுச் சந்தை தேங்காய் வியாபாரியொருவர், மட்டுவி லைச் சேர்ந்த மூவரின் மாதிரிகளில் சந்தேகம் உள்ளதால் நேற்று மீண்டும் அவர்களின் மாதிரிகள் ஆய்வுக்குட்படுத் தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்ப டுகிறது.

கொடிகாமம் சந்தையில் கடந்த திங்கட் கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் மரக்கறி வியாபாரிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்ப டுத்தப்பட்டதையடுத்து, கடந்த வியாழக் கிழமை கொடிகாமம் சந்தையில் வியா பாரம் செய்யும் 176 பேருக்கும் மட்டு வில், வரணி, நாவற்குழி போன்ற இடங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை யிலேயே இம் முடிவுகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

(ச-9)

காணியற்றோருக்கு

# வயல் காணிகளை வழங்கக் கோரிக்கை

முல்லைத்தீவு பனிக்கன்குளம், மாங்கு ளம், கிழவன்குளம் மற்றும் திருமுறி கண்டி ஆகிய கிராம அலுவலர் பிரிவில் உள்ள வயல் காணிகளற்ற குடும்பங்க ளுக்கு வயல் காணிகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புதுக் குடியிருப்பு பிரதேச சபை வட்டார உறுப் பினர் செ.பிறேமகாந் மற்றும் பொது அமைப்புக்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

குறிப்பாக, மாங்குளம் பேராற்று வெளி யில் காணப்படும் வயற்காணிகளை வனவளத் திணைக்களத்தினர் விடுவிக் கவேண்டும் எனவும், பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள நாவிக் குளத்தின் கீழான வயற்காணிகளையும் கிழவன்குளத்தின் கீழ் காணப்படும் வயற்காணிகளையும் திருமுறிகண்டி குளத்தின் கீழ் விவசாயம் செய்யக்கூடிய வயற்காணிகளையும் மக்களுக்கு பகிர்ந்து வழங்க வேண்டும் என சுட்டிக் காட்டப்படுள்ளது. கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங் கிணைப்புக்குழு கூட்டத்திலும் இக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டமை குறிப் பி டத்தக்கது.

(வ-13)

# பி.சி.ஆருக்கு உட்படுத்தப்பட்ட வியாபாரிகளுக்கே அனுமதி!

யாழ்ப்பாணம், மார்ச் 7

கொடிகாமம் பொதுச் சந்தையில் பி.சி. ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட வியாபாரிகள் சந்தைக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனு மதிக்கப்பட்டனர். பரிசோதனை செய் யாத வியாபாரிகள் வியாபார நடவடிக் கைகளுக்கு அனுமதிக்கப்படவில்லை, இதனால் குறைந்தளவு வியாபாரிகளே வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள னர்.

கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனைக்கு பொது மக்கள் போதியளவு ஒத்துழைப்பு வழங் காமையால் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வில்லை என சுகாதாரப் பிரிவினர் தெரி வித்தனர்.

(வ-159)

# விளையாட்டு மைதான காணிக்கு அனுமதியை வழங்க கோரிக்கை

திருமுறிகண்டி கிராமத்துக்கான பொது விளையாட்டு மைதான காணிக்கான அனுமதியை விரைவில் வழங்குமாறு அப் பகுதி பொது அமைப்புகளின் பிரதி நிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட திருமுறிகண்டி கிராமத்துக்கு பொதுவிளையாட்டு மைதானம் ஒன்று இல்லாத நிலைமை காணப்படுகிறது. இது தொடர்பில் விளையாட்டுக் கழகத்தால் சுட்டிக்காட் டப்பட்டமைக்கு அமைவாக புதுக்குடி யிருப்பு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரின் கோரிக்கையினூடாக முறி கண்டிப்பகுதியில் விளையாட்டு மைதா னத்துக்கான காணி அடையாளப்படுத் தப்பட்டது. குறித்த காணிக்கு மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுவின் சிபார்சு பெறப்பட்டு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சிவமோகனின் நிதி ஒதுக் கீட்டினூடாக புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும் அக் காணி இராணுவத்துக்கு வழங்கப்பட் டுள்ளது எனக் கூறி வனவளத்திணைக் களம் குறித்த வேலைகளைத் தடுத்து நிறுத்தியது. இந்நிலையில் அதற்கு அருகில் காணப்பட்ட இடப்பெயர்வு காலத்தில் மக்கள் குடியிருப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட-கைவிடப்பட்ட காணி யொன்று மைதானத்துக்காக மீண்டும் அடையாளப்படுத்தப்பட்டு தொடர்புடைய திணைக்களங்களின் சிபார்சுடன் வன வளத் திணைக்களத்தினரின் அனுமதிக் காக சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை குறித்த மைதானத்துக்கான கோரிக்கைக் கடிதத்துக்கான அனுமதி வழங்கப்படாதுள்ளது. எனவே இதை விரைவாக வழங்குமாறு பிரதேச சபை வட்டார உறுப்பினர் செ.பிறேமகாந் மற் றும் கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளது டன் இதுவரை காலமும் அனுமதி வழங் காதமைக்கு அதிருப்தியை வெளிப்படுத்தி யுள்ளனர்.

(வ-13)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தர்ம யுத்தமும் அதர்ம வியூகமும்

'மடியில் கனமிருந்தால் தான் வழியில் பயமிருக்கும்' என்பது காலம் காலமாக எம் மண்ணில் பழக்கத்தில் இருந்து வரும் ஒரு முதுமொழி.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வை எதிர்கொள்வதற்கான இலங்கையின் நிலை மேற்குறிப்பிட்ட முதுமொழிக்கு அர்த்த வலுவைக் கூட்டுவதாகவே உள்ளது.

''ஜெனிவாவில் யாராலும் எம்மை எதுவும் செய்துவிட முடியாது." என்று 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற கருத்துப்பட வீராவேச அறிவிப்புகளை ஆரம்பத்தில் சொல்லிக்கொண்டிருந்த இலங்கை அரசு, இப்போது ஜெனிவா அமர்வு முக்கிய கட்டத்தை எட்டியுள்ள தருணத்தில் சுருதியைக் குறைக்கத் தொடங்கிவிட்டது. சர்வதேச ரீதியில் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக சவால் விட்டால் எதிர்விளைவுகள் என்னவாகும் என்பது பற்றி இலங்கை அனுபவ ரீதியாக இப்போது கற்றுக்கொண்டுள்ளது.

போருக்கு முன் – போருக்குப் பின் என்ற இரண்டு காலப் பகுதிகளிலும் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களில் இலங்கையின் அரசியலாளர்கள் எவ்வாறான அணுகுமுறைகளைக் கையாண்டார்கள்? அதன் விளைவுகள் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தின? போன்ற எல்லாவற்றையும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் ஆர்வலர்களும் நன்கு அறிந்தே வைத்துள்ளனர். இத்தகைய மனித உரிமைகள் மீறல் செயற்பாடுகள் யாவும் இனப்படுகொலை என்ற அராஜக இலக்கை மையமாகக்கொண்டு ஆட்சியாளர்களால் கட்டம் கட்டமாக நிகழ்த்தப்பட்டவை. அவை போர்க்காலத்தின்போது மனிதாபிமான நடவடிக்கை என்ற பெயரிலும், அறிவையும் மனதையும் வென்றெடுக்கும் நடவடிக்கை என்ற பெயரில் (winning hearts and minds operation) போரின்போதும், அதன் பின்னரும் ஆயுதப் படையினராலும், ஆயுதம் தாங்கிய ஒட்டுக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட கொடூரங்கள் அவ்வளவு எளிதில் மூடிமறைக்கக் கூடியவையல்ல.

அது ஒரு குருதி வாடை வீசும் வரலாறு. போர் நிகழ்ந்து முடிந்த அல்லது போர் நிகழும் நாடுகளில் இவையெல்லாம் சகஜமே என நியாயம் கற்பிப்போர் எவராக இருந்தாலும் அவர்கள் அனைவருமே மனித நேயம் அற்றவர்களாக இருப்பர். மானுடம், சுதந்திரம் என்ற சொற்களுக்கு அர்த்தமே தெரியாத அறிவிலிகளாகவே இருப்பர்.

இலங்கையில் போர்க்குற்றம் என்று எதுவும் நிகழவில்லை என வாதிடத் துணிவோரும் அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அதற்கு நியாயம் கற்பிக்க முனைவோரும் எந்த வகையினர் என்பதை நாம் விவரிக்க வேண்டியதில்லை.

உண்மைகள் உணரப்பட்டு அவை தொடர்பான நியாயத்தை உலகம் கேட்கும் நிலை உருவாகி அதி தீவிரம் கொள்ளும்போது தான் குற்றம் செய்தோர், தம் மடியினுள் மறைத்து வைத்திருக்கும் 'கனம்'ஏற்படுத்தக்கூடியதான ஆபத்தை உணரும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இலங்கையின் தற்போதைய நிலையும் அத்தகையதே. ஜெனிவாவை எதிர்கொள்ள நேரும் தருணம் நெருங்கும்வேளையிலேயே அதுபற்றி அவர்கள்சிந்திப்பதென்ற விடயம் பகிரங்கமாக வெளிப்படத் தொடங்கியுள்ளது.


பிரிட்டன் மனித உரிமைகள் பேரவை அமர்வில் முன்வைக்கப் போகும் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெல்லுமா? தோற்குமா? அதன் எதிரொலி – எதிர் விளைவு – என்னவாக இருக்கும்? என்பதெல்லாம் வேறு.

ஆனால் அந்தப் பிரேரணை இலங்கைக்கு எதிராக சர்வதேச அரங்கில் முன்வைக்கப்படும் ஒரு பேராவணமாக இருக்கப் போவது மட்டும் உண்மை!

இதுவே இலங்கையை அடையாளப்படுத்தப்போகும் அவமானகரமான சாட்சியம் என்பதை அரசு இந்த இறுதிக் காலங்களில் உணர ஆரம்பித்ததன் விளைவே. ஜனாஸா புதைப்புக்கான அனுமதி,பயங்கரவாதத் தடைச் சட்டம் மறுபரிசீலனை குறித்த அறிவிப்பு, காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை தொடர்ந்து இயங்கவைக்கும் யோசனை, மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான செய்திகள் என்பவையும் ஜெனிவாவைச் சமாளிப்பதற்கான வழிவகைகளே.

ஆனால் வெறுமனே இத்தகைய அறிவிப்புக்கள் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் தனக்கு எதிரான பிரேரணையைச் சமாளித்து தோற்கடித்து விடலாம் என அரசு நினைத்தால் அதன்படியே இலங்கை அரசு வெற்றியடைந்தால் அந்த வெற்றி என்பது ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகத்துக்கும் அந்தப் பிரேரணையை முன்வைக்கப்போகும் நாடுகளுக்கும் ஏற்படப்போகும் தோல்வியாகவே இருக்கும்.

ஆனாலும் தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும் – என்ற பாரதியின் பாஞ்சாலி சபத வரிகள் சொல்லும் எதிர்வு கூறல் மிக வலுவானதே!




நன்றி - சஜித் பண்டார

# சுண்டிக்குளம் தேசிய பூங்கா வழக்குகள் வாபஸ் பெறப்படுமாம்

கிளிநொச்சி, மார்ச் 7

**சுண்டிக்குளம் தேசிய பூங்கா என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் பயிர்செய்த குற்றத்துக்காக கைதுசெய்யப்பட்ட பொதுமக்கள் விடுவிக்கப்பட்டாலும், அவர்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் பொருள்கள் ஆகியவை திருப்பிக் கையளிக்கப்பட்டு வழக்குகள் வாபஸ் பெறப்பட வழி செய்வேன் என பளை ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் உறுதியளித்துள்ளார்.**

பளை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது, பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கூட்டத்தில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நாம் பயிர்செய்த காணிகளை தேசிய பூங்கா என்ற பெயரில் வனஜீவராசிகள் திணைக்களம் அபகரித்து எம்மை பயிர்செய்ய விடாமல் தடுப்பதும், மீறிப் பயிர்செய்தால் கைதுசெய்வதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் அங்கு பயிர் செய்வதால் குறித்த தேசிய பூங்கா பகுதியில் என்ன தீமை ஏற்படப்போகிறது? என பொதுமக்கள் தரப்பால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதையடுத்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரியிடம் குறித்த வனப்பகுதியில் என்ன வரப்போகிறது என இணைத்தலைவர் கேட்டபோது, அங்கே கட்டுமானங்கள் எதுவும் வரப்போவதில்லை. வனம் மட்டும் தான் என அதிகாரி பதிலளித்தார். இது தொடர்பில் தான் வனஜீவராசிகள் அமைச்சருடன் கதைத்து குறித்த வழக்குகளை வாபஸ் பெறச்செய்து மீளவும் பயிர்செய்யக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கிறேன் என இணைத்தலைவர் உறுதியளித்தார். (வ-319)

# மின்சாரம் இல்லாது 84,000 குடும்பங்கள்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

நாட்டில் 99.8 சதவீதமானோருக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் சுமார் 84 ஆயிரம் பேர் மின்சாரம் இன்றியுள்ளனர். அவர்களுக்கு இந்த வருடம் மின்சாரம் வழங்குவதற்கான, நடவடிக்கையை மேற்கொண்டு மின் வழங்கலை 100 வீதம் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கின்றேன் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கெரவலபிட்டியவில் அமைக்கப்படும் இலங்கையின் முதலாவது திரவ இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மின் கட்டமைப்பில் 350 மெகாவோட் மின்சாரத்தை இணைக்கும் மின் உற்பத்தி நிலையத்தின் முதல்கட்டத்தை 21 மாதங்களுக்குள் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது உற்பத்தி செய்யப்படும் 220 மெகாவோட் மின்சாரம் மற்றும் 12 மாதங்களில் நிறைவுசெய்யப்படவுள்ள இரண்டாம் கட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் 130 மெகாவோட் மின்சாரம் என்பனவும் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்படவுள்ளன. எரிசக்திக்கு முக்கியத்துவமளித்தே இன்று உலகம் தீர்மானம் மேற்கொள்கிறது. அந்த அளவுக்கு எரிசக்தி எமது வாழ்வுக்கு முக்கியமானதாகும். மின்சக்தி துறையில் ஏற்படக்கூடிய நெருக்கடியை முன்கூட்டியே அறிந்திருந்தமையாலேயே நீர் மின்சக்தி மீது மாத்திரம் தங்கியிராது, நுரைச்சோலை நிலக்கரி மின் நிலையத்தை நிறுவினோம். அதற்கு பல்வேறு விமர்சனங்கள் எழுந்தபோதிலும், கடந்த காலத்தில் ஏற்பட்ட வறட்சி நிலைமையை சமாளிக்க அது பேருதவியாக அமைந்தது.

இலங்கையில் மின்சக்தியை உருவாக்க புதிய வழிமுறைகளை பின்பற்றியுள்ளோம். முதலாவது நிலக்கரி மின் உற்பத்தி நிலையம், முதலாவது வெப்ப மின் நிலையம், முதலாவது காற்றாலை மின் உற்பத்தி நிலையம், சமீபத்தில் முதலாவது திண்மக்கழிவு மின் உற்பத்தி நிலையத்தையும் திறந்தோம். தவிர, மின் கட்டணத்தை குறைத்து பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் - என்றார். (த-இ)



இன்றே அனுப்பிடுங்கள்
0777 68 00 77
Nestle
MILO
சூரர்களுக்கு
ரூ.10,000,000/-
பெறுமதியான பரிசுகள்
வாரத்திற்கு 1000 வெற்றியாளர்கள்
RELOAD
Step 1
MILO உடன் பிள்ளையின்
PHOTO ஒன்றினை
எடுத்திடுங்கள்
Step 2
PHOTO வில் பெயர், முகவரி,
தொ.பேசி இலக்கத்தினை குறிப்பிட்டு
0777680077 அல்லது
milosrilanka அல்லது
த.பெ. 189, கொழும்பிற்கு
அனுப்பிடுங்கள்.
போட்டி நிபந்தனைகளுக்கு உட்பட்டது    போட்டி காலம் பெப்ரவரி 01 முதல் ஏப்ரல் 15 வரை

வாடகைக்கு
மானிப்பாய் வீதி
உடுவில் மகளிர் கல்லூரிக்கு
அருகில் 10 அறைகள் கொண்ட
மேல்மாடி தளம்
(ஹோட்டல் நடத்த உகந்தது)
வாடகைக்கு உண்டு.
077 196 6297

# பெண்ணின் தலையைத் தேடி 8 அதிகாரிகள் குழு களத்தில்

**கொழும்பு,மார்ச் 7**

**கொழும்பு, டாம் வீதி, ஐந்துலாம்புச் சந்தி கருகில் முண்டமாக மீட்கப்பட்ட பெண்ணின் தலையைத் தேடி 8 அதிகாரிகளைக் கொண்ட சிறப்புக் குழுவினர், களனி கங்கையில் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**



இரத்தினபுரி - குருவிட்டையைச் சேர்ந்த திலினி யசேமா ஜயசூரியவின் உடல் கடந்த திங்கட்கிழமை சூட்கேஸ் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது.

குறித்த பெண் சிவனொளிபாத மலைக்குச் செல்கிறேன் என குடும்பத்தா ரிடம் கூறி, பயணப்பை ஒன்றைத் தன்னுடன் எடுத்து வந்துள்ளார். அந்தப் பை மீட்கப்பட வில்லை. அந்தப் பையில், அவரது தலையை வைத்து, சந்தேக நபர் களனி கங்கையில் வீசியிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதற்கமைவாக பொலிஸ் கடற்பிரிவின் 8 அதிகாரிகளைக் கொண்ட சிறப்புக் குழுவினர், இரண்டு விசேட படகுகளில் களனி கங்கையில் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணும், சந்தேகநபரும் ஒன்றாகத் தங்கியிருந்த ஹங்வெல்லை விடுதியை அண்டியதாக களனி கங்கை செல்கிறது. எனவே பெண்ணின் தலையைச் சந்தேகநபர் களனி கங்கையில் வீசியிருக்கலாம் என்ற கோணத்தில் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

அதேவேளை தலையற்ற சடலமாக மீட்கப்பட்டுள்ள 30 வயதுடைய திலினி யசேமா ஜயசூரிய என நம்பப்படும் சடலத்தின் மீதான பிரேத பரிசோதனைகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரியின் பொறுப்பில் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தின் ஆள் அடையாளத்தை, அறிவியல் ரீதியில் உறுதி செய்ய டி.என்.ஏ. பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. அதன் முடிவு கிடைக்கும் வரை பிரேத பரிசோதனைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக 3 பொலிஸ் குழுக்கள் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

# ஹிஜாஸ் விவகாரத்தில் அஹ்னாப் சந்தேகநபரல்ல

## சி.ஐ.டி. நீதிமன்றுக்கு அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 7

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணையில் கைது செய்யப்பட்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விவகாரத்தில், அஹ்னாப் ஜஸீம் என்ற இளைஞர் சந்தேக நபர் இல்லை என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு கோட்டை நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்தது.

நவரசம் என்ற கவிதைத் தொகுப்பு புத்தகத்தை எழுதியமைக்காக, அஹ்னாப் ஜஸீம் என்பவர் கைது செய்யப்பட்டு, நீண்டகாலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் தொடர்பான வழக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதிமன்றில் இந்த விடயம் தொடர்பில் விபரித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப் பீரிஸ், அஹ்னாப் ஜஸீம், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விவகாரத்தில் சந்தேக நபர் இல்லை என்று தெரிவித்தார். ஏற்கனவே அவரது பெயர் சந்தேக நபராக சில அறிக்கை களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக அறிக்கையில் அஹ்னாப் ஜஸீம் குறித்த வழக்கின் சந்தேக நபர் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அஹ்னாப் ஜஸீம் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் தடுப்புக் காவலின் கீழ் உள்ளார். கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்ற வழக்கில் அவர் விசாரணை செய்யப்பட்டு வருகிறார் என்றும் மன்றில் தெரிவித்தார். (க-இ)

# தாதியால் 31 பேருக்கு கொரோனா

பதுளை,மார்ச் 7

பதுளை பொது மருத்துவமனையில் பணியாற்றும் தாதியொருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானதையடுத்து அவர் மூலம் 31 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு நேற்றுத் தற்காலிகமாக மூடப்பட்டது.

புற்றுநோய் பிரிவில் மருத்துவர், தாதி, ஊழியர்கள், நோயாளிகள் மற்றும் நோயாளர்களைப் பராமரிப்பவர்கள் உள்ளடங்கலாக 31 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (க-இ)



# வர்த்தக நிலையக் கட்டடம் பிரதமரால் திறந்து வைப்பு

கொழும்பு, மார்ச் 7

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள நவீனமயப்படுத்தப்பட்ட வர்த்தக நிலைய வளாகம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்று முற்பகல் திறந்துவைக்கப்பட்டது.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை திட்டத்துக்கமைய உள்ளூர் உற்பத்தி பொருளாதாரத்துடன் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த வர்த்தக நிலைய வளாகம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ஐ.தே.க.– ஐ.ம.ச இணையாது

கொழும்பு,மார்ச் 7

மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து போட்டியிடும் என்ற தகவலை இரண்டு கட்சிகளும் மறுத்துள்ளன.

எமக்கிடையில் எவ்வித பேச்சும் இடம்பெறவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவும் தெரிவித்துள்ளனர். (க-இ)

# ஏப்.21 விசாரணை அறிக்கை புதன் மட்டும் விவாதத்துக்கு

கொழும்பு,மார்ச் 7

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தொடர்பான, நாடாளுமன்ற விவாதத்தை எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை மட்டும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான கட்சித் தலைவர்களின் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக ஆளும் கட்சியால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணையாக, விசாரணை அறிக்கை எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை விவா தத்துக்கு எடுக்கப்படும் என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார். (க-இ)

# அதிகாரத்தைத் தக்கவைக்க இனங்களை சீண்டும் அரசு

## முஜிபுர் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 7

ஆட்சிப் பீடத்தில் தங்களது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கு அரசு முயற்சிக்கின் றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்



சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் பொருளாதாரம், மக்களின் பொருளாதாரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான எந்தவொரு வேலைத்திட்டங்களும் அரசிடம் இல்லை.

சர்வதேசத்துடன் சுமுகமாகப் பயணிக்கக் கூடிய வாய்ப்புக்களை உருவாக்கவும் அரசு முயற்சிக்கவில்லை. ஆட்சியைப் பொறுப்பேற்று ஒரு வருடத்துக்குள்ளேயே அரசு அனைத்து விடயங்களிலும் தோல்வியடைந்துள்ளது. தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கிறது. சர்வதேசத்தின் மத்தியில் தொடர் நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்துள்ளது.

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் உள்ள போட்டியில் இலங்கை சிக்கியுள்ளது. ஆகக் குறைந்தது , இராஜதந்திர மட்டத்தில் எவ்வாறு அணுகுவது என்ற தெளிவு கூட இந்த அரசிடம் இல்லை. என்றார். (க-இ)

# 50 ஆண்டுகளாக திருத்தப்படாத வீதி

## மக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

சண்டிலிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக குடியேற்றத் திட்டத்துக்கு செல்லும் வீதி 50 வருடங்களுக்கு மேலாக சீரமைக்கப்படாமல் உள்ளது. மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் அந்த வீதி உள்ளது என்று வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் திருமதி.எஸ். இராஜகுமாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வீதியில் 25க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இந்த வீதி சீரமைக்கப்படாமையால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள், முக்கியமாக மாணவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார் பயணம் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினரால் தவிசாளரின் கவனத்துக்கு பலமுறை கொண்டுவரப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-115)

## கிராம அலுவலர் கொலை;

# சந்தேகநபரின் வங்கிக்கணக்கை பரிசோதிக்க நீதிமன்று உத்தரவு!

மன்னார், மார்ச் 7

மன்னாரில் கிராம அலுவலர் கொலையுண்ட சம்பவத்தில் கைதான சந்தேகநபரின் வங்கிக் கணக்குகளை பரிசோதிக்குமாறு நீதிமன்று பொலிஸாருக்குப் பணித்தது.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக அலுவலராகவும், இலுப்பைக்கடவை கிராம அலுவலகராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் எஸ். விஜேந்திரன் இனம் தெரியாத நபர்களால் கடந்த நவம்பர் மாதம் கொல்லப்பட்டிருந்தார்.

கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் அன்று தொடக்கம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டு விசாரணை தொடர்கின்றது. சந்தேகநபருக்கு எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ஜ-60)

## வனவளத் திணைக்களத்தினர்

# கிராம அலுவலருடன் சென்றே எல்லைக் கற்கள் நட முடியும்!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

**வவுனியா, மார்ச் 7**

**வவுனியாவில், பொதுமக்களின் காணிகளில் வனவளத் திணைக்களத்தினர் எல்லைக்கற்களை நடும்போது அந்தப் பகுதிக்குரிய கிராம அலுவலருடன் இணைந்து செயற்படவேண்டும் என்று வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. வரைபடத்தின் மூலம் எல்லையை அடையாளப்படுத்திவிட்டு அதன்பின்னரே எல்லை போடப்படவேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.**

இதுதவிர, கண்ணாட்டி கிராம பாடசாலை மூடப்பட்டுள்ளது. அதனை உடன் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வவுனியா தெற்கு கோட்டக்கல்வி அதிகாரி செல்வரட்னம், இவ்வாறான பிரச்சினைகளுக்கு காரணம் இந்தக் கிராமங்களில் உள்ள மாணவர்களை அந்தந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் சேர்க்காமையே. என்றார்.

இது தொடர்பாகக் கருத்துத்தெரிவித்த அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன், இனிவரும் காலங்களில் தரம் ஒன்றில் இணைய உள்ள மாணவர்களை அந்தந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளிலேயே இணைக்க வேண்டும். மாறாக வேறு பாடசாலைகளில் இணைப்பது நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் தனது கவனத்துக்கு கொண்டுவர வேண்டும் என்று தெரிவித்தார். கண்ணாட்டி பாடசாலையை வெகு விரைவில் மீளத் திறப்பதற்கான செயற்பாடுகளை உடன் எடுக்குமாறும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (த-110)



வரணி இயற்றாலை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அதிபர் த. ஸ்ரீமோகன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் மாணவர்களுக்கு பரிசில்களும், ஒரு தொகை நிதியும் வழங்கப்பட்டன. (ய-159)

# தென்மராட்சி விவசாயிகளின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாயம் மேற்கொள்ளப்படும் விவசாய நிலங்கள் மற்றும் விவசாயிகளின் விவரங்கள் கமநல சேவைகள் நிலையத்தால் அந்தந்த கமக்கார அமைப்புக்களின் அலுவலகங்களில் திரட்டப்பட்டு வருகின்றன.

தோட்டம் மற்றும் காலபோக நெற்செய்கை, அந்த வயல்களில் சிறுதானியப் பயிர்கள், விவசாயப் பயிர்கள் போன்றவற்றை பயிர் செய்யும் இடங்கள் ஆகியவை தொடர்பான விவரங்கள் திரட்டப்படுவதுடன் ஏக்கர் வரிப் பதிவுகளும் இடம்பெறவுள்ளன.

விவசாயிகள் கடந்த வருடம் ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, சந்தாப் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, குடும்ப அட்டையின் முன்பக்க பதிவுப் பிரதி, அல்லது குடும்ப அங்கத்தவரின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், பிறந்த திகதி அடங்கிய விபரம் மற்றும் விவசாய வங்கிப் புத்தகம் ஆகியவற்றுடன் வந்து படிவத்தைப் பூர்த்திசெய்து வழங்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கைதடி நாவற்குழி கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான பதிவுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை கைதடி நாவற்குழி ஸ்ரீமுருகன், சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் என கைதடி நாவற்குழி கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர். (வ-9)

# மரண விசாரணை அதிகாரியை உடன் நியமிக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 7

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் திடீர் மரண விசாரணை அதிகாரி இல்லாமையால் திடீர் இறப்புகள் சம்பவிக்கின்ற நேரங்களில் மக்கள் மிகுந்த சிரமத்துக்கும், அலைச்சலுக்கும் உள்ளாகின்றனர். 2020ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் திருமுறிகண்டி வட்டார பிரதேச சபை உறுப்பினருமான செ.பிரேமகாந் இது தொடர்பில் சுட்டிக்காட்டி கோரிக்கை விடுத்தும், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் இல்லாமையால், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பொது மருத்துவமனைகளில் சேவை யாற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரிகளால் விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-13)

# மணல் அகழ்வைத் தடுக்க கிராமங்களில் குழுக்கள்

## பளை பொலிஸார் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 7

பச்சிளைப்பள்ளி பிரதேசத்தில் இடம்பெறும் மணல் கொள்ளையைக் கட்டுப்படுத்த கிராமங்களில் குழுக்கள் அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வுகள் பச்சிளைப்பள்ளி பிரதேசத்தில் மிக மோசமாக இடம்பெற்று வருகின்றன. பொலிஸாரும் அதற்கு உடந்தையாக உள்ளனர் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுரேன் அண்மையில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் இணைத்தலைவரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்த அவர், பொலிஸார் கடும் சிரமத்துக்கு மத்தியில் கடமையாற்றி வருகின்றனர். பல்வேறு பகுதிகளில் மணல் கொள்ளைகளை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிராம ரீதியில் இதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொரோனா காரணமாக அவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது என்றார். எதிர்காலத்தில் இக் குழுக்களை சிறப்பாக அமைத்து மணல் கொள்ளை கட்டுப்படுத்தப்படும் - என்றார். (வ-6)

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் விவேகானந்த நகரில் இரு வீடுகள் உடன் வாடகைக்கு உண்டு. வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 711 1716, 076 860 4501

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ் நகர் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் உயர் தர சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ் காணும் வேலை ஆட்கள் தேவை...

1. தேநீர் தயாரிப்பாளர் (ஆண்)
2. உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
3. சுத்திகரிப்பாளர் (பெண்)

மேலதிக விபரங்களை நேரில் பேசி தீர்மானித்து கொள்ளலாம்

021 221 6779

## வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகஸ்தர் ஒருவருக்கு வீடு வாடகைக்குத் தேவை.

076 784 3993

## அறை வாடகைக்கு

யாழ் கோவில் வீதியில் ஆண்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.

077 640 8830

## மணமக்கள் தேவை

1990ஆம் ஆண்டு பிறந்த அரச தொழில் செய்யும் மணமகனுக்கும் 1995ம் ஆண்டு பிறந்த பட்டதாரி மணமகளுக்கும் மணமக்கள் தேவை.

தொடர்பு 077 233 6267

## காணி விற்பனைக்கு

நாவற்குழி கோவிற்பற்று கைதடி ஊரியான் புலத்தில் 18 பரப்பு 2.62 குளி காணி விற்பனைக்குண்டு

தொடர்பு 077 512 2246

## ஆயுர்வேத வைத்தியர் தேவை

பிரபல யாழ்ப்பான ஆயுர்வேத வைத்தியசாலையின் காலை நேர சேவைக்கு ஓய்வு பெற்ற ஆயுர்வேத ஆண்/பெண் வைத்தியர் தேவை

077 912 8944, 077 770 1465

## அலுவலக உதவியாளர் தேவை

யாழ் நகரில் வியாபார நிறுவன மொன்றிற்கு அலுவலக உதவியாளர் (பெண்) தேவை.
கணினி அறிவு அவசியம்.

077 968 2165
Email: patricprasath@gmail.com

## Mahindra Scorpio Single Cap 2011 / Disel விற்பனைக்கு

முதலாவது உரிமையாளர் 6000km 2500cc, Turbo புதிய Tyres Very good Condition மேலதிக விபரங்களுக்கு

077 778 1221

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.

AAA Gold Center

076 568 4346

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் K.K.S வீதி நாச்சிமார் கோவிலடியில் வீடு அலுவலக தேவைக்கு வாடகைக்கு விடப்படும்

தொடர்பு 077 724 0242

## பதவி வெற்றிடம்

### கணக்காளர்

- CA SriLanka ACCA மற்றும் CIMA கற்கைகளில் பகுதியளவு தேர்ச்சி அல்லது கணக்கீடு தொடர்பான கற்கை நெறிகளில் பொருத்தமான தேர்ச்சிகளை கொண்டிருத்தல்
- Microsoft office மற்றும் கணக்கீட்டு மென் பொருட்களில் சரளமான தேர்ச்சி.
- கணக்கீடு அல்லது அது சார்ந்த துறையில் 2 வருட அனுபவம்.
- தேர்வு செய்யப்படும் தகுதியான நபருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழுங்கப்படும். ஆங்கிலத்தில் சரளமான தேர்ச்சிக்கு முன்னுரிமை வழுங்கப்படும்.
- தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் jobvacanciesjfn@g-mail.com மூலம் கோரப்படுகின்றன.

மேலதிக தகவலுக்கு: 076 095 3655


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 – 07 – 1944

மறைவு 07 – 03 – 2020

### அமரர் செபஸ்தி புஸ்பராணி (புஸ்பம்)


சீரோங்கு வயவையுதித்து வளமோடு வாழ்ந்ததாயே!
பேரோங்கு புதுநகர்சேர் செபஸ்தி கரம்பற்றி நீரீன்ற
நேரோங்கு மக்களெமை தியாகத்தால் உயர்த்தி நீரே!
பாரோங்கு தலைநகரிலும் இறை. பிறர்பணி புரிந்தவேளை
வேரோங்கு பாச இதயத்தை பேரிடி தாக்கியதோ?
மாரேந்து கண்ணீருடன் ஓராண்டாய் கரைக்கின்றோம்.

சிரித்த வதனமும், அன்பும் அரவணைப்பு மெமக் கெட்டிடுமோ?
தனித்து நிற்கும் எமைத்தேற்ற உமையன்றி யார் வருவார்
புலத்திலும் களத்திலும் வாழ் பிள்ளைகள் உம் நினைவேந்தி
குவித்த கரங்களுடன் செபிக்கின்றோம் ஆன்மா அமைதிபெற

மல்லிகைத்தீவு புதுக்குடியிருப்பு

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 06 . 1949

மறைவு 04 . 03 . 2021

### திரு. சரவணமுத்து சுந்தரலிங்கம்

யாழ். புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுந்தரலிங்கம் கடந்த 04.03.2021 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோஜாதேவியின் அன்புக் கணவரும், சுதாகர், துவாரகா, சுயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜேசி, முரளி ஆகியோரின் பாசமிகு மாமனும், அயன், அனுஜ், எலேனா ஆகியோரின் பாசமிகு பேரனும், கனகலிங்கம், தையல்நாயகி (கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பலீலாவதி, முத்துலிங்கம், சரஸ்வதி, சந்திரலட்சுமி, யமுனன், யோகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோமசுந்தரம் (விசுவப்பா), பேரம்பலம், லிங்கேஸ்வரி, சசிகலா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியிலிருந்து 7.00 மணிவரை (கனடா நேரம்) நடைபெறும். (Lanka Sri நேரலை நாளை (08.03.2021) திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணி - 5.30 மணிவரை)

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சு.சரோஜாதேவி (மனைவி - 289 554 6465)
சு.சுதாகர் (மகன் - 416 953 6463)
சு.துவாரகா (மகள் - 647 831 6465)

தகவல்:
ச.கனகலிங்கம் (சகோதரன்)
16, கருவேப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
021 221 2302

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உதிப்பு 20 . 12 . 1935

உதிர்வு 07 . 03 . 2002

### சின்னத்தம்பி பாலசுந்தரம்

திதி: நவமி [07.03.2021]

அன்பின் அப்பாவே!
அழியாத ஓவியமே
ஆண்டுகள் பத்தொன்பது
ஆகியதோ எமை நீர் பிரிந்து

அன்பினால் எம்மை அரவணைத்து
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்

சங்கம் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## வேலையாட்கள் தேவை

கைதடியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர் பாசல் கட்டுபவர் தேவை.
தங்குமிட வசதி உண்டு.

**T.P : 077 322 5454**

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் உள்ள வீடு ஒன்றில் வீட்டு வேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை.

**T.P 076 317 6146**

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளும் அடங்கிய 04 அறைகள். 02 Bathroom அடங்கிய கீழ்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
கோவில்கள். பல்கலைக்கழகம். கடைகள். திருமணமண்டபம் மிக அருகில் உண்டு.

**தொடர்பு : விஜயன் -076 2499979**
**வதனி -076 970 2532**

## காணி விற்பனைக்கு

கோப்பாய் பருத்தித்துறை வீதியில் நாவலர் பாடசாலைக்கு மேற்காக நிலப்பரப்பு 10 குளி 15.79 வீட்டுடன் விற்பனைக்கு உள்ளது. தரகர் தலையீடு வேண்டாம். விபரங்களுக்குக் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் பிற்பகல் 3.00 மணிக்கும் 6.00 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளவும்

**0447 447 900 636, 076 321 1889**

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊரவேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## வெள்ளவத்தையில் தொடர்மாடி வீடு விற்பனைக்கு

இரண்டு அறை, இரண்டு குளியலறை. கொண்ட முற்றிலும் குளிரூட்டப்பட்ட வீடு விற்பனைக்கு. விலை 17.5 மில்லியன். விலை பேசித் தீர்மானிக்கலாம்.

**தொடர்பு :077 264 7426**

## வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ் தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல 8 புகையிரத வீதி. வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள். இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள். கிழமை. மாத வாடகைக்குண்டு.

**தொடர்பு 011 250 4281, 076 663 7572**
**077 305 8102**

## மணமகள் தேவை

யாழ் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979ஆம் ஆண்டு பிறந்த R.C மதத்தைச் சேர்ந்த சூரிய செவ்வாய் 2 1/2 கிரக பாவம் உள்ள மண மகனிற்கு 18ற்கு குறைந்த கிரக பாவமுடைய சூரியச் செவ்வாயுள்ள மணமகள் தேவை.
தரகரும் தொடர்பு கொள்ளலாம்.

**077 417 5675**

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு திறமையும், அனுபவமும் உடைய வேலைத்தளத்தை முகாமை செய்யக்கூடிய திறனுடைய தொழிநுட்ப வியலாளர் (T.O-Civil) தேவை.

**தொடர்புக்கு: 077 985 1946, 077 592 5371**
**e-mail: jenoshanark@gmail.com**

## வேலை வாய்ப்பு

பருத்தித்துறை கற்கோவளத்தில் இயங்கி வரும் நிறுவனம் ஒன்றிற்கு பெண் கணக்காளர் [Accountant] கணனி அறிவு விரும்பத்தக்கது.
மற்றும் கனரக வாகன சாரதி [Driver] -Excavator ஒருவர் தேவை.

**தொடர்புகளுக்கு- 0775006769**

## வீடு வாடகைக்கு

யாழ் நகருக்கு மிக அண்மிய சூழலில் வண்ணார்பண்ணை வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. 3 படுக்கை அறைகள் 2Hall Bathroom மாத வாடகை 20,000/= ஒரு வருட முற்பணம் தேவை. வாகன தரிப்பிட வசதி உண்டு.
(தரகர்கள் தேவையில்லை)
(Store ஆகவும் பயன்படுத்தலாம்)

**077 931 1889, 076 883 3713**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ஆம் ஆண்டு பிறந்த, உத்தர நட்சத்திரம் (சிங்கராசி), 12இல் செவ்வாய், 44 கிரகபாவம் உள்ள Engineer மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

**T.P No: 077 195 3459**
**(பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்)**

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் **கைத்தொலைபேசி நிறுவனமொன்றிற்கு விற்பனைப் பிரதிநிதிகள்** தேவை.
சம்பளம்: 20,000 - 40,000
தகைமை : O/L, AL
தொடர்பு: 077 361 1282
077 087 7723

## முதலீட்டாளர்கள் தேவை

வடகிழக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் தனியார் நிறுவனமொன்றிற்கு முதலீட்டாளர்கள் தேவை.

**077 844 4518**

## வேலையாட்கள் தேவை

**சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை**

1. சப்பிளையர் (உணவு பரிமாறுபவர்கள்)
2. பொதியிடுவோர்
3. சமையல் உதவியாளர்கள்
4. தோசை போடுபவர்கள்
5. பில் கிளாக்
6. காசாளர் (தங்கி நிற்க கூடியவர்கள்)
7. கணக்காளர் (காலை 8 - மணி தொடக்கம் 7 மணி வரை 35 வயது - 50 வயது வரை)
8. சுத்திகரிப்பாளர்
9. இடியப்பம் போடுபவர் (ஆண்/பெண் இருபாலாரும்)
10. மரக்கறி வெட்டுபவர்

**தொடர்பு:**
**பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.**
**077 791 7753, 021 222 2373**

# ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் திருமதி**
## கமலாதேவி முத்துலிங்கம்
**(ஓய்வுபெற்ற உப அதிபர்**
**கிளி / இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை)**

**திதி 07.03.2021**

அன்பின் பிறப்பிடமாய் அறிவுக்கு ஆசானாய் ஆறுதலுக்கு ஆலமரமாய் வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்து ஆண்டொன்று கடந்ததே! எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தோற்றம் 30.03.1945 மறைவு 17.02.2020

**குடும்பத்தினர்,**
**இல 359, இராமநாதபுரம்,**
**கிளிநொச்சி.**

# முதலாம் ஆண்டு நினைவு நாள்



பிறப்பு 10-11-1937 இறப்பு 07-03-2020

## அமரர் திருமதி மேரி அஞ்சலா நடராஜா (சோதி)

**அம்மா ..... எம் அம்மா!**

அற்புதமும் அதிசயமும் கலந்த நிபந்தனை அற்ற தூய அன்பிற்கும், கள்ளமில்லாக் கண்ணியம் நிறைந்த பண்பிற்கும் எதிர்பார்ப்பற்ற வரையறையில்லா பாசத்திற்கும் சொந்தக்காரி........

(எம் அம்மா!)

ஆன்மீகத்தில் அளவில்லா நம்பிக்கையும், இறையன்பில் ஈடு இணையற்ற விசுவாசமும் தார்மீகத்தில் சற்றும் தளராத பற்றுறுதியும் கொண்ட சிறந்த விசுவாசியாய்த் திகழ்ந்தவர் ......

(எம் அம்மா!)

இளம் வயதினில் இல்லத்தலைவனை இழந்து வலி சுமந்து நின்று, பல இடர் பட்ட போதிலும் திடம் கொண்ட பெண்ணாய் வாழ்வுடனே போராடி வையகத்தில் நாம் தலைநிமிர்ந்து வாழ வழிபடைத்தவர்

(எம் அம்மா!)

ஈன்ற தன் சேய்கள் அறுவரையும் அன்புடனே அரவணைத்து நற்பண் போடும் அறிவோடும் ஆற்றல் மிகு நெறி தவறாப் புதல்வர்களாய், புதல்வியாய் ஒரு கோட்டில் என்றும் ஒன்றாய் இணைந்தே பயணிக்கக் கற்பித்தவர்

(எம் அம்மா!)

உற்றாரும் உறவினரும், பெற்றோரும் பெரியோரும் பாசமுடன் நேசமாய்க் கனிவுடனே சோதி என்றழைத்திட சோதியைச் சோதித்த சோதனைகள் யாவையும் ஜோதியாய் எரித்து ஜொலித்தவர்...

(எம் அம்மா!)

ஊரோடும், உலகத்து உறவோடும் ஒன்றாக மகிழ்ந்தே உறவாடி இன்பத்திலும் துன்பத்திலும் தோள் கொடுக்கும் தோழியாய்த் துணை நின்று பிறர் மனம், பலவென்று இம்மண்ணில் நீங்காத நினைவில் நிற்பவர்

(எம் அம்மா!)

எண்பத்து மூன்று அகவைகள் கண்ட போதும், புதிராய்ப் புன்னகைகளுடன் பூரிப்பாய் வலம் வந்த வேளையிலே நோய் என்னும் பேய் வந்து வதைத்திட்ட போதும் வதையின் வலியோடும் வலிமை காட்டியவர்.

(எம் அம்மா!)

ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும் அழுதாலும் இனி எம் தாய் போல் ஓர்பிறவி தான் வருமோ? எமக்குத் தான் வாய்க்குமோ? தவிக்கின்றோம் அம்மா, உங்கள் மலர் முகம் காண தரிசனம் தர மாட்டீரோ? அம்மா; ஏக்கத்துடன் தேடுகின்றோம்.

(எம். அம்மா!)

ஒரு வீட்டுக்கிளியாக எண்மரில் ஒருவராய், மாகிரட் வலோரியின் வாரிசாய் வழித்தோன்றி; நடராஜாவின் ராணியாக வளமுடனே வாழ்ந்திருக்க காலனவன் உம்மை கவர்ந்தது தான் ஏனோ பதிலின்றிக் கலங்குகின்றோம்.....

(எம் அம்மா!)

ஓராண்டு என்ன? ஓராயிரம் ஆண்டுகள் வந்து மறைந்தாலும் மறக்குமா? எம் நெஞ்சம்; எங்கள் கண்ணீரைக் காணிக்கையாக்கி, கனத்த இதயத்துடன் உங்கள் ஆன்மா இறைவன் திருவடியில் என்றும் இன்புற்று இளைப்பாற, அனுதினமும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**இல. 37, ஐந்தாம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்**
**071 259 8858**

**அன்பான**
**உங்கள் பிள்ளைகள்.**

### திருமண சேவை

விசேடமாக கிறிஸ்தவ ஆவிக்குரிய சபைகளுக்காக உருவாக்கப்பட்ட திருமண இணைத்தளம்
www.kirubaimatrimony.com
பதிவுகள் இலவசம்.
தொடர்பு: 011 773 2288, 076 197 2285

### வகுப்புகள்

தரம் 6 - 11 வரையான வகுப்புகளுக்கு விஞ்ஞானம்/ கணிதம் ஆகிய பாடங்கள் (தமிழ்/ஆங்கிலம்) மொழி மூலம் தனியாகவோ, குழுக்களாகவோ கற்பிக்கப்படும்
தொடர்புகளிற்கு: 077 639 1935

### மணமகன் தேவை

யாழ் இந்து உயர்கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய் தோஷமற்ற 26 வயது மணமகளுக்கு Doctor மணமகன் தேவை.
076 021 1249

### காணி விற்பனைக்கு

அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலிற்கு அண்மையாக பிரதான வீதியில் வீடு கட்ட உகந்த 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. அத்துடன் தோட்டக்காணிகளும் விற்பனைக்குண்டு.
077 727 1249


## மரண அறிவித்தல்

மண்ணில்
04 - 11 - 1992



விண்ணில்
24 - 02 - 2021

### அருள்நாதன் அன்னலிங்கம்

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், லண்டன் Uxbridge ஐ வதிவிடமாகவும் கொண்ட அருள்நாதன் அன்னலிங்கம் அவர்கள் 24-02-2021 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற அன்னலிங்கம், மல்லிகாதேவி தம்பதிகளின் அன்பு மகனும், சிதம்பரநாதன் வரதா தம்பதிகளின் அன்பு மருமகனும், சிந்துஷா (ருபிகா) அவர்களின் அன்புக் கணவரும், குருநாதன் (இலங்கை), கிருஷ்ணகுமாரி (இலங்கை), இராசலட்சுமி (இலங்கை), விஜயலட்சுமி (கனடா), ஜெயலட்சுமி (லண்டன்), சந்தானலட்சுமி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வெள்ளியம்பலம் (இலங்கை), ஜீவகுமார் (இலங்கை), சிமிதா (இலங்கை), கிருபாகரன் (இலங்கை), கதிர்நிலவன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகேஸ்வரி (இலங்கை), கிருஸ்ணகுமரன் (இலங்கை), காலஞ்சென்ற நவரத்தினம் (இலங்கை), ஸ்ரீதரன் (கனடா), சுந்தரம் (லண்டன்), நேசன் (இலங்கை) ஆகியோரின் அன்புமிகு மைத்துனரும், ரிசனி (இலங்கை), ரோகமலர் (இலங்கை), லோகேஸ் (கட்டார்) ஆகியோரின் அன்புச் சகலரும், பவிதா, அன்னம், கிரு, குட்டி, குலமணி, லோகிதா, லோகதாஸ் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், ரஜீ, தர்சினி, தயானி (பிரான்ஸ்), சஜி, லோஜி, நவநீதன், சோனியா, சதுசன், சதுசிகா, கவிசன் (கனடா), சஜிவனா, சரோன், பவிந்தனா (லண்டன்), சஞ்சிகா, சயந்தன், சறுமிகா, டர்சினி, திவகுமார், கிசோத், கஸ்மிகா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரம் 10.00 -12.00 மணிக்கும் இலங்கை நேரம் 3.00 - 5.30 மணிக்கும் நடைபெறும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
14 - 08 - 1946



மறைவு
03 - 02 - 2021

எமது குடும்பத்தலைவி

அமரர்

### சுப்பிரமணியம் பிள்ளையம்மா

கடந்த 03.02.2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி அமரர் சுப்பிரமணியம் பிள்ளையம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

70, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
077 201 8275,
077 711 0199

சந்நிதி முருகன்,
வேக்சொப் அன்ட் சேவிஸ்,
(Work Shop &Service)
(மகன்)


# அறிமுகமாகின்றது.......

The Next generation
EVRO RO System

## உலகத் தரம் வாய்ந்த EVRO® நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

Best forever.....




நீங்கள் அருந்தும் நீரில் அடங்கியுள்ள மேலதிக கல்சியம், மக்னீசியம், மாசுக்கள் மற்றும் கொடிய நோய் தொற்றுக் கிருமிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள EVRO® நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை இன்றே பொருத்திப் பயன் பெறுங்கள்.

ASIA SUPER HEALTH BRAND

FREE
1 Installation
2 Service & Maintenance
3 Warranty

இறக்குமதி செய்து விநியோகிப்போர் : நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியும், சுற்றாடல் அதிகார சபையினால் அங்கிகரிக்கப்பட்டதுமான

Everpure Hi-Tec (Pvt) Ltd.
Professional in Total Water Management

**JAFFNA**
NO.581, K.K.S ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 6888

**KILINOCHCHI**
NO.677, A9 ROAD, KARADIPOKKU JUNCTION, KILINOCHCHI.
TEL : 021 228 4888 HOTLINE : 077 844 7280

**VAVUNIYA**
NO.65, VAIRAVAKOVIL ROAD, VAIRAVAPULIYANKULAM, VAVUNIYA.
TEL : 024 222 6008 HOTLINE: 075 331 3303

HOTLINE : 075 331 3310

## மேலும் 7 ஜனாஸாக்கள் அடக்கம்

கொழும்பு, மார்ச் 7

கொரோனா வைரஸால் உயிரிழந்த மேலும் 7 ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டன.



ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மஜ்மா நகரில் கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஜனாஸாக்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக் கட்டணம் யாவும் இலவசம்**
மணமகள்மாருக்கு மட்டும்
(07.03.2021 இலிருந்து 11.03.2021 வரை)
நீங்கள் விரும்பும் உள்நாட்டு/வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்

**077 138 7596, 021 222 9306**
**இல 5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகரப் பகுதிக்குள் மேல் தளம் வாடகைக்கு உண்டு
சிறிய குடும்பத்தினர் விரும்பத்தக்கது.

**தொடர்பு 076 396 7262**

## வேலையாள் தேவை

எமது வியாபார நிலையத்துக்கு வேலையாள் தேவை. (ஆண், பெண்) இருபாலாரும் விரும்பத்தக்கது மற்றும் வாகனத்தில் சென்று பொருள் விநியோகம் செய்யக்கூடிய Delivery Boys தேவை.

**முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.**

**தொடர்பு: 077 445 7929**

## மணமகன் தேவை

1982 இல் பிறந்த றோமன் கத்தோலிக் கத்தைச் சேர்ந்த வைத்தியராக பணிபுரியும் பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கிறார்கள்.

**தொடர்பு: 071 084 5364**

## வீடு வாடகைக்கு

கோவில் வீதி யாழ்ப்பாணத்தில் தளபாடங்கள் A/C யுடன் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள், உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 514 4700**

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கும் தனியார் பாசல் சேவை நிறுவனத்திற்கு பொதி செய்பவர், காசாளர், எழுதுவினைஞர் உடன் தேவை.
(தங்குமிடம், உணவு இலவசம்)

**தொடர்பு: 077 386 6250**

## வேலையாட்கள் தேவை

மிக்சர் கம்பனி ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. (ஆண்,பெண் இருபாலாரும்)
சேல்ஸ் அனுபவமுள்ள சாரதி தேவை.

**077 546 0028**

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கிநின்று வீட்டு வேலை செய்யக்கூடிய 35-55 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை

**தொடர்பு: 077 991 4945**

## பெண் சுத்திகரிப்பாளர் தேவை (Female Cleaner)

GET
Professional Skills Development Center Jaffna.

திருநெல்வேலியில் இயங்கிவரும் மேற்படி நிறுவனத்திற்கு பெண் சுத்திகரிப்பாளர் தேவை

1. வயதெல்லை : 25 - 50
2. வேலைநேரம் : 8.00am - 5.00pm
3. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொலைபேசி : 076 232 5603**
**விலாசம் : Center Manager**
**Gnanam Education Trust**
**No 50/8, Sivaraja Lane, Thirunelvali, Jaffna.**

## மரண அறிவித்தல்

### திருமதி கிறேஸ் அன்புமலர் அல்பிரட்

(பொன்னையா மிஸ் - இளைப்பாறிய தாதி உத்தியோகத்தர், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை)



காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறேஸ் அன்புமலர் டான் ஜெயரட்ணம் அல்பிரட் (பொன்னையா மிஸ் - இளைப்பாறிய தாதி உத்தியோகத்தர், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை) அவர்கள் நேற்றுமுன்தினம் (05.03.2021) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி யோசப் பொன்னையா (பொன்னையா மாஸ்டர் - பண்டத்தரிப்பு), எஸ்தர் சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற டான் ஜெயரட்ணம் அல்பிரட் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அரியரட்ணம், அரியமலர் (மலேசியா), செல்வரட்ணம் மற்றும் கிருபைமலர், அற்புதமலர், ஆனந்தமலர் , ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கிருபைவாசம் அல்லின் வீதி, காரைநகரில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அல்லின் வீதி,**
**காரைநகர்.**

**தகவல்:**
**கு.குலரஞ்சன் (பெறாமன்)**
**077 711 0060**

## பொதி செய்யும் பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உற்பத்தி நிலையம் ஒன்றுக்கு பொதிசெய்யும் பெண் பணியாளர்கள் தேவை.

**தொடர்பு: 077 991 4945**

## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை. நிரந்தரமான வேலையும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும். தங்குமிட வசதியும் உண்டு.

1. வாகன சாரதி
2. பெயின்ரர் (மரத்தளபாடம்)
3. காசாளர்
4. வேலை பழக விரும்புபவர்கள்

**தொடர்பு: ஆர்க் தளபாட நிலையம்**
**(பஸ் டிப்போ அருகாமையில்)**
**இல.35, கொட்டைகாடு லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்**
**T.P: 021 221 9909, 077 300 1763**

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 03 1963



மறைவு 06 03 2021

### திரு. சிதம்பரநாதன் இரகுநாதன்

(விமான பராமரிப்பு பொறியியலாளர்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் 22/3, முதலிகோயில் வீதி, கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் இரகுநாதன் நேற்று (06.03.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதன் - அல்லியம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தரணிகாவின் அன்புத் தந்தையும், ரஜனி (ஜேர்மனி) றஞ்சினி (ஜேர்மனி), றமேஸ்நாதன் (தொழிநுட்ப உத்தியோகத்தர் - mary Construction), றாஜனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிறேம்குமார் (ஜேர்மனி), சுவேந்திரன் (ஜேர்மனி), றோகினி, சிவசோதிலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருவூலனின் பெரியதந்தையும், சுரேன், சுதன் (ஜேர்மனி), ஹாஸ்னா, பிரசான், பபிகேஷன் (லண்டன்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**சு.றமேஸ்நாதன்**
**இல.22/3, முதலிகோயில் 2 ஆம் ஒழுங்கை,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு) (2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட காணி 14 அடி பாதையுடன்) பருத்தித்துறை வீதியில் இருந்து 40m நடைதூரம். விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (தரகர் தேவையில்லை)


**077 596 3845, 076 640 0974**

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருட்களை கடைகளுக்கு விநியோகம் செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதி (Sales Rep) அனுபவமுள்ள ஆண் உடன் தேவை.
(light Vehiles) சாரதி அனுமதிப்பத்திரம் உடைய வாகனம் செலுத்தக்கூடியவர் விரும்பத்தக்கது.
(சம்பளம் உணவு மேலதிக கொடுப்பனவுகள் பேசித்தீர்மானிக்கப்படும்)

**077 416 9026**

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 10.03.1963 இறப்பு 06.03.2021

எமது நிறுவனத்தில் பணிபுரியும்
**சி.ரமேஸ்நாதன்**
(பணிப்பாளர், மேரி கொன்ஸ்ரக்ஸன் & A-Z நிர்மாண உபகரணங்கள் வாடகை சேவை நிறுவனம்)
அவர்களின் சகோதரன்

### சிதம்பரநாதன் ரகுநாதன்

(விமான பராமரிப்பு பொறியியலாளர் Eng AME)
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவில் பங்குகொள்ளும்**
**Mary Construction & A-Z நிறுவன ஊழியர்கள், உரிமையாளர்கள்**

# கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள வீடொன்றுக்கு பெற்றோல் குண்டுவீச்சு



யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது நேற்று இரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆறு பேர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர் என்று வீட்டில் இருந்தோர் குற்றஞ் சாட்டுகின்றனர். தாக்குதல் தொடர்பில் பொலிஸாருக்கு உடன் அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வருகைதந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோரும் சம்பவ இடத்துக்குச் சென்று விவரங்களைக் கேட்டறிந்தனர். (ம-319,320)

## பணியாளர் தேவை

குருசோ வீதியில் (சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகில்) இயங்கிவரும் புடைவை விற்பனை நிலையம் ஒன்றிற்கு பெண் பணியாளர் தேவை.

**077 117 4954**

# மல்லிகைத்தீவை கைவிட்டு மாற்று இடங்களைத் தேடவும்

## நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 7

மல்லிகைத்தீவு கிராமத்தில் 3 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டமையால், நிலக்கீழ் நீர் வெகுவாக பாதிப்படைகின்றது என்று கூறும் கிராமத்தவர்கள், அதற்குத் தீர்வு கோரி வரும் நிலையில், இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஜெயகாந்தன், முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கிருபாசுதன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் ஆ.தவக்குமார், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ஆ.புவனேஸ்வ ரன் மற்றும் து.ரவிகரன் ஆகியோரின் பங்கேற்புடன் கூட்டம் நடைபெற்றது.


குறித்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், மக்கள் பிரதிநிதிகளுக்கும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினருக்கும் இடையே ஒருமித்த சமரசத்தன்மை இன்மையால், இறுதியில் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் நடவடிக்கையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், தமது கிராமத்தில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறு களிலிருந்து தண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியாது எனவும் தண்ணீரைப் பெற்றுக்கொள்ள மாற்று வழியைத் தேடுமாறும் மக்கள் பிரதிநிதிகள் உறுதியாகத் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியிலுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க மக்கள் தரப்பினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றமையால், மாற்று வழியூடாக தண்ணீரைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு தெரிவிக்கப்பட்டது. அதற்கான நிதிகளைப் பெற்றுக் கொள்ள உரிய அமைச்சர்களுடன் பேசி நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மல்லிகைத்தீவு கிராமத்தில் 2018 ஆம் ஆண்டு உலக வங்கியின் நிதிப் பங்களிப்புடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட நான்கு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்காக குடிதண்ணீர் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் 3 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன. அதற்கு 2018 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

## மரண அறிவித்தல்

### அருளம்பலம் குணசிங்கம்



**தோற்றம்** 10.04.1947 **மறைவு** 03.03.2021

புங்குடுதீவு 5ம் வட்டாரம் இறுப்பிட்டியை பிறப்பிடமாகவும் 12ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய அருளம்பலம் குணசிங்கம் அவர்கள் (03.03.2021) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபாபதி தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், மதி, சசி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரத்தினம் (ஜேர்மனி) காலஞ்சென்ற பரமலிங்கம், சொர்ணலிங்கம் (யாழ்ப்பாணம்), மகாலிங்கம் (யாழ்ப்பாணம்), அமுதலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், குலநாயகம், கணேசன், நகுலன், யோகலிங்கம், கனகம்மா, சொர்ணம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**19/37, பிறவுண் வீதி,**
**2ம் ஒழுங்கை, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: சகோதரர்கள்**
**சொர்ணலிங்கம்,**
**மகாலிங்கம்**
**மகான் - 077 1690 599 (சகோதரர்)**

# இராணுவத்தினர் கையகப்படுத்திய 30 ஏக்கரை விடுவிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 7

கிளிநொச்சியின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட 'முகவில்' கிராம அலுவலர் பிரிவின் 'பீ' பற்று பகுதியில் 16 குடும்பங்களுக்குச் சொந்தமான 36 ஏக்கர் காணிகளை இராணுவம் பிடித்து வைத்திருக்கின்றது. இந்தக் காணிகளை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், இந்தத் தீர்மானத்தை சபையில் கொண்டுவரும்போது ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, இத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் தற்போது பயன் இல்லை. அது தொடர்பில் கலந்துரையாடிய பின்னர் தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று தெரிவித்தார். ஜனாதிபதி இது தொடர்பாக நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

எனினும், விடாப்பிடியாக நின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன் மற்றும் கஜேந்திரன் பச்சிலைப்பள்ளி தவிசாளர் சு.சுரேன் ஆகியோர் குறித்த தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தியதால், குறித்த தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. (த-6)

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை சின்னம்மா

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் பால்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சின்னம்மா நேற்று (06.03.2021) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், தவராசா, மகேந்திரன், யோகராணி, விஜேந்தி, விஜயராணி, காலஞ்சென்ற தங்கராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திராணி, கணேஷலிங்கம் (சாளினி வெல்டிங் வேக்ஸ் சொப்), சற்குணநாதன், கருணாகரன், காலஞ்சென்ற முத்தம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும், மதி, சண்ணா, வினோ, கோபி, கோகிலா, தஜீவன், ரமேசன், அஜந்தன், சாலினி, அஜித், ரூபன், தீபா, நிஷாந்தன், ரஜீவன், ரஞ்சித், றம்மியா, நேரியா, சஞ்சீவன், மாலினி, மாறுதி, சாலமோன், அபி, அனா, ஏஞ்சல் ஆகியோரின் பேர்த்தியும், பூட்டியும், கொப்பாட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு (29, பால்பண்ணை வீதி, திருநெல்வேலி) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அவரின் உடல் கல்வாரி தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**29, பால்பண்ணை வீதி, திருநெல்வேலி.**

**தகவல் : குடும்பத்தினர்**

**தொடர்புக்கு: 077 9120 422, 077 3454 865**

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு : 06.03.2011

அமரர்

### எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - உடுவில்)

*பாசம் நிறைந்தவரே உள்ளத்தால் உயர்ந்தவரே - அப்பா*
*வாழ்நாளெல்லாம் எமக்காகவே வாழ்ந்தீர்கள்*
*உறவுகளை அன்புடன் அரவணைத்துக் கொண்டீர்கள்*
*கடமைகள் அனைத்தையுமே மனமுவந்து செய்தீர்கள்*
*உங்கள் பிரிவில் நித்தம் ஏங்கித் தவிக்கின்றோம்.*
*எங்கள் இதயவலி ஆண்டவனே அறிவான்.*

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வெளியான புதிய...

இலங்கை குறித்த தீர்மானத்தின் புதுப்பிக்கப்பட்ட வரைவு எதிர்கால விசாரணைகளில் பயன்படுத்துவதற்காக மனித உரிமைகள் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் குறித்த ஆதாரங்களைச் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என்று நம்பகத்தன்மைமிக்க விதத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கை அதிகாரிகளுக்கு எதிராகப் பயணத் தடைகள், போக்குவரத்துத் தடைகள் போன்றவற்றை விதிக்குமாறும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்த பரிந்துரைகள் குறித்து புதுப்பிக்கப்பட்ட வரைவு எதனையும் குறிப்பிடவில்லை.

இலங்கையில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அதிகளவுக்கு ஓரங்கட்டப்படுவது, சிவில் சமூகத்தினர் கண்காணிக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது, ஊடக சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள், போரால் உயிரிழந்தவர்களைப் பொது மக்கள் நினைவுகூருவது மீதான கட்டுப்பாடுகள் மற்றும் நினைவுத் தூபிகள் அழிக்கப்படுதல் குறித்த கரிசனைகள் ஆகியவைவும் புதிதாக இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணையகம், காணாமல் போனவர்கள் குறித்த அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவை வலுவான விதத்திலும் சுதந்திரமாகவும் செயற்படுவதை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும் என்ற விடயமும் புதுப்பிக்கப்பட்ட வரைவில் இடம்பெற்றுள்ளது. (மஓ.22)

## இலங்கை...

அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இயங்கும் பாரதிய ஜனதாக் கட்சி இலங்கையிலும், நேபாளத்திலும் ஆட்சியமைக்க விரும்புகின்றது என்ற தகவல் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வெளியாகி பெரும் பரபரப்பையும், அரசியல் அரங்கில் சர்ச்சையையும் ஏற்படுத்தியிருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு கட்சியின் தலைவர் வி.முத்துசாமியால் வெளியிடப்பட்டது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை பாரதிய ஜனதாக்கட்சி அரசியலை முன்னிலைப்படுத்தாது. அரசியலுக்குத் தமிழ் பேசும் மக்களைத் தயார்படுத்தும் அல்லது பக்குவப்படுத்தும் செயற்பாடுகளையே முன்னெடுக்கும். கட்சியின் தலைவராக வர்த்தகர் வி.முத்துசாமியும், செயலாளராக ஊடகவியலாளர் எம்.இந்திரஜித்தும் நிதிச் செய லாளராக வர்த்தகத்துறையைச் சேர்ந்த வீ.திலானும் செயற்படுவார்கள்.

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி மக்களுக்கு வசதி வாய்ப்புக்களுக்கான வாக்குறுதிகளை வழங்காமல் தமிழ் மக்களுக்கான கல்வி, ஆங்கிலக் கல்வி, வருமான ஊக்குவிப்பு, விளையாட்டு மற்றும் கலாசார மேம்பாட்டுத் திட்டங்களில் அக்கறை காட்டிச் செயற்படவுள்ளது. இலங்கை பாரதிய ஜனதாக் கட்சியின் சேவை ஒரு மதத்துக்கான சேவையாக இருக்காது. அனைத்து இனங்களிலும் புறந்தள்ளப்பட்டவர் களை சமூகத்தில் உயர்த்தும் கட்சியாகச் செயற்படும், என்றார்.

ஊடகவியலாளர்களின் கேள்விக்கு இந்தச் சந்திப்பில் பதிலளித்த கட்சித் தலைவர், எமது கட்சிக்கும், இந்திய பாரதிய ஜனதாக் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எமது கட்சி ஆறு மாதங்களுக்கு முதலே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்திய பாரதிய ஜனதாக் கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளது என ஊடகங்களில் செய்தி வெளியானமையால் எமது கட்சியைச் சேர்ந்த ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் கட்சியின் தொடர்பை துண்டித்துக்கொண்டுள்ளனர். பாரதிய ஜனதா என்ற சொல்லுக்கு என்ன அர்த்தமென்றே தெரியாது. பெயர் நன்றாக இருந்தது. அதனால் தான் அந்தச் சொல்லை பயன்படுத்தினோம். அந்தச் சொல் எந்த மொழிக்குரியது என்றுகூட எமக்குத் தெரியாது, என்றார். (மஓ,22)

## எவர்...

வித்துள்ளார்.

அவரது அமைச்சில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

நல்லாட்சி அரசு இந்த விடயங்களில் இலங்கையைப் பாதுகாக்கத் தவறிய காரணத்தால் நாம் முன்னின்று போராட வேண்டிய நிலைமை உருவாகியது. ஆனால் இப்போது எமது அரசு எதனைச் செய்ய வேண்டுமோ அதனை மிகச்சரியாக செய்து வருகின்றது.

இலங்கையின் நிலைப்பாடு என்ன என்பதையும், நாம் எவ்வாறான நடவடிக்கைகளை கையாள்வோம் என்பதையும், எமது நோக்கம் என்ன என்பதையும் வெளிவிவகார அமைச்சர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

எம்மைப் பொறுத்தவரை மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் முன்வைத்த அறிக்கை பொய்களால் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையாகும். இந்த அறிக்கையை நாம் எந்தக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

பிரேரணையை நாம் நிராகரிக்கின்றோம் எனத் தெரிவித்த பின்னரும் எமக்கு ஆதரவாக பல நாடுகள் குரல் கொடுத்துள்ளன.

பிரதான நாடுகள் எம்முடன் உள்ளன என்பது எமக்கு தைரியமளிக்கின்றது. இலங்கைக்கு எதிராக பிரேரணையை கொண்டுவந்து நடத்தப்படும் வாக்கெடுப்பில் நாம் தோற்றாலும், சர்வதேச நாடுகள் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் அதிகாரத்தை வழங்கப்போவதில்லை.

யார் வலியுறுத்தினாலும் போர்க் குற்றங்கள் தொடர்பில் எந்தவொரு விசாரணையையும் நடத்தமாட்டோம்.

இராணுவத்தைத் தண்டிக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் அரசு இடமளிக்காது. இந்தப் பேச்சுக்கே இடமில்லை என்பதே அரசின் உறுதியான நிலைப்பாடாகும்.

மேலும் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் இந்தியா எவ்வாறான நடவடிக்கை எடுக்கும் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இப்போது தமிழகத்தில் தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் அவர்களின் உள்ளக அரசியல் நகர்வுகள் காணப்படும். ஆனால் இந்தியா எப்போதும் இலங்கைக்கு ஆதரவாகவே செயற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியா இப்போது அமைதியாக இருந்தாலும் அவர்கள் எமக்குச் சாதகமாகவே தீர்மானமெடுப்பார்கள், என்றார். (ம-ஓ,இ)

## பழைய...

அரசு கவனம் செலுத்துகின்றது.

இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் அதற்கான சாத்தியங்கள் இல்லாமல் போய்விட்டது. கடந்த டிசெம்பர் மாதம் அமைச்சரவையில், பழைய முறையில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது. கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி அது தொடர்பில் முடிவெடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு கவனம் செலுத்துகின்றது. கொரோனாத் தொற்று தற்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதால், தேர்தலை நடத்துவது சாத்தியம் என்றார். (ஓ,இ)

## அடுத்த...

ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

23 மாநகர சபைகள் உட்பட 335 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடைபெற்றது. குறித்த சபைகளின் பதவிக்காலம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முடிவுக்கு வருகின்றது. இந்நிலையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தலை 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் அதாவது மார்ச் மாதமளவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு கலப்பு முறையிலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றது. இதன்மூலம் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன், பெண் பிரதிநிதித்துவமும் கட்டாயமாக்கப்பட்டது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறைமையில் சில குளறுபடி கள் உள்ளன. எனவே, சில திருத்தங்க ளுக்கு மத்தியிலேயே தேர்தல் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ந-44)

## மேலும்...

மோதி ஒருவர் உயிரிழந்த நிலையில், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் சோதனையில் குறித்த நபருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து அவரிடம் பி.சி.ஆர். சோதனைக்குரிய மாதிரிகள் பெறப்பட்டு, சோதிக்கப்பட்டதில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 457 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் நால்வருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. மன்னார் பொது மருத்துவமனையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டவர், மன்னாரில் ரயிலுடன் மோதி உயிரிழந்தவர், கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட அக்கராயன்குளத்தில் இருவர் ஆகியோருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-26)

## இலங்கைக்கு...

அனுசரணை நாடுகளின் தூதுவர்கள் இருவர் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் சாரா ஹல்டன் தென்கொரிய தூதுவரையும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவையும் கடந்த இரண்டாம் திகதி சந்தித்துள்ளார். இதேவேளை இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்கினன் இலங்கைக்கான பங்களாதேஸ் தூதுவரை சந்தித்து பேச்சுக்களை மேற்கொண்டார். பங்களாதேஸும் தென்கொரியாவும் மனித உரிமை பேரவையின் அமர்வில் இம்முறை வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## பொறுப்புக்கூறலில்...

ளில் இருந்து விலகியது என்று குறிப்பிடும் வெளிவிவகார அமைச்சரின் கருத்தை ஏற்க முடியாது. இலங்கைக்கு எதிராக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் அப்படியே நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது கூட்டமைப்பு.

இது தொடர்பில் அந்த அமைப்பால் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உலக நாடுகளில் உள்ள மனித உரிமை மீறல்களை ஆய்ந்தறிந்து அறிக்கையிடுவது மனித உரிமைகள் ஆணையாளரின் சட்டபூர்வமான கடமை. அந்தக் கடமையை எந்தவொரு நாட்டின் இறைமையையும் மீறும் செயலாகக் கொள்ள முடியாது. இறுதிப்போரில் நடந்த போர்க் குற்றங்களைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்ட இலங்கை எந்தவிதக் காத்திரமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

புதிய அரசமைப்புக்கு எதிராக 2016ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமும்கூட அர்த்தம் பெறவில்லை.

அதற்கெதிரான போக்குத்தான் தற்போது காணப்படுகின்றது. மீண்டும் மோதல் நிகழாமல் இருப்பதற்கான சிறந்த உத்தரவாதமாக, நாட்டின் குடிமக்களாக உள்ள அனைத்து மக்களின் சம்மதத்துடன் ஒரு புதிய அரசமைப்பைக்கூட கொண்டுவர முடியாத நிலைதான் தற்போதுள்ளது - என்றுள்ளது. (ம)

## மாட்டுடன்...

விபத்தில் உயிரிழந்துள்ளார். பருத்தித்துறை பொலிகண்டியைச் சேர்ந்த மேரி ஜாக்சன் அன்ரனி (வயது - 30) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி - பரந்தன் இடையே வயல்வெளிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இவர் மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த போது மாடு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது. (ம-ச)

## பொச்சுமட்டை (கோம்பை) தேவை

கனகன்புளியடி சந்தி. சரசாலையில் இயங்கும் தும்புத் தொழிற்சாலைக்கு ஒரு பொச்சுமட்டை(கோம்பை) நான்கு ரூபா (4/-) வீதம் வாங்கப்படும்.

தொடர்புக்கு 077 622 3162

## விற்பனைக்கு

யாழ் முள்ளானை சிவன் கோயிலுக்கு முன்பாக உள்ள வீடும் 7 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. **(இளவாலை பிரதான வீதியிலிருந்து 500m)**

தொடர்புக்கு
075 477 7063, 077 525 9961

## மணமகள் தேவை

1992.01.23இல் பிறந்த பூரம் நட்சத்திரம். யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தகைமை M.B.B.S உடையவருக்கு அதே தகைமையையுடைய பெண் எதிர் பார்க்கின்றோம்.

074 130 3351

## வகுப்புக்கள்

தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புகளுக்கு கணித, விஞ்ஞான பாடங்கள் தனியாகவும் குழு வாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்புக்கு 076 686 7099

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

நெல்லியடி திக்கம் வீதியில் வதிரிச் சந்தியிலிருந்து 300 m தூரத்தில் பிரதான வீதியில் 4 பரப்பு காணியுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

**077 464 4887**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1986 இல் பிறந்த தனியார் நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமையாளராக பணிபுரிபவருக்கு தொழில் புரியும் மணமகள் எதிர்பார்க்கப்படுகிறது.

T.P.:- 077 610 8577 Viber
076 789 4702 Whats app

## வகுப்புக்கள்

A/L தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (Science for Technology) தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்

தொடர்புக்கு: 077 074 7906

## ROOM வாடகைக்கு

நல்லூரடியில் சகல வசதிகளுடன் 3 Room வாடகைக்கு உள்ளது. உத்தியோகத்தர்கள், மாணவர்கள் விரும்பத்தக்கது.

T.P:0767602865, 0766088338

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் Dr.Y.N. Dorex யாழ்.நகரில் IELTS (Academic and General) A1 UK Exam (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

**Guarrnteed to 7.5 in IELTS Exam**

**Group Class**

**IELTS & English Grammer** } **50 hours 10,000/= Only**

**Jaffna College**
**Ungraduate Department**

Please Contact:
**Tel: 077 780 3970 / 074 007 1970**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு இராசபாதை வீதியில் Main Road உடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 1 ½ பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.**

**இராச வீதிச் சந்தியிலிருந்து 100 m தூரத்தில்**

**குரு:**
**0774683354, 0772880152**

## வேலைவாய்ப்பு

உதயன் நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

- **சாரதி** (Driver)
- **பத்திரிகை மடிப்பாளர்** (Folders)
- **பத்திரிகை விநியோகஸ்தர்** (Delivery Staff)

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் நாளை (08.03.2021) திங்கட்கிழமை பி.ப 3.00 - 6.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

உதயன்
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## துரித பொதிகள் சேவை

வெளிநாடுகளுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் பொதிகளை அனுப்பிட, 11kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

Swiss - 1300/- Germany - 1200/- U.K - 1000/-

மற்றைய நாடுகளுக்கு விசேட சலுகைகள்

**Thirumurugan Com Net PVT Limited**
321, K.K.S. Road, Jaffna. T.P 077 755 4528, 021 222 7835

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

airtel

மாதத்திற்கே
UNLIMITED
ரூபா.286/- மட்டுமே!

YouTube

TRC/AIR/PRO/20/06

இப்பொழுது My Airtel App / recharge.airtel.lk / *286# ஐ அழைப்பதன் ஊடாகவும் இத்த பேக்கேஜை செயற்படுத்த முடியும்.



இப்பத்திரிகை திரு.உ.தயன் பப்ளிகேஷன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

Registered as a Newspaper

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கி இவ் வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்!
- பாரதியார்

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 மாசி 23 ஞாயிற்றுக்கிழமை (07.03.2021) சிகரம் : 38

உளவாளி

# அம்மா அடிச்சாளோ ...?



## பிஞ்சுக் குழந்தைக்கு நேர்ந்த நெஞ்சைப் பதற வைத்த சம்பவம்

## ஆவணங்கள் இன்றி யாழ்ப்பாணம் வந்த பெண்

## ஆத்திரத்துக்கு காரணம் என்ன?

கடந்தவாரம் பேஸ்புக்கில் பெரும் பரபரப்பு. அதற்குக் காரணம், ஒற்றைக் காணொலி ஒன்று.
வீடொன்றின் ஓரமாக விளையாடிக் கொண்டிருந்த 8 மாதங்களேயான பிஞ்சுக் குழந்தை ஒன்றை , பெண்ணொருவர் மிகப் பெரிய தடி ஒன்றினால் தாறுமாறாக அடிக்கிறார். அந்தப் பிஞ்சுக்குழந்தைக்கு ஏன் அடி விழுகின்றது ? எதற்கு அடி விழுகின்றது ? என எதுவுமே புரியாமல் வீரிட்டு அழுகின்றது. வலியால் துடிக்கின்றது. எந்தப் பக்கம் போவதெனத் தெரியாமல் தடுமாறியபடியே மீண்டும் அடி வாங்குகின்றது. கண்மண் தெரியாமல் குழந்தையை அடித்த பின்னும் அந்தப் பெண்ணின் ஆத்திரம் அடங்கவில்லை.
அடிவலியால் உயிரே போவது போல அழுதுகொண்டிருக்கும் குழந்தையின் ஒற்றைக்கையைப் பிடித்து தூக்கியபடி தரதரவென அறையொன்றுக்குள் இழுத்துச் செல்கிறாள். அங்கும் குழந்தையை கீழே போட்டுவிட்டு, மீண்டும் தன் ஆத்திரத்தைக் காட்டும் வகையில் அடிக்கத் தொடங்குகிறாள்.
இவ்வளவும் நடந்து கொண்டிருக்கும் போதும், அடி வாங்கித் துடிதுடிக்கும் குழந்தையைத் தூக்கிக் காப்பாற்ற எவரும் எத்தனிக்கவேயில்லை. அந்தச் சம்பவம் நடந்த வீட்டின் ஹோலில் ஒரு நடுத்தர வயதான பெண்ணொருவர் சாய்ந்து படுத்திருக்கிறார். அவர் கூட எந்தவொரு சலனத்தையும் வெளிப்படுத்தவில்லை. எதையும் கேட்காத, எதையும் பார்க்காத, எதையும் பேசாத ஒரு 'ஜென்' நிலையில் அவர் அப்படியே படுத்திருக்கிறார். ஆனால் இவ்வளவற்றையும் ஒரு இளைஞன் தன் கைபேசியில் படமெடுக்கிறான். அவனோடும் முரண்பட்டபடி, அந்தப் பெண் குழந்தைக்கு அடித்தபடி அறைக்கதவைக் கோபத்தோடு சாத்துகிறாள் அந்தப் பெண்.
இவ்வளவும்தான் அந்தக் காணொலி. ஆனால் அதைப் பார்த்த எவருக்கும் அன்றைக்கு தூக்கமே வந்திருக்காது. அவர்களின் மனங்களிலெல்லாம் மிக மோசமாகத் தாக்கப்பட்டு வீரிட்டு அலறும் குழந்தையே நிறைந்திருக்கும்.
'அந்தக் குழந்தைக்கு என்னானதோ?' என்ற ஏக்கத்தோடுதான் அன்றைய இரவைக் கடந்திருப்பார்கள்.

### தீயாய் வேலை செய்த பொலிஸ்

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் நடந்த கொடூரம் என்ற தலைப்போடு , சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட இந்தக் கணொலியைப் பார்த்தவர்கள் அனைவருமே ' இப்படி ஒரு தாய் நடந்து கொள்வாளா?' எனப் பதறினர். அந்தக் குழந்தையைக் காப்பாற்றுமாறு உரிய அதிகாரிகளுக்கு இரவிரவாக தொலைபேசி அழைப்புகள் பறந்தன.
அடுத்தநாள் காலை கிராம சேவகர் அந்த வீட்டை அடையாளம் கண்டு, உடனேயே பொலிஸுக்கு அறிவிக்க சற்றைக்கெல்லாம், யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸார் வந்திறங்கினர். இரவு வீட்டுக்குள் நடந்த கொடுமை இப்படி ஊரெங்கும் தெரிய வருமென்றோ, அதனால் பொலிஸ் வருமளவுக்குச் சிக்கல் உருவாகுமென்றோ வீட்டிலிருந்த எவரும் கனவிலும் எண்ணவில்லை.
பொலிஸைக் கண்டதும் பேயைக் கண்டது போல மிரண்டனர்.
பொலிஸ் கொக்கிகளாகக் கேள்விகளைத் தொடுக்க, காணொலியில் அந்தக் குழந்தைக்கு அடித்த பெண் (குழந்தையின் தாய்) என்ன பதிலைச் சொல்வதென்று தெரியாமல் தடுமாறத் தொடங்கினாள்.
" உங்கட பேர் என்ன?"
" மேரி கனிஸ்டா"
" குழந்தைக்கு என்ன பேர்?"
" ஷாம்"
" என்ன வயசு குழந்தைக்கு?"
" 8 மாதம் சேர்"
"உங்கட சொந்த இடம் இதுவா?"
"இல்லை சேர், நாங்கள் திருகோணமலை. இங்க வாடகைக்கு இருக்கிறம்"
" அப்போ டொக்கிமெண்ட்ஸ் எல்லாம் எடுங்க"
" டொக்கிமெண்ட்ஸ் இல்லை சேர். எல்லாம் எயார்போர்ட்டில துலைஞ்சு போச்சுது"
" உங்கட ஹஸ்பெண்ட் இலங்கை ஆளோ, வெளிநாட்டு ஆளோ?"
" அவர் இந்திய முஸ்லிம் , இப்ப குவைத்தில"
" நீங்கள் நெடுக அடிக்கிறதா குழந்தைக்கு?"
" இல்லை சேர், நேற்றுத்தான் வேற ஏதோ ஆத்திரத்தில அடிச்சிட்டன்"
"பிள்ளையின்ர அப்பாவோட ஏதும் பிரச்சினையா?"
ஆம் என்பது போல மேரி கனிஸ்டா தலையசைக்கிறாள்.
" என்ன பிரச்சினை?காசு அனுப்பிறவரா?"
கொஞ்சம் தயங்குகிறாள்.
"இல்லை சேர். சரியான குறைவு"
" அப்போ குழந்தைக்கு அடிக்கிறதை வீடியோ எடுத்து காட்டி காசு கேக்கவா அப்பிடி அடிச்சீங்கள்?"
"இல்லை சேர்"
" அவர் பார்த்தவரா இந்த வீடியோ? "
" ஓம்"
" என்ன சொன்னார் பார்த்திட்டு"
" பிள்ளைக்கு அடிக்க வேண்டாம் எண்டு சொன்னவர்"
" உங்களால இந்தப் பிள்ளையை வைச்சு வளர்க்க ஏலுமா?"
" ஓம்"
"இப்பிடி அடிச்சால் கோர்ட்ஸில ஏத்தி, பிள்ளையை வேற இடத்தில தான் வளர்க்க வேண்டி இருக்கும்"
"இல்லை நான் வளர்ப்பன்"
இவ்வளவு நேரமும், நேற்று எந்தத் தாய் வெறி கொண்டவள் போல தடியால் தாறுமாறாகத் தாக்கினாளோ, அவளின் தோளில் சாய்ந்தபடி மழலைக் குரலால் மிழற்றிக் கொண்டிருந்த 'ஷாம்' என்கிற அந்தப் பச்சிளம் பாலகனை பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பெற்றுக் கொள்ள தாய் கைது செய்யப்பட்டாள்.
இப்போது தாயும், சேயும் யாழ்.போதனா மருத்துவமனையில் , மருத்துவப் பரிசோதனை செய்வதற்காக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

05

## வீடியோவை பகிர்ந்தவர்கள் யார்?





## பூச்சிய வரைபு தொடர்பில்

# தமிழ்த் தேசியக் கட்சிகள்

## ஏன் ஒரு பொதுக் கருத்தை எட்ட முடியவில்லை?

நிலாந்தன்

கடந்த ஜனவரி மாதம் மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்து ஒரு பொதுக்கடிதத்தை தயாரித்து ஐ.நா.வுக்கு அனுப்பி வைத்தன. அதில் கூட்டமைப்பு எதுவித எதிர்ப்புமின்றி பங்குபற்றியது. அந்தக்கட்சியின் பேச்சாளர் மூன்று சந்திப்புகளிலும் மிகவும் "கூலாக" இருந்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். விக்னேஸ்வரனின் கூட்டமைப்பும் , தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பல்வேறு விடயங்களில் ஆளுக்காள் மோதிக்கொண்ட பொழுது கூட்டமைப்பு ஒரு அப்பாவி போல, தான் எல்லாவற்றுக்கும் தயார் என்பது போல ஒரு தோற்றத்தைக் காட்டிக்கொண்டு அமைதியாக காணப்பட்டது. இனப்படுகொலை என்பதை அந்தக் கடிதத்தில் இணைப்பதற்கும் அந்தக்கட்சி தயாராகக் காணப்பட்டது. முடிவில் ஒரு பொதுக்கடிதம் தயாரிக்கப்பட்டு ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இது தொடர்பில் லண்டனை மையமாகக் கொண்டியங்கும் ஓர் ஆவணச் செயற்பாட்டாளர் என்னிடம் பின்வருமாறு சொன்னார்....."அப்படி ஒரு ஆவணத்தைத் தயாரிக்க ஒத்துழைக்குமாறு மேற்கத்திய நாடுகளே கூட்டமைப்பிடம் கேட்டிருக்கலாம். அந்த ஆவணத்தைத் தயாரிக்கும் பொறுப்பை கஜேந்திரகுமார் மற்றும் விக்னேஸ்வரனின் கட்சிகளிடம் ஒப்படைத்து விட்டு அமைதியாக இருக்குமாறு அவர்கள் கூட்டமைப்புக்கு ஆலோசனையும் கூறியிருக்கலாம். ஏனெனில் ராஜபக்ச அரசாங்கத்துக்கு எதிராக ஒரு அழுத்த பிரயோக உத்தியாக அந்த ஆவணத்தை அவர்கள் பயன்படுத்த யோசித்திருக்கலாம். அவர்கள் நிறைவேற்ற விரும்பும் ஒரு ஜெனிவா தீர்மானத்தை நோக்கி ராஜபக்சக்களை நிர்பந்திப்பதற்கு தமிழ்த் தரப்பிலிருந்து அவ்வாறான கோரிக்கைகள் வர வேண்டும் என்று அவர்கள் சிந்தித்திருக்கலாம். ராஜபக்சக்களுக்கு அழுத்தம் கொடுக்க கூடிய ஒரு பொதுக் கோரிக்கை வரவேண்டும் என்றால் அதை கஜேந்திரகுமாரை இணைத்துக் கொள்வதன் மூலம்தான் தயாரிக்கலாம் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த ஒரு பொது உண்மையாகும்" என்று கூறினார்.

இந்த உண்மை கடந்த ஆண்டும் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஓர் ஐக்கிய முயற்சியின் போதும் வெளிப்பட்டது. அந்த பதின்மூன்று அம்ச ஆவணத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கையெழுத்திடவில்லை. ஆனால் தொடக்கத்திலிருந்து முடிவு வரையிலும் அக்கட்சியின் பங்களிப்பு இல்லை என்றால் அப்படி ஒரு சமரசத்திற்கு இடமற்ற ஆவணத்தைத் தயாரித்து இருந்திருக்க முடியாது என்று சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தார்கள்.

இது ஜனவரி மாதம் தமிழ்க் கட்சிகள் ஜெனிவாவுக்கு அனுப்பிய ஆவணத்துக்கும் பொருந்தும். அதில் முதலாவது சந்திப்பு கிளிநொச்சியில் நடந்தபோது அதில் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் அதன் இறுதி வடிவத்துக்கு பெருமளவுக்கு முரணாக காணப்பட்டன. முதலாவது சந்திப்பில் கஜேந்திரகுமார் கலந்துகொள்ளவில்லை. இரண்டாவது சந்திப்பு வவுனியாவில் நடந்த பொழுது அவர் பங்குபற்றினார். சந்திப்பில் அவர் தனது நிலைப்பாட்டை தெளிவாகவும் தர்க்கபூர்வமாகவும் முன்வைத்தார். அதன்படி பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். அவருடைய அந்தக் கோரிக்கையை கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டது. விக்னேஸ்வரனின் அணியும் ஏற்றுக்கொண்டது. மேலதிகமான சில கோரிக்கைகளில்தான் விக்னேஸ்வரன் அணிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையே சில முரண்பாடுகள் ஏற்பட்டன. எனினும் பொதுக் கோரிக்கையை இறுதியாக்கும் போது அந்த முரண்பாடுகளும் தீர்க்கப்பட்டன.

எனவே "கஜேந்திரகுமார் அந்தக் கூட்டுக்குள் இணைத்துக் கொண்டால்தான் விட்டுக்கொடுப்பற்ற சமரசத்துக்கு இடமற்ற கோரிக்கைகளை அவர் முன்வைப்பார் என்பது மேற்கத்திய தூதரகங்களுக்கு நன்கு தெரியும். எனவே இது விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்மக்கள் தேசியக்கூட்டணி ஆகிய கட்சிகளோடு இணைந்து அவ்வாறு விட்டுக்கொடுப்பற்ற ஓர் அறிக்கையை தயாரிக்குமாறு மேற்கத்திய தூதரகங்கள் கூட்டமைப்பை ஊக்குவித்திருக்குமா?" என்றும் அந்த ஆவணச் செயற்பாட்டாளர் கேட்டார்.

அவர் மேலும் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார். பொதுவாக ஐ.தே.க ஆட்சிக்கு வரும்பொழுது தமிழரசுக் கட்சி ஒன்றில் அதன் பங்காளி ஆகிவிடும் அல்லது கள்ளக்காதலி ஆகிவிடும். அதே சமயம் சுதந்திரக் கட்சி, ஆட்சிக்கு வரும்பொழுது தமிழரசுக் கட்சி பொதுவாக போராளி ஆகிவிடும். 2015 ஆட்சி மாற்றத்தின்பின் அதுதான் நடந்தது. அப்பொழுது கூட்டமைப்பு அதாவது தமிழரசுக் கட்சியை மையமாகக் கொண்ட கூட்டமைப்பு நல்லாட்சி அரசாங்கம் என்று அழைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் மறைமுகப் பங்காளியாக விளங்கியது. அப்பொழுது மேற்கு நாடுகளால் முன் மொழியப்பட்ட நிலை மாறு கால நீதிக்கான ஐ.நா. தீர்மானத்தின் பங்காளியாகச் செயற்பட்டது. இப்பொழுது சுதந்திரக் கட்சியின் காலத்தில் அதாவது ராஜபக்சவின் காலத்தில் அது போராளி வேடம் தரித்துவிட்டது" என்றும் அவர் சொன்னார். அதனால்தான் நிலைமாறுகால நீதி என்ற ஒரு பரிசோதனையைச் செய்தோம். அது தோற்று விட்டது. எனவே இனி பொறுப்புக் கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகலாம் என்று இப்பொழுது அந்தக்கட்சி கூறுகிறதா?

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சுமந்திரன் அதிரடிப்படையின் பாதுகாப்பைப் பெற்றிருந்தார். ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தைத் தயாரிக்கும் சந்திப்புகளின்போதும் சந்திப்பு நடைபெற்ற மண்டபங்களுக்கு வெளியே அதிரடிப்படையும் நின்றது. ஆனால் அண்மையில் 'பொபெ' பேரணிக்குப்பின் அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு விலக்கப்பட்டுவிட்டது. அதன்மூலம் அவர் தமிழ்த்தேசிய அரசியலில் புனிதநீர் தெளிக்கப்பட்டவர் போல தோன்றுகிறார். போராட்டக் களங்களில் அவர் காணப்படுகிறார். இது தேர்தல் தோல்விகளில் இருந்து அவர் பெற்றுக்கொண்ட பாடங்களின் விளைவாகவும் இருக்கலாம். அதேசமயம் கட்சிக்குள் தனது தலைமைத்துவத்தை பலப்படுத்துவதற்காகவும் இருக்கலாம். இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் மூன்று கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கடிதத்தை தயாரிக்கும் முயற்சிகளை எடுத்தபோது கூட்டமைப்பு அதில் முழுமனதாக ஈடுபட்டது. அந்த முதற்கடிதம் குறித்து பல்வேறு வகைப்பட்ட விமர்சனங் கள் எழுந்தன. அந்த முதற் கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் குறித்து கேள்விகள் எழுந்தன. அந்தக்கேள்விகளுக்கெல்லாம் பதிலாக அந்தக்கடிதத்தின் தொடர்ச்சியாக மேலும் சில கடிதங்கள் அனுப்பப்படும் என்று அப்போது கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு கடிதங்கள் தொடர்ந்து அனுப்பப்படவில்லை. ஏன்?

ஏனெனில் கூட்டமைப்பு அவ்வாறு ஏனைய கடிதங்களைத் தயாரிப்பதில் அதிகம் ஈடுபாடு காட்டவில்லை. அதற்கு அவர்கள் சொன்ன காரணம் "ஜெனிவா கூட்டத்தொடர் தொடங்கவிருக்கும் ஒரு பின்னணியில் ஜெனிவா தீர்மானம் எவ்வாறு அமைகிறது என்பதை பார்த்து அடுத்தடுத்த கடிதங்களைத் தயாரிக்கலாம். எனவே இப்பொழுது அவசரப்பட வேண்டாம்" என்பதே. இதனால் முதலாவது கடிதத்தின் தொடர்ச்சியாக அடுத்தடுத்த கடிதங்களை சிவில் சமூகப் பிரதிநிதிகளால் தயாரிக்க முடியவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த வாரம் ஜெனிவாத் தீர்மானத்தின் பூச்சிய வரைவு வெளிவந்தது. இது ஒரு முதல் வரைபல்ல என்றும், இதற்கு முன்னரே இரண்டு வரைபுகள் உட்சுற்றுக்கு விடப்பட்டன என்றும், கூட்டமைப்பின் உயர் மட்டத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக இதற்கு முந்திய வரைபுகளில் முஸ்லிம்களின் விவகாரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்றும், அண்மையில் வெளிவந்த பூச்சிய வரைபில்தான் அது அழுத்தமாகச் சேர்க்கப்பட்டது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு முதற்கட்ட வரைபு குறித்தும், அதில் ஏற்படும் மாற்றங்களைக் குறித்தும் கூட்டமைப்புக்கும் தெரிந்திருக்கிறது என்பது எதைக்காட்டுகிறது? கூட்டமைப்பு அந்த வரைபைத் தயாரிக்கும் நாடுகளோடு நெருக்கமாகச் செயற்படுகிறது என்பதையா? இவ்வாறு ஜெனிவாத் தீர்மானத்தை உருவாக்கும் நாடுகளோடு அந்தக்கட்சி நெருக்கமான உறவைப் பேணுமாக இருந்தால் அந்தத்தீர்மானத்தின் பூச்சிய வரைபைக் குறித்து ஏனைய இரண்டு கட்சிகளோடு சேர்ந்து ஒரு பொதுக் கடிதத்தை அனுப்புவது குறிப்பிட்ட நாடுகளுக்கு குழப்பமான சமிக்ஞைகளை வழங்குவதாக அமையும் என்று அந்தக்கட்சி கருதுகிறதா?. ஒருபுறம் அவ்வரைபை உருவாக்கும் மேற்கு நாடுகளுடன் நெருக்கமாகக் காணப்படும் ஒரு கட்சி இன்னொருபுறம் ஏனைய இரண்டு கட்சிகளுடன் இணைந்து அந்த வரைபுக்கு எதிராக ஒரு பொதுக் கோரிக்கையை முன் வைப்பது என்பது இரட்டை நிலைப்பாடுதானே ?இது காரணமாகவே கூட்டமைப்பு பூச்சிய வரைபுக்கு எதிராக ஒரு பொது ஆவணத்தை உருவாக்குவதற்குப் பின்னடித்ததா?

ஆனால் கடந்த ஜனவரி 15ஆம் திகதி ஒரு பொதுக் கோரிக்கையை ஐ.நா.வுக்கு அனுப்பிய அந்தக்கட்சிக்கு ஒரு கூட்டுப் பொறுப்பு உண்டு. அந்தக் கோரிக்கையை சிறிதேனும் கவனத்தில் எடுக்காத ஒரு பூச்சிய வரைபு வெளிவந்திருக்கும் ஓர் அரசியல் சூழலில் அதைக் குறித்து அந்தக்கட்சி கருத்து எதையும் இந்தக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் தெரிவிக்கவில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)

# வல்லாதிக்கத் தேசங்களுக்கு இலங்கை கொடுத்த செருப்படி



அ.நிக்ஸன்

ஜெனிவா மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், இலங்கை ஒற்றையாட்சி அரசின் படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்றும், சர்வதேச ரீதியாக எழுந்துள்ள போலியான குற்றச்சாட்டுக்களில் இருந்து இலங்கைப் படையினரைக் காப்பாற்ற புதிய சட்டங்களை உருவாக்கவுள்ளோம் என்றும், முப்படையினரையும் காப்பாற்றக்கூடிய முறையில் நாடாளுமன்றத்தில் புதிய சட்டங்களை உருவாக்கவுள்ளோம் என்றும் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்திருக்கின்றார்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் இருந்து இலங்கை தவறியுள்ளதால் சர்வதேச நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டுமென மனித உரிமைச் சபையின் ஆணையாளர் உறுப்பு நாடுகளுக்குப் பரிந்துரைத்துள்ள நிலையில், போர்க்குற்றத்தில் படையினர் ஈடுபடவேயில்லையென அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.



**இலங்கைக்கு எதிரான தீர்மானமும் இலங்கையின் புதிய சட்டங்களும்**

இலங்கை விவகாரம் தொடர்பாக சர்வதேச நாடுகள் அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் சர்வதேச நாடுகளின் கூற்றுக்களைப் பொய்யாக்கும் வகையில் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கருத்து வெளியிட்டிருப்பது எந்தப் பின்னணியில் என்ற கேள்விகள் எழுகின்றன. அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள் இலங்கைக்குக் கடும் அழுத்தம் கொடுத்துவந்தாலும், இந்தோ பசுபிக் பாதுகாப்பு விவகாரத்தில் இலங்கையைத் தங்கள் பக்கம் எடுக்கும் நோக்கிலேயே இந்த வல்லாதிக்கச் சக்திகள் செயற்பட்டு வருவதாக ஈழத்தமிழர் தரப்பு குற்றம் சுமத்தி வருகின்றது. ஆனாலும் இந்த வல்லாதிக்க நாடுகளையே பொய்யர்களாக மாற்றும் நகர்வுகளை இலங்கை துணிவோடு மேற்கொண்டு வருகின்றது. சீனாவில் உள்ள இலங்கைத் தூதுவர் பாலித கோகண்ண பீஜிங்கில் உள்ள சீனாவுக்கு ஆதரவான நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து மனித உரிமைச் சபை அமர்வில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படுமாறு கோரியிருக்கிறார்.

சீன அரசும் இலங்கைக்கு ஆதரவாக பகிரங்கமாகச் செயற்பட்டு வரும் நிலையில், சீனாவின் ஆதரவோடு ஈழத்தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்கள். மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான சர்வதேச விசாரணைப் பொறிமுறையை முற்றாகவே நீக்கம் செய்யும் நகர்வுகளை இலங்கை மேற்கொண்டு வருகின்றமை பகிரங்கமாகிறது. இதனையே அமைச்சர் பேராசிரியர் பீரிஸின் கருத்து எடுத்துக்காட்டுகின்றது. இலங்கைப் படையினரை சர்வதேச விசாரணைப் பொறிமுறையில் இருந்து காப்பாற்ற இலங்கையில் போதிய சட்டங்கள் இல்லை என்றும் புதிய சட்டங்களை உருவாக்க வேண்டுமெனவும் அமைச்சரால் வெளியிடப்பட்ட தகவல், மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்துக்குச் சவாலாகவே அமையும் எனக் கூறலாம். அதாவது எவருடைய அழுத்தங்களுக்கும் இலங்கை அடிபணியாது என்பதும் சீனாவின் உதவியே இலங்கைக்குப் போதுமானதென்ற துணிச்சலான தொனியும், வல்லாதிக்க நாடுகளுக்கு பெரும் செருப்படியாகும்.

**காலனித்துவ விசுவாசத்தால் கவிழ்ந்துபோன தமிழ்த் தரப்பு**

ஆனால் ஈழத்தமிழர் விவகாரத்தை வெறுமனே ஒப்பாசாரத்துக்காக மனித உரிமைச் சபையில் உச்சரிக்கும் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற வல்லாதிக்க நாடுகளுக்கு இலங்கை அரசின் ஜனநாயகப் பண்பற்ற இந்த அணுகுமுறை தெரியாததல்ல. இந்த இக்கட்டான பூகோள அரசியலைப் பயன்படுத்தத் தவறியது யார்? தமிழ்த் தேசியக் கட்சிகளின் மனச்சாட்சிக்கு இது தெரியாததல்ல. தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து மனித உரிமைச் சபையின் உறுப்பு நாடுகளிடம் கையளித்த பொது ஆவணம் இன அழிப்புக்கான சர்வதேச நீதியை அழுத்தம் திருத்தமாக ஒரே வாக்கியத்தில் நேரடியாகவே கோரியிருந்தால், சிங்கள ஆட்சியாளர்கள் நிலைதடுமாறியிருப்பர். இலங்கைப் படையினரைக் காப்பாற்றப் புதிய சட்டம் ஒன்றை உருவாக்கவுள்ளோம் என பேராசிரியர் பீரிஸும் சொல்லியிருக்கமாட்டார். சர்வதேச நாடுகளும் இலங்கையின் தாளத்துக்கு ஆடிக்கொண்டிருக்கும் நிலையில் இருந்து சற்று மாறியிருக்கும்.

ஆனால் காலனித்துவ ஆட்சியின் விசுவாசம், தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளை அடிபணிய வைத்திருக்கிறது. ஆகவே அமைச்சர் பீரிஸின் கருத்து தமிழ்த்தேசியக் கட்சிகளின் மனச்சாட்சியை உலுக்கியிருக்க வேண்டும்.

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான சர்வதேச நீதிகோரி தொடர்ச்சியான அறவழிப் போராட்டங்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் வடக்கு கிழக்கு தாயகப் பகுதிகளில் நடத்துவதற்கு தயங்குகின்றன. இவ்வாறானதொரு நிலையில், தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து லண்டனில் வாழும் அம்பிகா செல்வகுமார் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். சாதாரண குடும்பத் தலைவியாக இருக்கும் இந்தப் பெண், சர்வதேச நீதிகோரி உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என கருதியமை அறிவு ரீதியானதும் உணர்வு ரீதியானதுமான செயற்பாடாகும். ஜெனிவா மனித உரிமைச்சபை அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், ஈழத்தமிழர்கள் மீதான இன அழிப்பு மற்றும் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது.

ஆனால் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியவர்கள் தாயகத்தில் அரசியலில் ஈடுபட்டுவரும் தமிழ்த் தேசியக் கட்சிகளே.

**தேர்தல் அரசியலில் தமிழர்களின் உரிமை**

குறிப்பாக 2009ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் ஆகிய தேர்தல்களில் போட்டியிட்டு ஆசனங்களைக் கைப்பற்றுவதிலேயே கவனம் செலுத்தி வரும் இந்தத் தமிழ்த் தேசியக் கட்சிகள், அரசியல் விடுதலை வேண்டி சாதாரண மக்கள் நடத்துகின்ற போராட்டங்களில்கூட கலந்து கொள்வதில்லை. அப்படிக் கலந்து கொண்டாலும் ஒன்றிரண்டு மணித்தியாலங்களில் அங்கிருந்து சென்று விடுகின்றனர். இவர்களின் முழு இலக்கும் தேர்தல் அரசியல் தான். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசியல் செயற்பாடுகளை இவர்கள் முன்னெடுக்கத் தவறுகின்றனர்.

சாதாரண கட்சி அரசியலில் மாத்திரம் ஈடுபட்டு இலங்கை ஒற்றையாட்சி அரசின் சலுகைகளையும் வரப்பிரசாதங்களையும் அனுபவித்துக் கொண்டு தமிழ்த் தேசிய அரசியலை தீவிரமாகப் பேசுகின்றனர். நாடாளுமன்றத்திலும் ஆவேசமாக பேசுகின்றனர். அதனை தமிழ் ஊடகங்கள் தலைப்புச் செய்திகளாக பிரசுரிக்கின்றன. அத்தோடு அவர்களுடைய போராட்டம் நிறைவடைகின்றது. ஆனால் அறிவுபூர்வமாக மக்களை விழிப்படையச் செய்து அரசியல் விடுதலைக்கான அறவழிப் போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்த இவர்கள் மறுதலிக்கின்றனர்.

அந்த அடிப்படையில் அம்பிகா செல்வகுமார் முன்னெடுக்கும் போராட்டம் புலம்பெயர் நாடுகளிலும் வடக்கு கிழக்கு தாயகத்தில் வாழும் மக்களுக்கும் முன்னுதாரணமாகும். மக்கள் ஒரு தேசமாக எழுவதற்கு தயாராகவே இருக்கின்றனர். அந்த உணர்வு தமிழ்த் தேசிய மக்களிடம் தாராளமாகவே இருக்கின்றது. ஜனநாயக வழியிலான அகிம்சைப் போராட்டங்களை மக்கள் தீவிரமாக முன்னெடுக்கும்போது அதனை வன்முறையின் மூலம் தடுக்கவும் முடியாது. அப்படித் தடுத்தாலும். அது இலங்கை அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டாகவே பார்க்கப்படும்.

இலங்கைத்தீவில் இலங்கை இராணுவத்தின் புலனாய்வாளர்களின் தொடர்க் கண்காணிப்பால் சாதாரண அப்பாவி மக்கள் தொடர்ச்சியான அறவழிப் போராட்டங்களை நடத்த முடியாத சூழல் இருந்தும் அவ்வப்போது கிளர்ந்தெழுந்து தேசமாக தம்மை வெளிப்படுத்துகின்றனர். அவ்வாறான ஒரு சூழலில் புலம்பெயர் மக்களின் போராட்டமே தாயக மக்களின் உணர்வுக்கும் விடுதலை சார் அறிவுக்கும் வலுச்சேர்ப்பதாக அமையும். ஆனால் புலம்பெயர் மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது என்பதிலும் நடைமுறைப் பிரச்சினைகள் உண்டு. அதுபற்றிக் கலந்தாலோசிக்க வேண்டிய பொறுப்பு ஒன்றிணைந்த புலம்பெயர் அமைப்புகளுக்குரியது. அவ்வாறு புலம்பெயர் அமைப்புகள் ஒன்றிணைந்து ஈழத்தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதை வெளிப்படுத்திப் போராடினால், சாதாரண தேர்தல் அரசியலில் ஈடுபடும் தமிழ்த்தேசியக் கட்சிகள் விரும்பியோ விரும்பாமலோ, வடக்குக் கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் ஒரு தேசமாக எழ வேண்டிய கட்டாய நிலை உருவாகும். சாதாரண கட்சி அரசியல் செயற்பாடுகளைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும். இது, பொறுப்புக்கூற வேண்டுமென்ற மனித உரிமைச் சபையின் குறைந்தபட்ச அழுத்தங்களுக்குக்கூட செவிசாய்க்காமல், அல்லது பயம்கொள்ளாமல், சர்வதேச நாடுகளுக்கு இலங்கை பதில் எச்சரிக்கை விடுக்கும் என்ற திமிர்த்தனத்தை மாற்றியிருக்கும்.





# ஒரு கொடியும் நீதிக்கான குரலும்

ந.பரமேஸ்வரன்

ஜெனிவாவில் ஒன்று கூடுங்கள்" எனதமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் விடுத்த அழைப்பை ஏற்றோ அல்லது தாமே சுயமாக முன்வந்தோ புலம்பெயர் தமிழர்கள் ஜெனிவாவில் ஒன்று கூடியுள்ளனர். வழமை போலவே புலம்பெயர் தமிழர்கள் தாம் போகும் இடமெங்கும் பத்திரமாக எடுத்துச் செல்லும் தமிழ் ஈழத் தேசியக்கொடியுடனேயே ஜெனிவாவிலும் போய்க் குதித்துள்ளனர்.

போகுமிடமெங்கும் தமிழ் ஈழ தேசியக் கொடியை எடுத்துச் செல்பவர்கள் அனைவரும் ஈழப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் உயிருக்கு அஞ்சி அல்லது பணம் சம்பாதிக்கும் நோக்குடன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடியவர்கள்தான். இவர்களுடைய பிள்ளைகள் ஆங்கிலத்திலும், ஜேர்மனிலும், பிரெஞ்சிலும், டொச்சிலும் தான் கல்வி கற்கின்றனர். தாம் வாழும் நாடுகளில் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வரும் இவர்களில் அநேகர், புலத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளான முன்னாள் போராளிகள் பற்றியோ, யுத்த விதவைகள் பற்றியோ யுத்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பற்றியோ கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. இவர்களுக்கு உண்மையிலேயே நாட்டுப்பற்று, மொழிப்பற்று என்பவை இருக்குமாக இருந்தால் முன்னாள் பெண் போராளிகள் "அப்பா எங்களை விட்டுவிட்டுப் போகாதீர்கள்" என கேணல் ரத்னபிரியவை கட்டிப்பிடித்துக் கொண்டு கண்ணீர் சிந்தியிருக்க மாட்டார்கள்.

இலங்கையின் சுதந்திரதின அணிவகுப்பு நிகழ்வில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளான இராணுவ வீரர்களின் அணிவகுப்பை ஜனாதிபதி பார்வையிடும் புகைப்படம் தென்னிலங்கை ஊடகங்களில் முதல்பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது. ஆனால் தமிழர்களுக்காக போராடிய குற்றத்துக்காக மாற்றுத்திறனாளிகளானவர்கள் மரவள்ளிக்கிழங்குடன் சக்கர நாற்காலியில் சீவியம் நடத்துகின்றனர்; சிலர் பிச்சை எடுக்கின்றனர். புலத்தில் நிலைமை இவ்வாறு இருக்க புலம்பெயர் தமிழர்கள் தமிழ் ஈழத் தேசியக் கொடியுடன் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். ஒருவிடயத்தை தமிழர்கள் தெளிவாகப்புரிந்துகொள்ள வேண்டும், தமிழர்களுக்கு மட்டுமே புலிகள், தங்களின் உரிமைக்காக போராடிய அமைப்பு.

மாறாக இலங்கையில் வாழும் பெரும்பாலான சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு விடுதலைப்புலிகள் கொடிய பயங்கரவாத அமைப்பு. அதேபோன்றே சர்வதேசத்தைப் பொறுத்த மட்டில் "தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தமது சொந்த நாட்டு அரசியல்வாதிகளை மட்டுமன்றி அயல் நாட்டுத் தலைவர்களைக் கூட (ராஜிவ் காந்தியை) அவர்களது நாட்டில் வைத்து கொலை செய்த இயக்கம். அத்துடன் புலம்பெயர் தேசங்களில் புலம்பெயர்ந்தவர்களிடம் சட்டவிரோதமாக பணம் வசூலிக்கும் அமைப்பு" என்ற இத்தகைய எண்ணப்பாங்கே, சர்வதேச அரங்கில் புலிகளை பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்த வழி வகுத்தது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதுவர் அலைனா கூட "அமெரிக்கா தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலிலேயே வைத்திருக்கிறது" என ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சர்வதேச ரீதியாக தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பின் கொடியுடன் (புலிக்கொடியுடன்) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும் என்பது கஜேந்திரகுமாருக்கோ உருத்திரகுமாரனுக்கோ GTF,BTF போன்றவற்றின் செயற்பாட்டாளர்களுக்கோ தெரியாதா? ஒரு இனத்தின் உரிமைக் குரலை , நீதிக்கான கோரிக்கையை "தடை செய்யப்பட்ட அமைப்பின் கோரிக்கை" என சர்வதேசம் கணக்கெடுக்காமல் விடவே புலிக்கொடியுடனான ஆர்ப்பாட்டங்கள் உதவும். புலிக்கொடியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடாதீர்கள் என இதுவரையும் இவர்களில் எவரும் சொல்லாததன் காரணம் என்ன? இலங்கை அரசாங்கம் கூறுவதுபோல் " நாங்கள் புலிகளை ஒழித்து விட்டோம். ஆனால் புலம்பெயர்தேசங்களில் புலிகள் இன்னமும் உயிர்ப்புடன் இருக்கிறார்கள்' என்பதை நிரூபிப்பதுபோல் அல்லவா இவர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.




ஒரு கதைக்கு "புலிகள் மீதும் யுத்தக்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே ஜெனிவாவில் புலிக்கொடியுடன் நிற்பவர்கள் எல்லோரும் புலிகளே. எனவே போர்க்குற்றங்களில் ஈடுபட்ட குற்றத்திற்காக அவர்களைக் கைதுசெய்யுங்கள் " என ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். அப்படி நிகழ்ந்தால் கொடியோடு ஆர்ப்பாட்டம் செய்த எத்தனை பேர் தொடர்ந்தும் அங்கேயே நிற்பார்கள்? எனவே இனியாவது ,"ஸீன்" காட்டுவதற்காக புலிக்கொடியோடு ஆர்ப்பாட்டம் செய்து அந்தக் கொடியின் மதிப்பைக் குறைக்காமலும், நீதிக்கான குரலை வலுவிழக்கச் செய்யாமலும் ஆக்கபூர்வமாக எதிர்ப்பை வெளிப்படுத்தும் வழிகளைப் புலம்பெயர்ந்தோர் கண்டடைய வேண்டும்.




# முழுவியளம்

மௌனா



'லூஸ் கனகரின்' பெயர் ஊரிலும் சுற்று வட்டாரத்திலும் வெகு பிரசித்தமானது. காரணம் எப்போதுமே விட்டேத்தியாக வீதிவலம் வரும் அவர் குறித்த ஒரு உப்புச்சப்பற்ற அபிப்பிராயம் தான்.

குறிப்பாக அதிகாலை வேளைகளில் யாராவது ஏதாவது ஒரு முக்கிய நோக்குடன் வீட்டை விட்டு வெளிக்கிளம்பினால் அந்தச்சமயம் லூஸ் கனகர் கண்ணில் படக்கூடாது என்று மிகக் கவனமாக இருப்பர்.

அந்த அளவுக்கு அவர் முக வசீகரம் பெயர் பெற்றது.

"முழுவியளத்துக்கு உதவாத ஆள்" என்ற கருத்து, அவர் குறித்துப் பரவக் காரணம் எதுவென்று தெரியாவிட்டாலும் ஒவ்வொருவரிடமும் அது பற்றி விபரிக்க ஆளுக்கொரு கதையாவது இருக்கவே செய்தது.

இவை நிஜமோ.. கற்பனையோ.. ஊராரால் நம்பப்பட்டும் வந்தது. "கோணாமலையாற்ற பேரன் லூஸில் முழிச்சு விட்டு ஓ எல் சோதனைக்கு போனதாலை சோதனையில பெயில்"

"வெறித் துரையர் அக்ஸிடன்டில கால் முறிந்து கிடப்பதற்கும் லூஸ் கனகர் தான் காரணம் " என்பது பரவலான கதை..

ஆச்சிக் குட்டி காணாமல் போனது.. அருணாச்சலத்தார் காணி வழக்கில் தோற்றது, கந்தசாமி கள்ள பாஸ்போட்டில கனடா வெளிக்கிட்டு கொழும்பில் மாட்டிக் கொண்டது... இப்படி எத்தனையோ அசம்பாவிதங்களுக்கு "லூஸ் கனகரின்" முழுவியளம் தான் காரணம் என ஊர் வாய்கள் ஓயாது கதை விட்டுக் கொண்டிருந்தன. ஆனால் லூஸ் கனகருக்கு லூஸ்தானே! அதுக்கு இதெல்லாம் பெரிய விடயமேயில்ல... அதன் போக்கு சித்தன் போக்கு சிவன் போக்கு என்ற நிலையில் தொடர்ந்தது. ஒருநாள் அதிகாலை லூஸ் கனகரை கசிப்பு கோமாளிகளின் "மோட்டுச் சைக்கிள்" மோதி படுகாயத்துடன் படுக்க வைத்து விட்டது.

பக்கத்து வீட்டு பரமர் கனகரைப் பார்த்து விட்டு "பாவம் உனக்கு ஏனப்பா இந்த நிலை, காலமை ஆர் முகத்தில முழிச்சியோ தெரியேல்லை...! "என்றார். கனகர் அனுங்கல் குரலில் சொன்னார். "இராத்திரி கோவிலில தான் படுத்தனான். விடிய பிள்ளையாரிலை தான் முழிச்சனான்!"

# என்ன நடந்தது மேரிக்கு?

(தொடர்ச்சி)

தான் பெற்ற பிள்ளையையே இப்படிப் பார்ப்போர் பதறும் வண்ணம் அடிக்குமளவுக்கு என்ன நடந்தது மேரி கனிஸ்டாவுக்கு?

அவளை திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர வைத்த காரணி என்ன?

அவளின் தந்தை அவற்றையெல்லாம் சொல்லத் தொடங்கினார்.

" எங்கட சொந்த இடம் திருகோணமலையில உள்ள பாலையூற்று. நான் 1983 ஆம் ஆண்டு வேலை தேடி யாழ்ப்பாணத்துக்கு வந்தன். இங்க வந்து கொய்யாத்தோட்டத்தில இருந்தபடி, பெரிய சம்மாட்டிமாருக்கு கீழ தொழிலாளியாக இருந்தன். அப்ப தான் என்ர மனுசி இளம் பிள்ளையா இருக்கேக்க திருகோணமலையில இருந்து இஞ்ச யாழ்ப்பாணத்தில அவையின்ர சொந்தக்காரரின்ர வீட்ட வந்து தங்கியிருந்தா. அப்பதான் 1989 இல எனக்கும் அவாக்கும் கலியாணம் நடந்தது.

எங்களுக்கு 11 பிள்ளையள்.முதல் 2 பிள்ளையளும் யாழ்ப்பாணத்தில தான் பிறந்தவை. அதுக்கு பிறகு திரும்ப திருகோணமலைக்கு போட்டம்.

போய் மரவேலை செய்யிற பட்டறைகளில மரம் அரியிற வேலை செய்தன். அப்பதான் எங்களுக்கு ஆறாவது பிள்ளையா 1994 ஆம் ஆண்டு மேரி கனிஸ்டா பிறந்தவா. அவாவுக்கு பெரிசா படிப்பு ஓடேல்லை. அதால 3 ஆம் வகுப்போட பள்ளிக்குடம் போகாமல் வீட்ட நிண்டிட்டா. ஆனால் வீட்டை முன்னேற்ற வேணும் எண்டு ஆசை அவாவுக்கு.

2016 ஆம் ஆண்டு நிலாவெளியில ஒரு முஸ்லிம் ஏஜென்ஸிக்காரனை சந்திச்சம். அவன் டுபாயில வீட்டு வேலைக்கு ஆள் தேவை எண்டு கேட்டான். ஆனால் முஸ்லிம் ஆக்களுக்குத்தான் அந்த வேலை. அதால மேரிக்கு கள்ளப்பாஸ்போர்ட் செய்து அவன் டுபாய்க்கு அனுப்பினான். எங்களுக்கும் 25 ஆயிரம் தந்தவன்.

டுபாய்க்கு போய், தான் உழைக்கிற காசை மிச்சம் பிடிச்சு மகள் எங்களுக்கு ஒவ்வொரு மாசமும் அனுப்புவா. பிறகு 2018 இலை திரும்ப நாட்டுக்கு வந்தா. அதுக்குப் பிறகு இன்னொரு பொம்பிளை ஏஜென்ஸி மூலம் குவைத்துக்கு ஆம் ஆண்டு போனா. அதுவும் கள்ளப்பாஸ்போர்ட் தான்.

அங்கதான் இவாவுக்கும் அந்த முஸ்லிம் பெடியனுக்கும் போனில தொடர்பு. அவனுக்கு தமிழ் தெரியாது. அவன் வட இந்தியா. இவா ஒரு நாள் தான் வேலை செய்யிற வீட்டை விட்டிட்டு ,அவனோட போய் தங்கியிருக்கத் தொடங்கிட்டா. அப்பிடி களவாப் போனதால அவான்ர பாஸ்போட்டை, வேலைக்கு கூப்பிட்ட வீட்டுக்காரன் திருப்பிக் குடுக்கேல்லை.



இதெல்லாத்துக்கும் பிறகுதான் எங்களுக்கு ரெலிபோன் பண்ணி அவனைக் கட்டப்போறன் எண்டா. எங்களுக்கு அது துப்பரவா பிடிக்கேல்லை. போனில கடும் சண்டை. அதால கொஞ்ச நாள் கதை பேச்சில்லை. பிறகு ஒருநாள் போன் பண்ணி, தான் அவனை கலியாணம் கட்டிட்டன் எண்டு சொன்னா. எங்களுக்கு கடும் கோபம். எங்கட சொல்லையும் கேக்காமல் இப்பிடிச் செய்திட்டாளே எண்டு அதுக்குப் பிறகு கதைக்காமலே விட்டிட்டம்.

எனக்கும் மரம் அரியிற பட்டறை வேலை இல்லாததால,இனி அங்க இருந்து உழைக்க முடியாது எண்டு நினைச்சு, யாழ்ப்பாணத்துக்கு முதல்ல தனிய வந்தன். கொழும்புத்துறை கடற்கரை வாடியில் தங்கி நிண்டு ரோலரில வேலை செய்தன். சம்பளம் எடுத்துக் கொண்டு கிழமைக்கொருக்கா, மாசத்துக்கு ஒருக்கா வீட்ட போய் வருவன். பிறகு 2020 ஆம் ஆண்டு , கொரோனா வந்த பிறகு என்ர மனுசி, மகள், 2 மகன்மார் இவையைக் கூட்டிக்கொண்டு இப்ப இருக்கிற வீட்டுக்கு வந்தம்.

இது எனக்குத் தெரிஞ்ச ஒருத்தரின்ர வீடு. இங்க உள்ள தென்னையைப் பராமரிக்கிறது எங்கட வேலை. அதுக்கு பத்தாயிரம் தருவினம். வீட்டுக்கும் வாடகை இல்லை. அப்பிடியே கடல் தொழிலுக்கும் போறதால பிரச்சினை இல்லை.

இஞ்ச வந்த பிறகு ஒருநாள் மகள் போன் எடுத்தா. தனக்கு ஆம்பிளைப் பிள்ளை ஒண்டு பிறந்ததையும், கொரோனாவால அங்க வேலை செய்த கொம்பனி மூடினதால திரும்ப நாட்டுக்கு வரப் போறன் எண்டும் சொன்னா. பேரப்பிள்ளை பிறந்ததைக் கேட்டு, எங்களுக்கு கோபம் போட்டுது. நாங்களும் அவாவையும், அவாட புருசனையும் குழந்தையோட வரச் சொன்னம். ஆனால் அவர் சொந்த இடம் இந்தியா எண்டதால இங்க உடன வரமுடியேலை. மகளும், பேரப்பிள்ளையும் தான் இந்த வருசத் தொடக்கத்தில எயார்போட்டுக்கு வந்திச்சினம்.மகளுக்கு பாஸ்போட் இல்லாததால, ஒரு துண்டு தான் கொண்டு வந்தா. ஆனால் பேரப்பிள்ளைக்கு பாஸ்போர்ட் இருக்கு. பிறகு தனிமைப்படுத்தல் எல்லாம் முடிச்சிட்டு தான் , கொஞ்ச நாளுக்கு முதல் குழந்தையோட யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தா.

இங்க நிறைய பதிவுகள் செய்ய வேண்டி இருந்திச்சு. முக்கியமா குழந்தைக்கு பிறப்புச் சேர்டிபிக்கட் எடுக்க வேணும். அதுக்கு ஒரு டொக்கிமெண்ட்ஸூம் இல்லை. அதால குழந்தையின்ர அப்பாவை அங்க இருந்து வரச் சொன்னம். அவர் ஒவ்வொரு நாளும் வீடியோ கோல் எடுத்து கதைப்பார். அவர் கதைக்கிற பாசை எங்களுக்கு விளங்காது. மகள் தான் கதைப்பா. குழந்தையையும் பார்ப்பார் வீடியோவில. எட்டாம் மாசம் அப்பிடி வாறன் எண்டு சொன்னார்.

இங்க என்ர மகள் கன இடத்துக்கு வேலை கேட்டுப் போனவா. ஒரு இடமும் கிடைக்கேலை. அதோட புருசனும் பெரிசா காசு அனுப்பிறேலை. இங்கையும் தனிய பிள்ளையோட இருக்க, அயலில இருக்கிறவை ஒருமாதிரி கதைக்கிறவை. அதுவும் பெரிய மன உளைச்சல்.

இப்பிடியிருக்கேக்கதான் அண்டைக்கு செலவுக்கு காசில்லை எண்டு மகள் சொல்ல, அவாவின்ர புருசன் குவைத்தில இருந்து " காசு அனுப்பி இருக்கு, போய் எடு " எண்டு சொன்னார்.

மகளும் போய் எடுத்தால் வெறும் ரண்டாயிரத்து எழுநூறு ரூபாதான் அனுப்பிஇருந்தார். அது என்னத்துக்கு காணும்?

அதால மகளுக்கு இன்னும் கோபம்.

அண்டைக்கு நானும் வீட்டில இல்லை. குழந்தை ஏதோ அதிகமா அழுதிருக்கு. ஏற்கனவே கடும் கோபத்தில இருந்த மகள், தடியெடுத்து குழந்தையை கண்டபடி அடிச்சிட்டா. அதை என்ர சின்னவன்(மகன்) போன்ல வீடியோ எடுத்து தன்ர சகோதரங்களுக்கு அனுப்பினவன். என்ர மனுசிக்கும் ஏலாது. சலரோக வருத்தம்.அவாக்கும் குழந்தையள் அழுதா எரிச்சலா இருக்கும். அண்டைக்கு மருந்து போட்டிட்டு படுத்திட்டா. கண்ணைத் திறக்க முடியேலை மருந்து போட்டதால. இல்லாட்டி அவா அடிக்க விடாமல் குழந்தையை தூக்கி இருப்பா.

நான் பதினொரு பிள்ளையளை வளர்த்திட்டன். எனக்கு இந்த ஒரு பேரப்பிள்ளையை வளர்க்கிறது பெரிய கஷ்டமில்லை. மேரிக்கும் பிள்ளையில நல்ல விருப்பம். சகோதரங்கள் வந்து வளர்க்க கேட்டவை. அப்பவும் அவள் குடுக்கேலை. பிள்ளையில விருப்பம் இல்லாட்டி அவையிட்ட குடுத்திருப்பாளே. அண்டைக்கு கோபத்தில அப்பிடி செய்திட்டாள்" என்று தன்னுடைய கோணத்தில்,மகளின் வாழ்க்கை பற்றியும், அன்றைய சம்பவம் பற்றியும் சொல்லி முடித்தார் , மேரி கனிஸ்டாவின் தந்தை.

## "நெடுக அடிக்கிறவா"....

ஆனால் மேரி கனிஷ்டாவின் தம்பி சொல்வது கொஞ்சம் வேறுபடுகிறது. (இவர்தான் அந்த வீடியோவையும் எடுத்தவர்) "எப்ப பாத்தாலும் பிள்ளைக்கு அடிக்கிறதுதான் அவளுக்கு வேலை. நாங்களும் சொல்லிப் பாத்திட்டம். அப்பிடி சொன்னால் எங்களோட தான் சண்டைக்கு வருவாள். " என்ர பிள்ளையை நான் அடிப்பன் " எண்டு சொல்லுவாள். ஒருக்கா அவள் அடிச்ச அடியில ஐஞ்சு விரலும் பிள்ளையின்ர முதுகில பதிஞ்சு போச்சு. அதால தான் அவள் அடிக்கிறதை வீடியோ எடுத்து, அப்பாவுக்கு,அக்கா, அண்ணைக்கும் காட்ட நினைச்சன். அதைப் பார்த்திட்டாவது அவை எடுத்து பேசுவினம் எண்டு நினைச்சன். அவையில ( சகோதரர்களில்) ஆரோ ஒராள் தான் இதை பேஸ்புக்கில போட்டிருக்க வேணும். விடிய பொலிஸ் வீட்டை வரும் வரைக்கும், இப்பிடி வீடியோ பேஸ்புக்கில பரவின விசயம் எங்களுக்கு தெரியாது " என்று அவன் சொல்லும் கதைக்கும், தந்தை சொல்லும் கதைக்கும் இடையே கொஞ்சம் இடிக்கத்தான் செய்கின்றது.

## அழுகை கேட்கும்

நெடுக உந்தக் குழந்தையின்ர அழுகைச் சத்தம் எங்களுக்கும் கேக்கும். நாங்கள் பெரிசா கதையில்லை. அண்டைக்கு விடிய பேஸ்புக் பாக்கேக்கதான் அந்த வீடியோ தட்டுப்பட்டிது. உடனேயே ஓடிப்போய், அவையிட்ட ' குழந்தைக்கு அடிச்சியளோ? எண்டு கேட்டுக் கொண்டிருக்க அங்க, ஜீ.எஸ்ஸும் வந்திட்டார். அவர் பிறகு பொலிஸுக்கு சொல்லித்தான் , அவாவை அரஸ்ட் பண்ணினது என்கிறார் அயலவர் ஒருவர்.

## சந்தேகம் 1

மேரி கனிஸ்டா, தந்தை, தம்பி என்று அந்தக் குடும்பத்தில் இருக்கும் எல்லோரும் ஏன் வெவ்வெறு விதமான கதைகளைச் சொல்கிறார்கள்? ஏதோ ஒரு சட்ட விரோதமான காரியத்தை திட்டமிடாமல் செய்து விட்டு மறைக்க முயல்கிறார்களா? இல்லையேல் போதிய கல்வியறிவு இல்லாததால், குழந்தைக்கு அடித்த குற்றத்தை மறைக்க நினைத்து தடுமாறுகிறார்களா?

## என்னவோ இருக்கு!

" அந்தக் குடும்பத்தில வேற ஏதோ சிக்கல் இருக்கு. எல்லாரும் ஆளுக்கொரு கதை. முதல்ல ஆவணங்கள் இல்லை எண்டுச்சினம். பிறகு பார்த்தால், பிள்ளையின்ர பாஸ்போர்ட் எல்லாம் இருக்கு. திருகோணமலையில இருந்து கொரோனா காலத்தில இங்க ஏன் வந்தவை ? இப்பவும் ஹொஸ்பிட்டல்ல குழந்தையையும் தாயையும் வைச்சிருக்கு. மெடிக்கல் ரிப்போர்ட்டில குழந்தைக்கு ஏதும் உட்காயம் அப்பிடி ரிப்போர்ட் வந்தால் தாய்க்கு சிக்கல் தான்" என்கிறது பொலிஸ் தரப்பு.

## சந்தேகம் 2

மேரி கனிஸ்டாவின் கணவர் குவைத்தில் இருக்கிறார். குழந்தை மேல் பாசம் கொண்டவர் என்றும் சொல்கிறார்கள் அப்படிப்பட்டவர் குடும்பச் செலவுக்கு வெறும் 2700 ரூபா மட்டும் அனுப்பியது ஏன்? ஒருவேளை அவருக்கும், மேரி கனிஸ்டாவுக்கும் இடையிலான உறவு கசந்துவிட்டதா? அதனால் தான் அங்கிருந்து குழந்தையோடு வந்தாரா மேரி?

(24ஆம் பக்கம் பார்க்க...)






# அழகனும் அரக்கனும் அவனே!

ஆர்.பிரகாஷ்

சிங்கத்தின் கொடும் பிடியில் இருந்து தப்பிச்சென்று ஒரு யானையிடம் அடைக்கலம் கேட்டது சிறு முயல். ஆரம்பத்தில் அடைக்கலம் கொடுத்த அந்த யானை கொஞ்சக் காலத்தின் பின்னர், 'இனி உன்னை அந்தச் சிங்கம் பிடிக்காது. நீ அங்கு செல்லவேண்டும். சிங்கத்துடன் இணைந்து வாழ வேண்டும்' என்று தெரிவித்து தன் ஆதரவைத் திரும்பப் பெற்று வலுக்கட்டாயமாக முயலை சிங்கத்திடம் அனுப்பிவைத்தது. கொலைவெறியுடன் இருந்த அந்தச் சிங்கம் தன் கட்டுப்பாட்டில் முயல் வந்த மறுகணமே அடுத்தவேளை உணவாக அதை மாற்றியது. இப்போது எமது கோபம் சிங்கத்திடமா? அல்லது யானையிடமா? உண்மையில் இங்கு சிங்கத்தை விடவும் யானைதான் ஆபத்தானது. அந்த யானைதான் டென்மார்க்.

டென்மார்க் என்றதும் எம் மனக்கண்முன் விரிவதென்ன?. மிகச் சிறந்த பொருளாதார வளர்ச்சிகொண்ட ஐரோப்பிய நாடு.

உலகின் அழகான நாடுகளின் பட்டியலில் முதல் பத்து இடங்களுக்குள் இருக்கும் நாடு. அமைதியான நாடு. இவைதானே. ஆனால், டென்மார்க் கொடூரமானது. இரக்கமற்றது. சுயநலத்தின் உச்சக்கட்டத் தன்மையை தன்னகத்தே கொண்டது என்றால் அதை உங்களால் நம்ப முடிகின்றதா?. அதுதான் உண்மை. டென்மார்க்கின் மறுபக்கம் இரசிக்கும் படியாக இம்மியும் இல்லை. அது அரக்கத்தனம் மிக்கது.

உலக்உலா

மத்திய கிழக்கு நாடான சிரியாவில் போர்க் கலாசாரத்துக்கு பஞ்சமில்லை. ஒரு முனையில் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்), மறுமுனையில் அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்கள், பிறிதொரு முனையில் ஈரான், துருக்கிப் படையாட்டம் என்று சிரியாவில் எண்ணற்ற சிக்கல்கள். இதனால் ஏற்பட்ட வன்செயல்கள் மற்றும் போர் காரணமாகப் பல லட்சம் சிரியர்கள் அகதிகளாக உலகின் பல்வேறு முனைகளுக்கும் சென்றார்கள். இவ்வாறு டென்மார்க் சென்று அங்கு தஞ்சமடைந்தவர்களை திருப்பி அனுப்பும் அறிவிப்பை விடுத்துள்ளது அந்த நாடு. 'அகதிகள் இல்லாத டென்மார்க்' என்ற திட்டத்தின் கீழ் இந்த இரக்கமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிரியாவில் போர் முடிந்துவிட்டது என்று காரணம் கூறித்தான் சிரியர்களை டென்மார்க் மீண்டும் தாயகம் அனுப்பவுள்ளது. கேள்வி என்னவெனில், சிரியாவில் போர் முடிந்துவிட்டது என்று டென்மார்க் எந்த அடிப்படையில் முடிவெடுத்தது என்பதுதான்?. அமெரிக்க அதிபராகப் பைடன் பொறுப்பேற்ற பின்னர் அவரது ஆணையில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதல்கூட சிரியாவில்தான் இடம்பெற்றது. சிரியாவில் இயங்கிய ஈரான் ஆதரவுக் கிளர்ச்சிக் குழுக்களின் தளங்களைத்தான் பைடன் தன் முதல் தாக்குதல் நடவடிக்கையாக அழித்தார். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு சிரியாவில் இருந்து ஓரளவு தோற்கடிக்கப்பட்டுவிட்டதுதான். ஆனால் அதைவிடப் பெரும்பிரச்சினை சிரியாவின் உள்நாட்டுப் பிரச்சினை.

சிரியாவில் சியா, சன்னி முஸ்லிம் இனக் குழுமங்களிடையே இடம்பெற்று வரும் மோதல்தான் யூதர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் அடுத்தபடியான பெரிய பகைமை. சிரிய அதிபரும் சியா பிரிவைச் சேர்ந்தவருமான அல் அசாத் தரப்பால் சன்னி முஸ்லிம்களுக்கு எதிரான இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு அங்கு தற்போதும் பஞ்சமில்லை. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் சன்னிப் பிரிவினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொடூரங்களை விடவும் சியா பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரங்கள் பல மடங்கானவை. இதை சிரியாவில் மீட்புப் பணியில் ஈடுபடும் 'வைட் ஹெல்மட்ஸ்' என்ற தன்னார்வ அமைப்பு ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகள் மூலமாகத் தெளிவுபடுத்தியுள்ளது. அத்துடன் சிரியாவில் சன்னி இனத்தவருக்கு எதிரான அடக்குமுறை இனச்சுத்திகரிப்புக்கான பாடப்புத்தகம் என்று ஐ.நாவும் விமர்சித்திருந்தது. இவ்வாறு பாரதூரமான அளவுக்கு இந்த இன விரிசல் புரையோடிப்போயுள்ள நிலையில், தன்னிடம் அடைக்கலம் புகுந்துள்ள சன்னி முஸ்லிம்களை டென்மார்க் மீண்டும் கொண்டுசென்று சிரியாவில் (சியாக்களிடம்) விடுவதென்பதை என்னவென்று சொல்வது?. சன்னிகளை பொறுத்தவரை அவர்களுக்குத் தற்போது பேராபத்து சியா அல்ல டென்மார்க்கே.

# இடைவேளையே, முடிவல்ல!



மயூ

தமிழக சட்டமன்றத் தேர்தல் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடக்கவிருக்கும் நிலையில், அதிர்வெடி ஒன்றை வீசியிருக்கின்றார் ஜெயலலிதாவின் தோழியும், அவரது மறைவுக்குப் பின்னர் ஆதரவாளர்களால் 'சின்னம்மா' என்று கொண்டாடப்பட்டவருமான சசிகலா.

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறை சென்ற அவர், தண்டனைக் காலம் முடிந்து இப்போது வெளியே வந்திருக்கின்றார். தேர்தல் காலத்தில் அவர் விடுதலை பெற்று வந்துள்ள நிலையில், தேர்தல் முடிவுகளில் இது தாக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சிறையில் இருந்து வந்த சசிகலா, அமைதியாக இருந்தபோதும், அரசியல் சந்திப்புக்களை நடத்திக்கொண்டுதான் இருந்தார். சசிகலாவை மீண்டும் அ.தி.மு.கவில் இணைப்பது சாத்தியமற்ற விடயம் என்று தமிழக முதலமைச்சரும், அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிச்சாமி பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். அதனால் அ.தி.மு.கவில் உள்ள சசிகலா ஆதரவாளர்கள் சசிகலா தலைமையில் தனி அணியாக உருவாவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அ.தி.மு.க. தலைமைக்கும் அந்த அச்சம் இருந்தது. அதனால் தனது கட்சி முக்கியஸ்தர்கள் சசிகலாவுடன் தொடர்புகளைப் பேணுவதைத் தடுத்து வந்த எடப்பாடி பழனிச்சாமி, சசிகலாவுக்கு ஆதரவானவர்கள் என்று கருதியவர்களின் பதவிகளைப் பறித்து காற்றை இறக்கினார்.

அனைவரும் சசிகலாவின் நகர்வுகளை அச்சத்துடன் உற்று நோக்கிக் கொண்டிருக்க, அரசியலில் இருந்தே விலகுகின்றேன் என்று திடுதிடுப்பென அறிவித்திருக்கின்றார் சசிகலா.

"ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளான அம்மாவின் உண்மைத் தொண்டர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒற்றுமையுடன் வரும் தேர்தலில் பணியாற்றிட வேண்டும்.

நம்முடைய பொது எதிரி, தீய சக்தி என்று அம்மா நமக்குக் காட்டிய திமுக வை ஆட்சியில் அமரவிடாமல் தடுத்து, விவேகமாக இருந்து அம்மாவின் பொற்கால ஆட்சி தமிழகத்தில் நிலவிட அம்மாவின் தொண்டர்கள் பாடுபட வேண்டும். நான் என்றும் பதவிக்காகவோ, பட்டத்துக்காகவோ, அதிகாரத்துக்காகவோ ஆசைப்பட்டதில்லை. புரட்சித் தலைவியின் அன்புத் தொண்டர்களுக்கும் தமிழக மக்களுக்கு நான் என்றென்றும் நன்றியுடன் இருப்பேன்" என்று சசிகலா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார்.

சசிகலாவின் இந்த அறிக்கை தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. சசிகலாவின் இந்த முடிவுக்கு ஒரு சில காரணங்களை ஊகிக்கலாம். அ.தி.மு.க. இந்தத் தேர்தலில் பா.ஜ.கவுடன் கூட்டணியமைக்கின்றது. சசிகலாவின் வருகையால் அ.தி.மு.கவின் வாக்குவங்கி சரிவதை பா.ஜ.க. விரும்பாது. ஏனெனில் தமிழகத்தில் காலூன்ற முடியாது தவிக்கும் பா.ஜ.கவுக்கு தங்கள் எதிர்கால நடவடிக்கைகளுக்கு அ.தி.மு.க. கட்டாயம் தேவை. அதனால் ஏற்கனவே சொத்துக் குவிப்பு வழக்கில் சிறை சென்று மீண்டிருக்கும் சசிகலாவுக்கு, மத்தியில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க. அழுத்தம் கொடுத்திருக்கலாம் என்பதையும் மறுக்க முடியாது. இன்னொன்று, சசிகலாவின் தற்காப்புப் பின்னகர்வாகவும் இது இருக்க முடியும்.

சசிகலா சிறைக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் அ.தி.மு.கவின் அதிகார பலத்தை எடப்பாடி பழனிச்சாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கைகளுக்குள் எடுத்துக் கொண்டிருந்தனர். சிறையில் இருந்து வந்தவுடன் அவசரப்பட்டு மூக்குடைபடுவதற்கு சசிகலா விரும்பாது இருக்கலாம். சட்டமன்றத் தேர்தல் முடிவுகளைப் பார்த்து அதன்பின்னர் மெல்ல மெல்ல தனது நகர்வுகளை ஆரம்பிக்க அவர் திட்டமிட்டிருக்கலாம். ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியாக இருந்து இத்தனை ஆண்டுகள் அரசியலில் புகுந்து விளையாடிய சசிகலா, இத்தனை இலகுவாக அரசியலை விட்டு ஒரேடியாக ஒதுங்குவார் என்று எதிர்பார்க்க முடியாது. இது அவரது ஓய்வு அல்லது கணிப்புக் காலமாக இருக்கும் என்றே தோன்றுகின்றது. தனது பலத்தை அதிகரித்துக் கொண்டு மீண்டும் அவர் அரசியலில் இறங்கக்கூடும். ஆக, இது இடைவேளைதான், முடிவு அல்ல.




## பொது அறிவு

1. கறுப்பு முட்டை இடும் உயிரினம்
**தவளை**

2. நித்திரையே கொள்ளாத உயிரினம்
**எறும்பு**

3. நிறத்தைப் பார்க்கும் சக்தியுடைய பறவை
**ஆந்தை**

4. நீரை அருந்தாத நீர்வாழ் உயிரினம்
**டொல்பின்**

5. நுரையீரல் இல்லாத உயிரினம்
**எறும்பு**

வி.ஹரிஸ், தரம் 1
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

# உண்மையே என்றும் வெல்லும்

ஓர் ஊரில் தாசன், நேசன் என்ற இரு நண்பர்கள் வாழ்ந்து வந்தனர். தாசன் மற்றும் நேசனின் வேலை தேங்காய் விற்பது ஆகும். அவர்கள் இருவரும் தமக்குத் தேவையான தேங்காய்களை பறித்துக் கொண்டு வந்து விற்பனை செய்வார்கள். இவர்கள் இருவரின் கடைகளும் எதிரெதிரே உள்ளன.

ஆகையால் இருவருக்கும் வருமானம் குறைவாகவே வரும். வேலை காரணமாக இவர்களுக்கு இடையில் சண்டை ஏற்பட்டது. ஒருநாள் தாசன் தேங்காய் வாங்குவதற்கு வரும் அனைத்து நுகர்வோரும் தனது கடைக்கு மட்டுமே வரவேண்டும் என நினைத்தான். ஆகையால் நேசன் கடைக்கு செல்வோர்களிடம் இவன் பழுதடைந்த தேங்காய்களையே உங்களுக்கு விற்கிறான் என்று கூறுவான். இதனால் நேசன் கடைக்கு எவரும் செல்வதில்லை.


எல்லோரும் தாசன் கடைக்கு மட்டுமே செல்வார்கள். இதனால் பேராசை அடைந்த தாசன் அவ்வப்போது பழுதடைந்த தேங்காய்களையும் ஏமாற்றி விற்பான். ஆனால் நேசனோ தன் கடையை மூடாமல் யாராவது என் கடைக்கு வந்து உண்மையை உணர்வார்கள் என்ற நம்பிக்கையோடு இருந்தான். ஒருநாள் ஒரு பெரியவர் இதை அவதானித்தார். அவர் நேசனின் கடைக்குச் சென்றார்.

அப்போது அவருக்கு மற்றவர்கள் அங்கு செல்ல வேண்டாம் என்று அவருக்குக் கூறினார்கள். ஆனால் அப்பெரியவர் அவர்களின் கதையை கேட்க வில்லை. நேசனி டம் சென்று ஐந்து தேங்காய்களை பணம் கொடுத்து வாங்கி அத் தேங்காய்களை அவ்விடத்திலேயே உடைத்து அனைவருக்கும் காண்பித்தார். அத் தேங்காய்கள் பழுதடைந்தவை அல்ல. அனைத்தும் நல்ல தேங்காய் என்பதை அனைவரும் விளங்கிக் கொண்டனர். அதேபோல் தாசனின் கடையிலும் ஐந்து தேங்காய்களை வாங்கி அவற்றை உடைத்துக் காண்பித்தார். அத்தேங்காய்கள் பழுதடைந்து காணப்பட்டன. அங்கிருந்தோர் தம் தவறை உணர்ந்தார்கள். அப்பெரி யவர் உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்பட்டதற்கு பரிசாக நேசன் அவரைத் தனது நிறுவனத்தில் வேலைக்குச் சேர்த்தான். தாசனின் பேராசையால் அவன் தன் கடையை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது.

## வழிகாட்டிடுவோம்



## பொருத்தமான பாகத்தை கண்டுபிடிப்போம்




## விடுகதை

1. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும். அவன் யார்?
தேள்
2. பிடுங்கலாம், நடமுடியாது. அது என்ன?
தலைமுடி
3. உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான்? அவன் யார்?
வெங்காயம்
4. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
கரும்பு
5. மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல அது என்ன?
விழுது
6. படபடக்கும், பளபளக்கும், பண்டிகை வந்தால் வானில் பறக்கும். அது என்ன ?
பட்டாசு
7. சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது அது என்ன?
கண்
8. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி? அவள் யார்?
முட்டை
9. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ. அது என்ன?
சிரிப்பு
10. கன்று நிற்க, கயிறு மேயுது. அது என்ன?
பூசனிக்கொடி

சி.பிருத்திவிகா, தரம் 3
யாழ்.ஜோன். பொஸ்கோ வித்தியாலயம்

## பிஞ்சு தூரிகைகள்

நி.மகீஷா
தரம்-5
ஆலடி வீதி, தோணிக்கல்,
வவுனியா





கே.விஜிதா,
தரம்-6
SOS சிறுவர் கிராமம்,
யாழ்ப்பாணம்.


ஜெ.நவாசினி,
தரம்-7
யா/ இந்து மகளிர்
கல்லூரி.



வ.மதுஜா
தரம்-7
யா/ இந்து மகளிர்
கல்லூரி.

லி.லக்ஷிகன்,
தரம்-10A
யாழ். இந்துக் கல்லூரி.





# கவிதைகள்

37



கடவுளின் கோலமாக
வந்த தேவதை இவள்
இவள் வரைந்த கோலத்தை விடவுமா
தெய்வத்துக்கு காணிக்கை தேவை
அந்த தெய்வத்திற்கு கூட
தேவதையின் கிறுக்கல்கள் காண ஆசையோ
இன்று பிஞ்சு விரல்களின் கோடுகளால்
நாளை சட்டங்கள் கூட நிறைவேற்றப்படலாம்

**நிதர்சினி**, *வவுனியா*

**நித்தம் மாறும் உலகில்
நிலைப்பது என்றும் இறையன்பே
முத்தாய் அழகு கோலங்கள்
முன்னவர் அளித்த பண்பாடே
வார்த்தைகள் உரைக்காத இன்பமென
வாழ்வது ஆண்டவன் சந்நிதியே
பெண்ணவளும் சின்னவளும் மாவினால் இட்ட
மங்களம் உணர்த்தும் கை வண்ணமே**

*சிவரம்யா, யாழ்ப்பாணம்*

**கோயில் வீதியிலே
கோலமிடும் வண்ணப்பூவே
விளையாட்டை மறந்து
புள்ளிக் கோலமிடும் சின்னஞ்சிறுமியே
எமது கலாசாரத்தை காத்து
முழுப் பாவாடையுடன் கோலமிடும்
முழு நிலாவே உன்னால்
எம் பண்பாட்டை பார் போற்றும்**

**பி.ஆதிரை**
*யா மகாஜனாக் கல்லூரி*

மூவுலகம் படைத்த
முக்கண் வேந்தனும் - தன்
மணி மண்டபம் விடுத்து
மண் மீதிலே வந்திடுவான்
மழலை இவளின்
மா கோலம் காண

**யாழினி அலோசியஸ்**
*பருத்தித்துறை*

பட்டுடை உடுத்தித் தமிழ்
பண்பாடு புதைந்து போகும்
பொழுதுகளில் சின்னப்பூவே
வண்ணக் கோலங்கள் போட்டு
தமிழர் பண்பாடு காக்கும்
தமிழுணர்வின் சொத்து நீயம்மா
உன் வாழ்வு வளமாகட்டும்
எம் பண்பாட்டுக் கோலம் போடும்
முத்தே வாழி

**முல்லையூர் கர்மயோகி**

கோலம் ஒன்று
கோலமிடுகிறது....!
அலைபேசியின் வலையமைப்பில்
சிக்கித் திளைக்கும் மழலைகள்
மத்தியில் இங்கே ஒரு
கலைமகளின் கைவண்ணம்...!
ஆலய இறையருள் அருளிருக்க,
அன்புத் தாயவள் அணைத்திருக்க
மெய்மறந்து உய்யுமிந்த
கோலக் கலைமகள்
ஜாலம் அழகு!
இந்தத் தமிழ் மாண்பின்
தளிர் மகளாள் எம் மண்ணில்
தழைத்து மிளிர்வாள்.....!

**மானியூர் ரட்ணேஸ்**

கோயில் வீதியில்
வண்ணக்குழந்தையின்
எண்ணக்கோலம் எம்மினத்தின்
அடையாளம்
தாயும் பிள்ளையுமாய்
மாக்கோலமிட்டும்
பூக்கோலமிட்டும்
மகிழ்ந்த எம் தேசத்தின் சிறப்பு
இன்று கோலங்கலெல்லாம்
கொஞ்சம் கொஞ்சமாய்
அருகிவரும் நிலையிது

**- சிவேஸ்**

**பரிசு பெறும் கவிதை**

**கோபுரப் பின்னணியில் கோலமிடுகிறாள்
ஒரு குட்டி குலவிளக்கு !
குங்குமத்தைக் குழைத்தெடுத்த
வண்ணத்திலோர் பட்டாடை ;
கொலுசு கொஞ்சும் பிஞ்சுப்பாதம் ;
கூர்ந்த விழி, பட்டுவிரல் கோலம்;
வஞ்சமில்லாப் பேரழகு, வாழ்த்த ஒரு வானம்.
வேறுயாருக்கோ - வேலையென்ன அங்கே?**

**சாரங்கா**

வர்ணக்கோலமிடும் குறுநகை நீ
வாழ்த்திடும் தலைமுறை நாம்!
பூவாய் மலர்ந்திடும் உன் புன்னகையில்
இன்னும் வளர்ந்திடும் கோபுரம்!
சிறுவிரல் கொண்டு நீ பூக்கோலம் இட
மனம் அது மகிழ்ந்திடும்!
இச்சிறுமி வேண்டுதல் கேட்டு நீ
இன்னருள் கொடுத்திடு இறைவா!

**ராம்**

பண்பாடு மறந்த இவ் உலகில்
பண்பாக கோலமிடுகிறாள்
பாவையவள்
ஆலயம் அங்கே
திருவிழாக்கோலத்திலே
உண்மையான திருவிழா
இதுவல்லவோ
கலாச்சாரத்தை மீட்டுகிறாள்
இந்த கடைக்குட்டி சிறுமி .....

**த.சங்கீதன்**, வரணி

## மௌன மொழி

38



கவிதைக்கு பரிசு 1000/=

**உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:**
12.03.2021

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

## விடியலை தேடி....



**ஓ பெண்ணே
கொஞ்சம் செவிமடு
குருதி சிந்தி
தசை கிழித்து
நாடி நரம்புகள்
வலியுணர்ந்திட
தாய்மையை உனதாக்கி
உயிரை உலகுக்களித்து
உன்னதம் செப்பினாய்
வேறென்ன வேண்டும்
உன் தரம் சொல்ல?**

நீயோ
ஊமையாகும் உணர்வுகளோடு
ஊனமற்ற பிறவியாய்
எழுதா விதிகளை
நிரந்தரமில்லா நியதிகளை
எழுத்தெண்ணிப் படிக்கிறாய்

தலையணைக்குள் புதையும்
முகத்தின் சுவாசம் – என்
சோகம் சொல்கிறது
அதிகார வசனத்தின்
முற்றுப்புள்ளி உன்முதுகில்
இடப்படுகிறது
நீ தேடும் உரிமைகள்
உனக்குள்ளே தொலைகிறது
உன் சிலுவையின் ராகமது
உனக்கே புரிவதில்லை
உருவாக்கிய தோப்பு அல்ல
உயிர்மையான இயற்காடு நீ
இடர் கொண்டு அழலாமா
இனியாவது உணர்ந்திடு

மனதில் திடம் கொள்
மயக்கத்தில் தெளிவாகு
மாயையில் வாழாதே
மாற்றத்தை உனதாக்கு...

**உடுவிலூர் கலா**

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பூச்சிய வரைபு தொடர்பில்....

கடந்த செவ்வாய்க்கிழமை கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் இது குறித்து விரைவில் தமது கட்சி நிலைப்பாட்டை அறிவிக்கும்" என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் ஏற்கனவே விக்னேஸ்வரன் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துவிட்டார்.கஜேந்திரகுமார் தனது நிலைப்பாட்டை அண்மையில் தெரிவித்திருக்கிறார்.அதுதொடர்பாக அவர் வழங்கிய ஒரு நேர்காணலில் பூச்சிய வரைபுக்கு எதிராக மூன்று கட்சிகளையும் இணைப்பதற்கு தமிழ் சிவில் சமூக அமையம் எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

முன்னைய கடிதத்தின் தொடர்ச்சியாக பூச்சிய வரைபு குறித்த தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைப்பதற்கு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கடந்த வாரம் முழுவதும் முயற்சித்தார்கள். கூட்டமைப்பு இதுவிடயத்தில் தொடக்கத்திலிருந்து பின்னடித்தது.எனவே ஏனைய இரண்டு கட்சிகளையும் ஒரு பொது உடன்படிக்கைக்கு கொண்டுவர முயற்சிக்கப்பட்டது.எனினும் அந்தப்பொதுவரைபில் 13ஆவது திருத்தம் தொடர்பில் அந்த இரண்டு கட்சிகளையும் உடன்படவைக்க முடியவில்லை. இதுவிடயத்தில் இரண்டு தரப்பையும் ஒரு பொதுப் புள்ளியில் சந்திக்க வைப்பதற்கு சிவில் சமூகத்தவர்கள் முயற்சித்தார்கள். ஆனால் அது வெற்றி பெறவில்லை.எனவே அரசியல் கட்சித் தலைவர்களுடைய கையெழுத்துக்கள் இன்றி ஒரு அறிக்கையை தமிழ் சிவில் சமூக அமையம் தனது பெயரில் வெளியிட்டது.அந்த ஆவணம் வெளியிடப்பட்டபின் கஜேந்திரகுமார் தன்னுடைய கட்சியின் அறிக்கையை வெளியிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் ஜெனிவாவை நோக்கி ஒரு பொதுக் கோரிக்கையை முன்வைத்த மூன்று கட்சிகளாலும் அதன்பின் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான மக்கள் பேரணியில் ஒன்றாகப் பங்குபற்றிய மூன்று கட்சிகளாலும் பூச்சியவரைபு தொடர்பில் ஒரு பொது உடன்படிக்கைக்கு வரமுடியவில்லை. இது ஒரு பின்னடைவே.தமிழ்க் கட்சிகளை கொள்கை அடிப்படையில் ஒன்றாகத் திரட்டுவது இப்போதைக்கு அம்புலிமாமாக் கதையே. குறைந்தபட்சம் விடயங்களை மையமாகக் கொண்டு தற்காலிகக் கூட்டுக்களையாவது உருவாக்கலாமா என்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் பாடுபட்டார்கள்.அவ்வாறு உழைத்ததன் விளைவே ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு பொதுக்கோரிக்கை ஆகும்.

அது கடந்த பத்தாண்டுகளில் எட்டப்பட்ட ஒரு முக்கிய அடைவும் ஆகும். ராஜதந்திர வட்டாரங்களிலும் ஐ.நா.வட்டாரங்களிலும் அந்தக் கடிதம் உற்றுக் கவனிக்கப்பட்டது. ஆனால் அந்த வெற்றியை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்த்துச் செல்ல முடியவில்லை என்பதைத்தான் பூச்சிய வரைபு தொடர்பான தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாடு வெளிப்படுத்தியிருக்கிறதா ?



**மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்**
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)



# நலம் அறிய...

எனக்கு 45 வயது. டுபாயில் வீட்டுப் பணிப் பெண்ணாக உள்ளேன். எனக்கு கடந்த 2 மாதத்தில் 4 கிலோ உடல்நிறை. குறைவடைந் துள்ளது. அத்துடன் இதயப்படபடப்பு தன்மை யும் சில மாதங்களாக உள்ளது. இவை தவிர எரிச்சல், மனச்சோர்வு, பதற்றமாக உள்ளது. வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. கொரோனாவின் நிமித்தம் முன்னர்போல இல குவாக வைத்தியசாலைக்கு இங்கு செல்ல முடியவில்லை. தயவுசெய்து இந்தக் கேள் வியை உதாசீனம் செய்யாமல் பதிலளியுங்கள். எனது நண்பர் மனநல டாக்டரிம் கவுன்சிலிங் செய்யச் சொல்கிறார். குழம்பிப் போயுள்ளேன்.

**பாத்திமா றிபானா**, டுபாய்.

உங்களின் முன்கழுத்துப் பகுதியில் கீழ்ப் பகுதி யில் உள்ள ஒரு வண்ணத்துப் பூச்சி வடிவிலான சுரப்பி தைரொயிட் என்று அழைக்கப்படும்.
இதன் முக்கிய பங்கு உடலில் தைரொயிட் என்னும் ஹோர்மோனை சுரப்பது. தைரொயிட் ஹோர் மோன் இரத்தம் மூலமாக உடலின் அனைத்து திசுக்களில் வளர்சிதை மாற்றத்தை (Metaboliam) நிர்வகிக்கின்றது. தைரொயிட் சுரப்பியின் செயற் பாடு மூளையால் கட்டுப்படுத்தப்படுகிறது. நாம் உணவில் சேர்க்கும் அயடீனைப் பயன்படுத்தியே முக்கிய ஹோர்மோன்களை (T4, T3, Tsh) தைரொ யிட் சுரப்பி உருவாக்குகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
தைரொயிட் உடலில் குறைவாகச் சுரப்பினும், (Hypothyroid) கூடுதலாக சுரப்பினும் பிரச்சினை கள் உருவாகின்றன. ஒப்பீட்டளவில் பெண்களே அதி கம் பாதிக்கப்படுகின்றனர்.

## தைரொயிட் சுரப்பின் அறிகுறிகள்

| தைரொயிட் சுரப்பின் அளவு அதிகரித்தல் ஹைப்பர் தைரொயிட் Hyperthyroid | தைரொயிட் சுரப்பின் அளவு குறைதல் ஹைப்போ தைரொயிட் Hypothyroid |
|---|---|
| • பதற்றம், கைநடுக்கம் | • எளிதில் உடற்சோர்வு |
| • அதிகமாக வியர்த்தல் | • அதிக குளிரை உணர்தல் (Cold intolerance) |
| • உடல் நிறை குறைவு | • உடல் எடை கூடுதல் |
| • தூக்கமின்மை | • ஞாபக மறதி |
| • முடியுதிர்வு | • மனச்சோர்வு |
| • அடிக்கடி மலம் கழித்தல் | • மலச்சிக்கல் |
| • தசைகள் நலிவடைதல் | • மாதவிடாய்ப் பிரச்சினைகள் (நீடித்தல்) கருச்சிதைவு, கர்ப்பம் தரிப்பதில் பிரச்சினை |
| • வெப்பத்தை தாங்க முடியாத நிலை (heat intolerance) | • வறண்ட சருமம் |
| • வேகமான இதயத்துடிப்பு | |
| • உடலுறவில் நாட்டமின்மை | |

## Hypothyroidism– ஹைப்போ தைராய்டிசம்

**இது போதுமான ஹோர்மான் சுரக்கா மலிருக்கும் நிலை. ஆட்டோ இம்யூன் வியாதிகள் (Auto immune disease), பரம் பரை யில் தைரொயிட் பிரச்சினைகள் இருப்பது, பிறப்பின்போது தைரொயிட் சுரப்பி யில் குறைபாட்டுடன் பிறத்தல், மிகவும் அதிக/ குறைவான அயடீன் உட் கொள்கை- முதலியவற்றால் ஏற்படலாம்.**

**சிகிச்சை :**
**மருத்துவ ஆலோசனைப்படி கிரமமான அளவில் மருந்து உட்கொள்வது. 2 மாதங்கள் கழித்து இரத்தப் பரிசோ தனை செய்யப்பட்டு மருந்தின் அளவுப் பிரமாணம் உறுதிப்படுத்தப்படும். இதன் பின்னர் 6 மாதத்துக்கு ஒரு தடவை இரத்தப் பரிசோதனை மேற் கொள்ளல் போதுமானது.**




**தைரொயிட் கட்டிகள்**
**காரணங்கள் கண்டறியப்படவில்லை.**
கழுத்தில் வலி, மூச்சு விடுவதில் சிரமம். குரலில் மாற்றம் ஏற்படின் மருத்துவரை அணுகவும். புற்றுநோய் இல்லை என உறுதிப்படுத்தவும்.

## ஹைப்பர்தைரொய்டிஸம் (Hyperthyroidism)


**உடலின் தேவையை விட அதிக தைரொய்ட் ஹோர்மோன் சுரக் கும் நிலை. இந்த நிலைமையில் உடற் செயற்பாடுகளின் வேகம் அதிகரிப்பதால் (இதன் அறிகுறி கள் மெதுவாக ஆரம்பித்து முன் னேறுவதால்)மனவருத்தம்/ பதற் றம் என தவறாக புரிந்து கொள்ள நேரிடலாம். கிரேவ்ஸ் நோய் எனப்படும் நோயால் பொது வாக ஏற்படுகிறது. இது தவிர தைரொ யிட் சுரப்பியில் ஏற்படும் கட்டி, (Inflammation) எரிவு/ தொற்று என்பவையும் காரணமாக அமையலாம்.**

**சிகிச்சை: மருந்து, அறுவைச்சிகிச்சை, கதிர்வீச்சு.**


**மருந்துக்கள் : நோயின் தன்மை மாறும் காரணத்தைப் பொறுத்து மருந்துகளும் மாறுபடும்.**

## தைரொயிட் நோய்க்கு வாய்ப்பு அதிகமுள்ளவர்கள்

- பெண்கள்
- 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்
  auto immune disease
- பரம்பரையில் தைரொயிட் பிரச்சினை இருத்தல்
- உணவில் அயடீன் சேர்க்கை குறைவு
- தைரொயிட்டில் அறுவைசிகிச்சை
- கழுத்தில் கதிர்வீச்சு, சிகிச்சை செய்திருத்தல்
- கர்ப்பகாலம்.



**அயோடின்:**
தைரொயிட் ஹோர்மோனின் உற்பத்திக்கு அவசி யமானது!!! உணவிலிருந்து மட்டுமே இதைப் பெற் றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக கர்ப்பகாலத்தி லும் பாலூட்டுகையிலும் அயடின் மிக மிக அவசி யம். சமையல் உப்பை வாங்கும் போது அதில் அயடின் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை அவதானிக்கவும்.




## தைரொய்ட்டால் ஏற்படும் பிற பிரச்சினைகள்

**தைரொயிட் கொய்டர்**
**Goitre**
**தைரொயிட் சுரப்பி பெரிதாவது**
காரணம்: அயடீன் பற்றாக்குறை
auto immune disease
Inflammation of thyroid
தைரொயிட் சுரப்பியை கழுத்தில் வெளித்தள்ளியவாறு பார்க்க முடிந்தால் உடனடியாக மருத்துவரை அணுகவும்.

**தைரொயிட் எரிவு (Inffammation)**
செல்கள் எரிவுக்கு உள்ளாகும்போது அதன் வீரியத்தைப் பொறுத்து பாதிப்படையும்.
காரணம்: (Infection) தொற்றுக்கள்.

**தைரொயிட் புற்றுநோய் (Cancer)**
பெரும்பாலும் அறுவைச்சிகிச்சை அளித்து குணமாக்கலாம். பொதுவாக இப்புற்றுநோய்க்காக அறிகுறிகள் வெளிப்படுவது குறைவு. குடும்பத்தில் யாருக்கும் இருப்பின் உங்களுக்கும் ஏற்பட வாய்ப்புண்டு. குரலில் மாற்றம், மூச்சுவிடுவதில் சிரமம், விழுங்குவதில் சிரமம் ஏற்படலாம்.

இனி உங்களது கேள்விக்கு வருவோம் மன நல மருத்துவரை அணுகும் முன்னர், அடிப் படையில் உங்களுக்கு ஏதும் பிரச்சினை யில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் உங்கள் தைரொயிட்டின் அளவு குருதியில் பரிசோதிக்கப்படுவது அவசியம். அதன் முடிவுகளின் அடிப்படையில் நீங்கள் இலகு வாக உங்கள் பிரச்சினையை தீர்த்துக் கொள் ளலாம்.

# அறிந்தும் அறியாமலும்





## இனி இல்லை கோத்தா!

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடக்க இன்னும் மூன்று ஆண்டுகள் இருக்கின்றன. ஆனாலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமது ஜனாதிபதி வேட்பாளர் 'சஜித் பிரேமதாசதான்' என உறுதியாக இப்போதே அறிவித்துள்ளது.

அப்படியானால் ஆளுங்கட்சியின் வேட்பாளர் யார்? என்ற கேள்விகளும் எழத் தொடங்கியுள்ளன. இலங்கை அரசமைப்பின் பிரகாரம் நபரொருவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை இரு தடவைகள் வகிக்கலாம். அந்தவகையில் 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தற்போதைய ஜனாதிபதி கோத்தாபயவுக்கு வாய்ப்பு இருந்தாலும், அவர் போட்டியிடமாட்டார் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

பங்காளிக்கட்சித் தலைவர்கள் சிலருடன் அண்மையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலொன்றின்போது, அடுத்த தேர்தலில் தான் போட்டியிடமாட்டேன் எனவும், பொருத்தமான வேட்பாளர் ஒருவரைத் தயார்ப்படுத்துமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் என கொழும்பு அரசியல் களத்தில் பரபரப்பாக பேசப்படுகின்றது.

இலங்கை அரசியலில் புரட்சியை ஏற்படுத்தி புதியதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இலக்காக இருக்கின்றது. எனினும், அதனை நோக்கி பயணிப்பதற்கு பல தடைகள் இருப்பதாலும், மேலும் சில காரணங்களாலுமே ஜனாதிபதி இவ்வாறானதொரு அறிவிப்பை விடுத்திருக்கக் கூடும் என ஊகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக கோத்தாபய ராஜபக்ச களமிறங்காவிட்டால், பஸில் ராஜபக்சவே போட்டியிடுவார் எனவும் கூறப்படுகின்றது. எனினும், புதிய அரசமைப்பின் ஊடாக என்னென்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதை அடிப்படையாகக்கொண்டே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆளுங்கட்சியில் இறுதி முடிவு எடுக்கப்படக் கூடும்.


## இறுதி அஸ்திரம்

சூழியன்

கொரோனா வைரஸ் தாக்கத்தின் கோரத்தாண்டவத்துக்கு மத்தியிலும் கொழும்பு அரசியல் கொதிநிலையிலேயே காணப்படுகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர், 21/4 தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை, அரசியல் பழிவாங்கல் குறித்தான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை உட்பட மேலும் சில விவகாரங்களால் அரசியல் களம் அனல் கக்கியபடியே உள்ளது. இவை அரச கூட்டுக்குள்ளும் பெரும் குழப்பத்தை உருவாக்கியுள்ளன.

21/4 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையால் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடும் தலையிடி ஏற்பட்டுள்ளது. தண்டனை பொறிமுறைக்குள் சிக்கும் நிலை உருவாகியுள்ளதால், தான் நியமித்த ஆணைக்குழுவின் அறிக்கையையே நிராகரிக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல சுதந்திரக்கட்சியை அழிப்பதற்கும், மைத்திரியை அரசியல் ரீதியில் வேட்டையாடுவதற்குமான அரசியல் நோக்கம் கொண்ட அறிக்கையே அதுவெனவும் சுதந்திரக் கட்சிக் காரர்கள் விமர்சித்துள்ளனர். அறிக்கையை அடியோடு நிராகரித்துமுள்ளனர். இந்நிலையில் மைத்திரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டால் சுதந்திரக்கட்சியின் ஒரு தரப்பு அரசாங்கத்தில் இருந்து வெளியேறும். இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அதேபோல மைத்திரியை இறுக்கினால் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் பல தகவல்களை அவர் அம்பலப்படுத்தக்கூடும் என்ற அச்சமும் ஆட்சியாளர்களுக்கு உள்ளது. சிலரை பாதுகாப்பதற்கு முயற்சித்தால், பேராயர் மெல்கம் ரஞ்சித், சர்வதேச விசாரணைக்கு கதவைத் திறந்துவிடும் அபாயமும் உள்ளது. மைத்திரியை பலிக்கடாவாக்கிவிட முற்பட்டால், முக்கியமான சில இறுதி அஸ்திரங்களை அவர் ஏவக்கூடும் எனவும், அது கொழும்பு அரசியலில் பல திருப்பங்களை ஏற்படுத்தக்கூடும் எனவும் தகவல்கள் கசிந்துள்ளன.





## விமலுக்கு குறி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் விமல் வீரவன்ஸவின் கட்சிச் செயற்பாடுகள் தொடர்பில் பஸில் ராஜபக்ச கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு எதிரணியின் பணியை எவரும் முன்னெடுக்க முடியாது எனவும், அவ்வாறானவர்களை வெளியேற்றுவதைத்தவிர வேறு வழியில்லை என கடும் தொனியில் விமர்சித்தார் எனவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்சவுக்கும், அந்தக்கட்சியின் புதுமுக எம்.பிக்களுக்குமிடையிலான சந்திப்பு அண்மையில் நடைபெற்றது.

இதன்போதே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குறித்து பஸில் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

## மலையகத்தில் மலர்கிறது புதிய கட்சி

மலையகத்தை மையப்படுத்தி விரைவில் புதியதொரு அரசியல் கட்சி உதயமாகவுள்ளது எனவும், இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன எனவும் நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவரே இதன் பின்னணியில் செயற்படுவதாகவும், முக்கியமான சிவில் அமைப்புகள் இக்கட்சியுடன் இணைந்து செயற்படவுள்ளன எனவும் தெரியவருகின்றது. முன்னாள் எம்.பி ஒருவரும் இதில் இணையக்கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த பொதுத்தேர்தலில் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் சுயேச்சையாக போட்டியிட்ட சில வேட்பாளர்களும் இக்கட்சியில் இணைந்து பயணிக்க தமது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. நுவரெலியா மாவட்டத்தை பிரதான தளமாகக் கொண்டு இயங்குவதற்கு திட்டமிட்டுள்ள அந்தக் கட்சி, மாத்தளை, கண்டி மாவட்டங்களிலும் தனது அரசியல் பணிகளை முன்னெடுக்கவுள்ளது.

## அடுத்த வாரிசு


மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நடப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தயாராகி வருகின்றனர். இது தொடர்பில் கட்சி உயர்மட்டங்களுக்கு ஏற்கனவே அறிவித்துள்ள அவர்கள், முதல்வர் வேட்பாளர் பதவி கிடைக்கும்வரை காத்திருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் எம்.பிக்களே இவ்வாறானதொரு அரசியல் நகர்வில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்படி தேர்தலை நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் பூர்த்தியான பின்னர் பதவி துறக்கும் அறிவிப்பை இவர்கள் வெளியிடக்கூடும்.

இதற்கிடையில் சுயேச்சையாக போட்டியிடுவதற்கு பல குழுக்கள் தயாராகி வருகின்றன.

இ.தொ.காவின் தலைவர் அமரர். ஆறுமுகன் தொண்டமானுக்கு இரு மகள்மார் இருக்கின்றனர். இருவரும் தற்போது கட்சியின் உள்ளக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் இரு மகள்மாரில் ஒருவர் மாகாணசபைத் தேர்தலில் களமிறங்கக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



# அன்பினில் விளைந்த ஆரமுதே..

பா.பாலாஜினி

சஞ்சீவி சிறுகதை

இழவு விழுந்த வீடொன்று எப்படி இருக்குமோ, அப்படி இருந்தது சுப்பையாவின் வீடு. ஊர் மக்கள் ஒவ்வொருவராக வந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஆறுதல் சொல்ல வந்த கூட்டத்தை விட, விடுப்புப் பார்க்க வந்த கூட்டமே அதிகமாக இருந்தது. சுப்பையாவின் மனைவி ஒருபுறம் அழுதவாறு உட்கார்த்திருந்தாள். சுப்பையாவின் மகள் வித்யாவோ பெரும் கேவலுடன் புலம்பிக் கொண்டிருந்தாள். அவள் மடியில் தலைசாய்ந்தவாறே இறந்து போய்கிடந்தது மணி. அதன் கண்கள் வெறித்தபடியே அவள் முகத்தை பார்த்தபடியிருந்தன. வாய் சற்று விரிந்தபடி, திறந்து கிடந்தது.

சுப்பையா வீட்டில் ஆடு வளர்ப்பு என்பது மிக நீண்ட காலமாகவே நடந்து வருகின்ற ஒன்று. சுப்பையாவும் மனைவியும் அரசாங்க உத்தியோகத்தில் இருந்தபோதும்கூட, ஆடு வளர்ப்பும் அவர்கள் வாழ்வின் ஓர் அங்கமாகியிருந்தது. ஆடுகளை வளர்ப்பது வித்யாவின் அக்காவின் பொறுப்பாக இருந்தது, ஆனால் அவள் திருமணமாகிப் போய்விட, ஆடுகளின் பொறுப்பு வித்யாவிடம் கைமாறியது. ஏற்கனவே வீட்டில் நிற்கும் ஆடுகள் ஒவ்வொன்றுக்கும் செல்லப் பெயர் வைத்து கொஞ்சுவதும் கூப்பிடுவதுமாக இருந்த வித்யாவுக்கு ஆடுகளை கவனிப்பது ஒன்றும் அவ்வளவு கடினமாகத் தெரியவில்லை. சொல்லப் போனால் அவற்றைக் கவனிப்பதும், மேய்ச்சலுக்காகக் கூட்டிச் செல்வதும் அவளுக்கும் பேரானந்தத்தையும் மனநிறைவையுமே தந்தன. ஆடுகளுடன் சேர்ந்து காணியெல்லாம் சுற்றித் திரிவது அவளுக்கு இன்னொரு அனுபவ உலகின் வாசல்களை வாஞ்சையோடு திறக்கச் செய்தது.

சுப்பையாவுக்கு அதிகமாகக் கோபம் வரும். ஒருமுறை அப்படி ஒரு கோபத்தில், குழப்பம் செய்யும் ஆடுகளுக்கு நன்றாக அடித்து விட்டார். அதைக் கண்ட மனைவி “கடவுளே உதுகளுக்கு உப்பிடி அடிக்கிறதைவிட, பேசாமல் யாரும் பண்ணை வைச்சிருக்கிறவைக்கு வித்து விடலாமே” எனக் கத்தினார்.

"இஞ்ச பாருங்கோ அம்மா, நான் இருக்கிறவரைக்கும் அதுகளை விக்கக் கூடாது. நானே எல்லாம் செய்யிறன்" என ஆடுகளின் பொறுப்பை வித்யா ஏற்றுக் கொண்டாள். தண்ணி வைப்பது, மேய்ச்சலுக்கு விடுவது, வேப்பங்குழைப் புகைப் போடுவது என அனைத்து பணிவிடைகளும் அன்புடனே செய்வாள். அவற்றைத் தடவிக்கொடுத்து, கதை கேட்கவும் மறப்பதில்லை அவள். தூரத்தில் இருந்து குழை வெட்டிக் கொண்டு வரும் பொறுப்பு மட்டும் சுப்பையாவுக்கு.

★★★★

“ஏன் தங்கம் என்னை விட்டிட்டு போனனி? என்னால இதை எப்படித் தாங்கேலும்” என மீண்டும் உரத்து ஒலித்தது வித்யாவின் குரல்.

“வித்யா சத்தம் போடாதை. போனது போனது தான். இனி அழுது அது திரும்பி வரப் போறதில்லை”அதட்டலோடு ஆறுதல் சொன்னார் சுப்பையா.

சுப்பையா வீட்டு ஆடுகளில் மணிதான் மூப்பு. தனி வெள்ளை நிறம். வித்யா பத்தாம் வகுப்பு படிக்கையில் பிறந்ததுதான் மணி. இப்போது மணிக்கு பதினொரு வயது. பதினொரு வருடங்களும் அவர்கள் வீட்டில் ஒருத்தியைப் போலவே செல்லமாக மணியும் வளர்ந்திருந்தது. எட்டு ஈற்றுக்களில் மணிக்கு 16 குட்டிகள். ஒவ்வொரு ஈற்றுக்களிலும் இரு குட்டிகளை பிரசவிப்பது மணியின் தனிச்சிறப்பு. மணியின் அத்தனை குட்டிகளையும் தன் மடியில் போட்டு சீராட்ட வித்யா தவறுவதில்லை.

“மணி” என்று அவள் கூப்பிட்டால் தனது பாசையில் ஏதாவது பதில் சொல்லும். தன் பஞ்சு மேனியால் அவளை தடவிக் கொடுக்கும். மணி பிறந்தபோது வித்யா தன் மடியில் வைத்துத்தான் தினமும் தூங்க வைப்பாள். முத்தமிடு வாள். அதன் மேலிருக்கும் சிறு மேலொட்டிகளை அன் போடு எடுத்தெறிவாள்.

சில நாள்களாகவே உண்ண மறுத்து, மேய மறந்த மணி சுப்பையா குடும்பத்தினரின் அத்தனை முயற்சிகளையும் மீறி இப்போது இறந்து போய்க் கிடக்கிறது.

“அழாதை வித்யா. அது புண்ணியம் செய்த சீவன். கிடந்து அழுந்தாமல் போட்டுது” மகளைத் தேற்றினாள் தாய் பார்வதி.

“முதல்ல ஆட்டை நிலத்தில படுக்க வைச்சிட்டு போய்க் குளி. அதின்ரை கிருமி எல்லாம் உன்னில தொத்தப் போகுது” பக்கத்து வீட்டு செல்லம்மாக் கிழவி அறிவுரை கூறிக் கொண்டிருந்தாள்.

ஐந்தும் கெட்டு, அறிவும் கெட்டுப் போயிருந்தாள் வித்யா. மடியில் கிடந்து வளர்ந்த ஜீவன் அதே மடியிலேயே முடிந்து போய்க் கிடந்தது. மணியினுடைய மரணம் அவள் எதிர்பார்த்திராத ஒன்று. அதிகளவான சந்தோசத்தையும் மனநிறைவையும் எது அன்று தந்திருந்ததோ அதுவே இன்று பெரும் துயராகிப் போயிருந்தது. சுப்பையா ஆட்டை புதைப்பதற்காக கிடங்கு வெட்டத் தொடங்கினார். ஆடுகளை வளர்க்கும் இடத்திலேயே பள்ளம் தோண்டி அதற்குள்ளேயே மணியைப் புதைப்பதுதான் அவருக்கு சரி என்று பட்டது .

மணியினுடைய ஈற்றுக்களில் இரண்டு ஆடுகள் இன்னும் குட்டிகளாக நிற்கின்றன. மற்றவை எல்லாம் வளர்ந்து விட்டிருந்தன. அந்த இரண்டு குட்டிகளும் தாயைத்தேடி அழுமே என்ற எண்ணம் வித்யாவின் மனசுக்குள் அலைபாய, மடியில் கிடந்த மணியின் வெற்று உடலைத் தடவிக் கொடுத்தாள்.

மணிக்கு கால் வலிக்ககூடாது என்று எத்தனை நாட்கள் கால்களை பிடித்து விட்டிருப்பாள், எத்தனை நாட்கள் அதன் பஞ்சு உடல் மேல் கட்டிப் புரண்டு மகிழ்ந்திருப்பாள். அவளுக்கு மணி பிள்ளையென்று சொல்வதை விடவும், மணி தன் குட்டிகளில் ஒன்றாகவே வித்யாவைப் பார்த்தது. அடிக்கடி தன் குட்டிக ளோடு சேர்ந்து அவள் முகத்தையும், முகர்ந்து தன் மூச்சுக்காற்றை அவள் மீது படரவிடும். அந்த மூச்சுக்காற்று முழுவதிலும் தாய்மை ஒட்டியிருக்கும். வித்யா அந்தத் தாய்மையில் கிறங்கிப் போவாள். மணியோடு அவள் உலவிய புல்வெளி வெறுமையோடு காத்திருந்தது.

சுப்பையா வெட்டிய கிடங்குக்குள் மணியின் உடல் இறக்கப்பட்டது.

“ …மணீய்ய்ய்ய்ய்ய்!”

வித்யா அழுகையும், கண்ணீருமாக மணியின் உடல் மீது மண்ணை அள்ளிப் போட்டாள். அவள் கண் முன்னாலேயே மணி மண்ணுக்குள் மறைந்து கொண்டிருந்தது. அதற்கு மேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை. அழுதபடி ஓடி வந்துவிட்டாள்.

ஆட்டுக்கொட்டிலில், “மேய்ய்ய்”

அவளை மணியின் குட்டிகள் அழைப்பது போல உணர்ந்தாள்.

கண்ணீரோடு அவள் அந்தக் குட்டிகளை இறுக்கி அணைத்தாள். குட்டிகள் அவள் கன்னத்தை தங்கள் நாக்கால் வருடத் தொடங்கின. பதிலுக்கு தன் மூச்சுக் காற்று அவற்றில் படர முகர்ந்தாள் வித்யா. அந்த மூச்சுக்காற்று முழுதும் தாய்மை ஒட்டியிருந்தது. ■

# அன்னையின் மொழி கேளாய்....

பொன்மனம் கொண்ட என்மகனே உன்
அன்னையின் மொழி கேளாய்
உன் மனம் ஒன்றே உன்னொளியாய் அந்த
ஒளியதன் வழி வாழ்வாய்

தன்னிகரில்லா தாய் மண்ணே அது
உன்னுயிர் போலாகும்
இன்னலின் போதும் மறவாது தாய்
மண்ணினை மனம் கொள்வாய்

இன்மொழி பேசு எந்நாளும் – நீ
எவருக்கும் உறவாகும்
நன்மைகள் செய்வாய் நாளெல்லாம்

வெற்றி நாயகன் நீயாகும்
புன்னகை ஒன்றே ஆயுதமாய்
எப்போதிலும் பகை வெல்வாய்
மின்னலை போலே உறவாடி பிறர்
மேன்மைக்கு வழி செய்வாய்

தன்னலம் கருதா மனம் தானே ஒரு
தாழ்விலும் வாழ்வு தரும்
உன்னையே உலகம் தேடிவந்து மிக
உதவிடும் மேன்மை வரும்

அன்பினில் யாரும் இணைவதுவே நல்
ஆனந்தக் கலையாகும்

பணிபினில் உயர்ந்து பழகுவதே மன
பக்குவ நிலையாகும்

உண்மையை பேசி வாழ்வதுவே தூய
உள்ளத்தின் நெறியாகும்
தண்ணளி நிலவாய் பிறர்க்குதவும் பண்பு
தர்மத்தின் குறியாகும்

கண்ணிலும் மேலாய் கொள்கையை எண்ணி
காப்பதுன் கடனாகும்
விண்ணிலும் பெரிதாய் மேலுயரும் வாழ்வு
வெற்றியின் படி நகரும்

ஆனையூர்க் கவிராயர்



# இனிக்கும் கனி




ஆரதி

தந்தைக்கும் மகனுக்குமிடையில் உள்ள உறவையும் அதில் உள்ள நெருக்கடிகளையும் பேசும் படங்கள் தமிழில் வந்துள்ளன. சிவாஜியின் "தங்கப்பதக்கம்", கமல்ஹாசனின் "வறுமையின் நிறம் சிகப்பு" ஜெயம் ரவியின் "சந்தோஷ் சுப்பிரமணியம்" தனுஷின் "யாரடி நீ மோகினி" போன்றவை உடனடியாக நினைவில் வரக்கூடியவை. இப்பொழுது வந்திருப்பது "ஏலே".

இது சமுத்திரக்கனியின் படம். ஆனால் அப்படிச் சொல்லி விடவும் முடியாது. இதை ஹாலிதாவின் படம் என்றும் சொல்ல வேண்டும். அப்படியும் சொல்ல முடியாது. இது மஞ்சனம்பட்டிச் சனங்களின் படம் என்றும் சொல்ல முடியும். அந்த அளவுக்கு "ஏலே" பாத்திரங்கள், கிராமம், அந்தக் கிராமத்து மக்கள், இயக்குநர் என ஒரு நல்ல இணைவுகளின் உருவாக்கமாகியுள்ளது.

ஹாலிதா சமீம், ஏற்கனவே பூவரசம் பீப்பி, சில்லுக்கருப்பட்டி என இரண்டு படங்களைத் தந்து இளைய பெண் இயக்குநர் என்ற கவனத்தைப் பெற்றவர். இது அவருடைய மூன்றாவது படம். ஆனால், இந்தப் படம்தான் அவர் முதலில் உருவாக்குவதற்கு தயார்ப்படுத்திய படம். அதைப்பற்றி அவரே சொல்லியிருக்கிறார், "இந்தப் படத்தை எட்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தேன். நண்பர் ஒருவர் தனக்கும் அப்பாவுக்கும் இடையில் கதைபேச்சு இல்லாமல் இருந்ததைப் பற்றிச் சொன்னார். அது உண்டாக்கிய உணர்வும் கேள்விகளுமே ஏலேவைப் பற்றி யோசிக்க வைத்தது. இந்தப் பிரச்சினையை, இந்த உறவை வைத்து ஒரு கதையை உருவாக்கலாம் என்று நினைத்தேன். அதற்குரியமாதிரியான கதையையும் களத்தையும் பாத்திரங்களையும் தயார்பண்ணினேன். அதுதான் இப்பொழுது ஏலே ஆகியுள்ளது" என்று.

பொதுவாகவே நம்முடைய குடும்ப அமைப்பு, சமூகச் சூழல் போன்றவற்றால் வளரிளம் பருவத்தில் உள்ள மகனுக்கும் தந்தைக்கும் இடையில் முரண்களும் இடைவெளிகளும் ஏற்படுவது வழமை. தந்தையும் மகனும் நண்பர்களாகவே இருக்கின்ற சில விலக்குகள் இருக்கலாம். ஆனால், பொதுவாக இருக்கின்ற தந்தை - மகன் என்ற உறவின் பதின்பருவக்கால முரண்கள் நமக்கும் அனுபவமானவை. இதைப்பற்றி ஏராளம் சினிமாக்கள் உருவாகியுள்ளன. சுகுமாரினது "கோடைகாலக்குறிப்புகள்" கவிதைகள் இந்த உறவின் விளைவாகவும் அந்தப் பருவத்தின் நீட்சியில் நிகழும் சமூக விளைவுகளைப் பற்றியதுமாகும். இதைவிட பல நூறு சிறுகதைகளில் இந்த விசயம் பேசப்பட்டிருக்கிறது. எத்தனை கோணத்தில் பேசினாலும் அத்தனையும் தவிர்க்கவே முடியாத கரிசனையைக் கோருபவை. ஏலேயும் அப்படித்தானிருக்கிறது.

ஏலேயில் கிராமத்தில் ஐஸ் பழம் விற்கின்ற



**'ஏலே'யில் கிராமத்தில் ஐஸ் பழம் விற்கின்ற தந்தை எல்லோருக்கும் இனிப்பாகவும் குளிர்ச்சியாகவுமே இருக்கிறார். வலு பம்பலான ஆள் என்று சொல்வார்களே அப்படி. தமாஷும் முரணும் குழப்பங்களுமான ஒரு மனிதராக. சிலபோது கனிந்து விடுகின்ற மனிதர். சிலவேளை கசப்பானவராகி விடுகின்றவராக.**

தந்தை எல்லோருக்கும் இனிப்பாகவும் குளிர்ச்சியாகவுமே இருக்கிறார். வலு பம்பலான ஆள் என்று சொல்வார்களே அப்படி. தமாஷும் முரணும் குழப்பங்களுமான ஒரு மனிதராக. சிலபோது கனிந்து விடுகின்ற மனிதர், சிலவேளை கசப்பானவராகி விடுகின்றவராக.


அப்படியிருந்தாலும் கிராமத்தில் அவருக்குப்பெரிய பிடிப்புண்டு. கிராமத்தவர்களுக்கும் தான். ஏன், நமக்குக்கூட இந்த அனுபவம் உண்டல்லவா! எங்கள் தெருக்களில் ஐஸ்க்கிறீம் விற்கின்றவரைச் சுற்றி பிள்ளைகள் ஓடுகின்ற காட்சியும் நினைவும் மறக்கவே முடியாதவை. எங்களுடைய இளமைப்பருவத்தின் இனிப்பான நினைவுகளில் அதுவும் ஒன்று. இதைப்பற்றி நான் ஒரு கவிதையைக் கூட எழுதியிருக்கிறேன். அந்த அளவுக்கு ஐஸ்கிறீம் விற்பவருக்கும் நமக்கும் இடையிலான இனிய உறவொன்றுண்டு. அந்தப் பாத்திரத்தை வைத்து ஒரு படம் வந்திருக்கிறது என்றால் அது ஐஸ்கிறீமைப்போல இனிப்பானதே. உண்மையும் அதுதான். படத்தின் கதையும் இனிப்பானதே. ஆனால், தந்தை மகன் உறவுதான் அப்படியில்லை. அது கசப்புகள் நிறைந்தது. என்னதான் பிள்ளைக்கு ஐஸ்கிறீமை இனிப்பாகக் கொடுத்தாலும் தனக்கும் மகனுக்குமிடையிலான உறவை இனிப்பாகக் கொடுக்க முடியவில்லை அந்தத் தந்தையினால். இதனால் தந்தையை விட்டு, ஊரை விட்டே போய்விடுகிறான் மகன். பிறகு தந்தை இறந்து விட்டார் என்ற சேதி அறிந்து ஊருக்கு வருகிறான். இடையில் ஏறக்குறைய ஏழு எட்டு ஆண்டுகள் ஆகி விட்டன. இந்த இடைப்பட்ட காலத்தில் மகனுக்கும் தந்தைக்கும் இடையினான இடைவெளி வாழ்க்கை, அதன் உண்மை முகம், அதற்குள்ளிருக்கும் உயிரோட்டம், அது உண்டாக்கும் புரிதலே படத்தின் மையப்படுத்தல். இறந்ததாகச் சொல்லப்படும் தந்தையைக் காண வரும் மகன் அடைகின்ற துயரம் அதன் பொழுது ஏற்படுகின்ற புரிதலும் முக்கியமானவை. இது கூட நம்முடைய வாழ்க்கையில் அனுபவமாவதுண்டு. காலம் கடந்து ஏற்பட்டுக் கொள்ளும் ஞானமாக.

ஐஸ்கிறீம் விற்பவராக, அப்பாவாக சமுத்திரக்கனி நடித்திருக்கிறார். படத்தில் பெருமளவுக்கும் நிறைந்திருக்கும் பாத்திரம் அவருடையது. மகனாக மணிகண்டன் நடித்துள்ளார். ஏனைய பாத்திரங்களில் பெரும்பாலானவர்கள் அந்தக் கிராமத்து மக்களே நடித்திருக்கிறார்கள். நடித்திருக்கிறார்கள் என்று சொல்வதை விட பங்கேற்றிருக்கிறார்கள் என்று சொல்வதே சரி. அதுவே நியாயம். அவர்களுடைய சூழலில், அவர்களுடைய வீடுகள், தெருக்களில் அவர்களுடைய வாழ்க்கையில் அவர்களை வைத்தே இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிறார் ஹலிதா. இது ஒரு அசாத்தியமான ஆனால், வெற்றிகரமான முயற்சி. அந்தக் கிராம மக்களை வைத்தே அவர்களுடைய கதையை, வாழ்க்கையை கலையாக்கும் முயற்சிகள் ஒன்றிரண்டு ஏற்கனவே நடந்துள்ளன. அதில் ஒன்று லெனின் பாரதியின் "மேற்குத்தொடர்ச்சிமலை". பல படங்கள் கதையைக் கொண்டு போய் ஒரு கிராமத்தில் பொருத்துவது. இது வேறு. அந்தக் கிராமத்துள்ளிருந்து கதையை எடுப்பது அல்லது கையில் உள்ள கதையை அந்தக் கிராமத்தின் மனதில் வைத்து இழைப்பது. இதில் ஹலிதாவுக்கும் வெற்றி. சமுத்திரக் கனிக்கும் வெற்றி. படத் தயாரிப்புக்குழுவினருக்கும் வெற்றி. கிராமத்து மக்களுக்கும் வெற்றி. நமக்கும் வெற்றி கிட்டிவிடுகிறது.

# திருவள்ளுவரின் தேநீர்க்கடை



6




இ.சு.முரளிதரன்

1872 இல் ராபர்ட் அங்கஸ் ஸ்மித் 'அமிலமழை' என்ற வார்த்தையை அகிலத்துக்கு அறிமுகம் செய்தார். கந்தகம், நைதரசன் போன்றவற்றின் ஒட்சைட்டுகள் வளிமண்டலத்திலுள்ள ஒட்சிசனுடனும் நீராவியுடனும் கலந்து சல்பூரிக் அமிலம், நைத்திரிக் அமிலம் ஆகியவை உருவாகி மழையாகப் பெய்வதே அமிலமழை எனப்படும். தொழிற்சாலைகள், அனல்மின் நிலையங்கள், வாகனங்கள் என்பவற்றை எவ்வகையான குற்றவுணர்வுமின்றி, சூழலுக்கு எதிராக முன்னிறுத்துகின்றோம். நம்மைப் பொறுத்தவரையில் இப்புவியானது நமக்கே உரித்துடையது. ஏனைய உயிரினங்கள் குறித்தோ எதிர்காலம் குறித்தோ கவலை கொள்வதில்லை. பிறர்க்கு நாம் தீமை செய்யின், அறந்தவறிய நமது செயலானது நமக்கே கேடாக முடியும். அகிலத்துக்குச் செய்யும் கேடும் அத்தகையதே! இதனையே 204 ஆவது குறட்பாவிலே,

**"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறம் சூழும் சூழ்ந்தவன்கேடு"**

என்று திருவள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

அமில மழையால் மண்ணின் இரசாயனப்பண்பும், உயிரியற்பண்பும் மாறுபடுகின்றன. தாவரங்களும் பாதிப்படைகின்றன. நீர்நிலைகளுக்கும் அவற்றில் வாழும் உயிரினங்களுக்கும் தீங்கு நேர்கின்றது. மனிதர்களுக்கும் சுவாசக்கோளாறு ஏற்படுகின்றது. கட்டடங்கள் கூடப் பாதிப்படைகின்றன. அமில மழையின் அளவு கட்டற்று அதிகரிப்பின் பறைகளைக்கூடக் கரைந்துவிடும். புவிக்குச் செய்யும் கேடு நமக்கே கேடாய் முடிந்து விடுகின்றது.

# சிவனின் சிரிப்பு



ம.பா. மகாலிங்கசிவம்

கடவுள் இருக்கின்றார் என்று நம்புபவர்களை ஆத்திகர் என்றும், இல்லை என்று கூறுபவர்களை நாத்திகர் என்றும் வகைப்படுத்துவர். கடவுளே இல்லையென்று வாதிட்டுப் பகுத்தறிவுக் கொள்கையை முன்வைத்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களே இறுதிக் காலத்தில் இரகசியமாக இறை வழிபாடுகளில் ஈடுபட்டமையையும் நாம் அறிந்துள்ளோம்.

இறை இருப்புப் பற்றிய விவாதங்கள் இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டவை அல்ல. நாயக்கர் காலத்திலேயே கணிசமான அளவில் காணப்பட்டுள்ளன.

**நட்ட கல்லைத் தெய்வமென்று**
**நாலு புஷ்பம் சாத்தியே**
**சுற்றி நின்று மொண மொணென்று**
**சொல்லு மந்திரம் ஏதடா?**
**நட்ட கல்லும் பேசுமோ?**
**நாதன் உள்ளிருக்கையில்** என நாயக்கர் காலத்தைச் சேர்ந்த சிவவாக்கியர் என்னும் சித்தர் பாடியுள்ளார். அக்காலச் சித்தர்களில் அநேகமானவர்கள் சிவவாக்கியர் போலவே இறைவனைப் புறத்தே காண முயலாது அகத்தே காணமுயன்றனர். நாயக்கர் காலத்தில் வாழ்ந்த இட்டையர்களின் பாடலோ கடவுளர்களின் இயலுமையையே நாயக்கர் காலச் சூழலின் பின்னணியில் கேள்விக்குரியதாக்கியது.

**“கேட்டவரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்**
**கூட்டோடு எங்கே குடிபுகுந்தீர் பாட்டாய்கேள்**
**செல்காலம் எல்லாம் செலுத்தினோம் அல்காலம்**
**கல்லானோம் செம்பானோம் காண்”**

தேன்கூடு

தொடர்ச்சியான போர்களால் நலிந்து போய் பஞ்சம், பசி, பட்டினி எனப் பல துயரங்களுக்கு முகம் கொடுத்த நாயக்கர் காலப் புலவர்கள் தமது துயரங்களைக் கடவுளும் பார்த்துக் கொண்டிருக்கிறாரோ என ஐயுறுகின்றனர். கடவுளைப் பார்த்து கேட்டவரம் கொடுக்கின்ற தெய்வங்களே இப்போது நீங்கள் எங்கே குடிபுகுந்து போயிருக்கின்றீர்கள் என வினாவுகின்றனர். அதற்குத் தெய்வங்கள் எமது ஆட்சி செல்லுகின்ற காலத்திலே கேட்ட வரம் எல்லாம் கொடுத்தோம்; இப்போது இருண்ட காலம்; அதனாலே நாமும் ஆலயங்களில் வெறும் கற்சிலைகளாகவும், செம்பு விக்கிரங்களாகவும் மாறிவிட்டோம் என்று கூறுவதாக பாடல் உள்ளது.

இப் பொருண்மையில் அமைந்த, சமகால கவிஞர் ந.குகபரனின் சிவனின் சிரிப்பு எனும் கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகின்றது.



கவிஞர் ந.குகபரன்

யுகத்தை விழுங்கும்
வெறியோடு மூசுகிறது பேராறு

சகுனிகள் புதிய புதிய முகங்களோடு
தோன்றுகிறார்கள்
உருட்டப்படும் சதுரங்கக் காய்களில்
ஊழியின் முகம் தெரிகிறது

சிந்திப்பதற்கும் போதிப்பதற்கும்
தேவையற்ற களம்
தகிக்கிறது பாலையாய்

அங்கிங்கெனாதபடி தொடர்கின்றன
குருஷேத்திர போர்கள்

சதிகள் கோலோச்சும் நிலத்தில்
அர்ஜுனர்களும் கர்ணன்களும்
களம் வரும் முன்பே
கொல்லப்படுகின்றனர்

அவதாரங்கள் பூமிக்கு வந்த கதைகளை
திரும்ப திரும்பச் சொல்கின்றன
புராணங்கள்

எந்தச் சலனமும் இல்லாது
அறிதுயில் கொள்கின்றான்
மாயன்
அவன் உதட்டில் தவழ்கிறது
முப்புரங்களை எரித்த சிவனின் சிரிப்பு

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ந.குகபரன். தமிழ் பாடம் கற்பிக்கும் சிறந்த ஆசிரியர். மாணவர்களை எழுத்தாக்கப் பணியில் ஊக்குவித்து வருபவர். நான் கற்பித்த பாடசாலைகளில் முகுழ், பேரிகை, அகம் ஆகிய சஞ்சிகைகளை தொடர்ந்து வெளியிட்டவர். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் மாணவர்கள் 13 பேரின் கவிதைகளின் தொகுதியாகிய தூறலை வெளியிட்டவர். வருடாந்தம் பட்டிமன்றம் அல்லது தமிழ் அறிவு வினாவிடைப் போட்டிக்குத் தனது பாடசாலை மாணவரை தேசிய மட்டம் வரை அழைத்துச் சென்று பரிசில் பெற வைப்பர். இலக்கிய முயற்சிகளிலும் நாட்டம் கொண்ட சிறந்த பட்டிமன்ற பேச்சாளர், விமர்சகர், கவிஞர் எனப் பல தளங்களில் இயங்கி வருபவர். ‘ஒல்லாந்தர் கால தமிழ் இலக்கியங்கள்’, ‘சமூக - அரசியல் நோக்கு’ என்னும் நூலை ஏற்கனவே வெளியிட்டதுடன், அண்மையில் நீருறிய சொற்கள் என்னும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டவர். அத்தொகுப்பிலுள்ள சிவனின் சிரிப்பு என்னும் கவிதையே இங்கு இடம் பெற்றுள்ளது.

சமகாலத்தில் பெரும்பாலான எல்லா நாடுகளிலுமே போர்ப் பதற்றம் நிலவுகிறது. ஆயுத வியாபாரிகளான பல்தேசியக் கம்பனிகள், நாடுகள் ஏதோ ஒரு வகையில் போரைத் தூண்டுகின்றன. மறுபுறத்தில் சமூகத்தினுள்ளும் சமாதானம் நிலவவில்லை. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கழுத்தறுப்பு எனச் சமூகம் முழுவதுமே கொந்தளிப்பான நிலையில் உள்ளது. இத்தகைய சூழலில் கடவுள், கடவுள் என்று கும்பிடுகிறோமே; அவர் என்ன செய்கிறார் என்ற சிந்தனையின் விளைவாகச் சிவனின் சிரிப்பு உள்ளது.

**“யுகத்தை விழுங்கும்**
**வெறியோடு மூசுகிறது பேராறு”** எனக் கவிதைத் தொடக்கமே படிமமாக அமைந்து உலகம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் அவல நிலையைச் சுட்டுகிறது.

அடுத்துக் கவிஞர் தொன்மங்களைத் துணைக்கு அழைக்கிறார். பண்டைய இலக்கியங்களில் சகுனி ஒருவர் தான் இருப்பார். கூனி ஒருத்தி தான் இருப்பாள். ஆனால் இன்றோ திரும்பும் எல்லாத் திசைகளிலும் புதிய புதிய முகங்களோடு சகுனிகள் காட்சியளிப்பதைக் கண்டு கவிஞர் திடுக்கிடுகின்றார். சகுனிகளின் சதுரங்கக் காய் உருட்டல்களின் விளைவாக உலகின் ஊழிக் காலம், இறுதிக் காலம் தெரிவது கவிஞருக்கு அச்சத்தை ஊட்டுகிறது. இதனை

**சகுனிகள் புதிய புதிய முகங்களோடு**
**தோன்றுகிறார்கள்**
**உருட்டப்படும் சதுரங்கக் காய்களில்**
**ஊழியின்முகம் தெரிகிறது”** எனக் குறிப்பிடுகிறார்.

அங்கிங்கெனாதபடி எங்குமே நாடுகளிடையேயும் இனங்களிடையேயும் சமூகங்களிடையேயும், தனிமனிதர்களிடையேயும் போர்கள் நடைபெறுகின்றன. வெற்றி பெறவேண்டும் என்ற வெறியினால் அநீதியான, அதர்மமான நெறிமுறைகளிலேயே போர்கள் நிகழ்த்தப்படுகின்றன என்பதைக் கவிஞர்

**“சதிகள் கோலோச்சும் நிலத்தில்**
**அர்ச்சுனர்களும் கர்ணன்களும்**
**களம் வரும் முன்பே”**
**கொல்லப்படுகின்றனர்”**
என எதிரியைப் போர்க்களத்திலே தான் சந்திக்க வேண்டும் என்ற போர் அறம் மீறப்படுகின்ற நிலை உணர்த்தப்படுகிறது. அவதாரங்கள் பூமிக்கு வந்த கதைகளை திரும்ப திரும்பச் சொல்லுகின்றன புராணங்கள் என ஹைக்கூப் பாணியில் அமையும் தொன்மம் யதார்த்தத்தில் எந்த அவதாரமும் நிகழாத தெய்வங்களின் இயலாமையை சுட்டுகிறது.

வெண்பாவின் ஈற்றடி போல குகபரனின் கவிதையின் இறுதிப் பகுதி மிகப் பெரிய தத்துவத்தை விளக்கும் உயிர்த்துடிப்பான பகுதியாக உள்ளது.

**“எந்தச் சலனமும் இல்லாது**
**அறிதுயில் கொள்கிறான் மாயன்**
**அவன் உதட்டில் தவழ்கிறது**
**முப்புரங்களை எரித்த**
**சிவனின் சிரிப்பு”**

அதாவது உலகத்தை காக்கும் காத்தல் தொழிலை செய்ய வேண்டியவன் திருமால். அவதாரப் பொறுப்பும் அவனுக்கே உள்ளது. ஆனால் பூவுலகக் கொடுமைகளை கண்டும் காணாதவன் போல் அவன் அறிதுயில் கொள்கிறான். அதுகூடப் பரவாயில்லை. அழித்தல் தொழிலைச் செய்கின்ற சிவனின் சிரிப்பு அவன் உதட்டில் தவழ்வது. உலகுக்கு அவனாலும் ஆபத்து உள்ளது என உணர்த்துகிறது. தொன்மங்களும் படிமங்களும் நிறைந்த மிகச் சிறந்த கவிதையாக இக்கவிதை உள்ளது.

## ஐ.நா. தீர்வு வழங்குமா?

ஒன்றே நாடு ஒன்றே நீதி
என்று சொல்வோம் இங்கு
சாதி மத இனம் என்று
பார்க்க மாட்டோம்
நாதியற்று நாட்டு மக்கள்
நன்றாய் வாழ்ந்திட
புத்தமதம் சொல்லும் நீதி

குண்டு போட்டால்
விசாரணை செய்யோம்
மானிடனே குண்வைத்தால்
விசாரணை செய்வோம்
ஏனிந்த நீதியென்று
ஏங்கித் தவிக்காதீர்
மானிடர்க்கு புத்தர் சொன்ன
மார்க்கம் சொல்லோம்

உயிர்க்கு அஞ்சி நவாலியிலே
குண்டு போட்டதால்
மாய்ந்த மக்கள்
பயங்கரவாதிகளோ
ஆயர் பலர் கண்விழித்து
நீதி கேட்டனர்
மேய்ப்பன் அவன் மக்கள் இங்கு
இறக்கச் சொன்னானா?

தயவு தாட்சண்யம் இன்றி
கொன்று குவிக்க
அயல்நாடுகள் முன்னின்றே
உதவி செய்தன
பயங்கரவாதம் என்று சொல்லி
கதையை முடிப்பர்
பயத்துடனே தமிழர் இங்கு
மாண்டு மடிவர்.

கொழும்பு மக்கள்
கொல்லப்பட்டால்
விசாரணை உண்டு–அதை
வெளிப்படையாய்
சொல்லாவிட்டால் விசாரணை
இல்லை

ஐக்கிய நாடுகள் சபையினிலே
முட்டி மோதினால்
ஐக்கியமாய் இலங்கை மக்கள்
வாழ முடியுமா?
தக்கதொரு நீதிச்சபை
தீர்ப்பைச் சொன்னால்
மக்களுந்தான் மனம் திறந்து
தீர்ப்பை சொல்வர்.

எஸ்.சிவானந்தன்.



சஞ்சீவி
07 மார்ச் 2021

# தென்னம் தோப்புகளில் மண் ஈரத்தை பேணல்-2



8

## விதானையார் வீட்டு முற்றம்

○ வடகோவை வரதராஜன்

செல்லையா அண்ணர் விழுந்த தென்னோலைகளை எடுத்து அடுக்கி கொண்டிருந்தார். பர்வதம்மாமி காலையிலேயே மஞ்சள் பூசி குளித்து, அள்ளு கொண்டை போட்டுகொண்டு, மண் பானையில் சோளம் பொத்தி அவித்துக் கொண் டிருந்தார்.

எனது மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும், பர்வதம்மாமி மலர்ந்து சிரித்து,

"வாங்கோ விதானையார்! இண்டைக்கு நீங்கள் வருவியள் எண்டு தெரியும். அதுதான் உங்களுக்கு சோளம் பொத்தி அவிக்கிறன்" என்று வரவேற்றார்.

செல்லையர் முகத்தை துவாய்த் துண்டால் துடைத்தபடி

"வா ! வா ! எங்கை வராமல் போடுவியோ எண்டு யோசிச்சுக் கொண்டிருந்தன்"

என்று வரவேற்றார்.

இருக்கையாக நடப்பட்ட தென்னம் குற்றியில் அமர்ந்து கொண்டேன்.

"அண்டைக்கு சுடுதண்ணி குடிச்ச நாய்மாதிரி வறுகிக் கொண்டு போட்டாய். என்னமோ மண் ஈரத்தை பாதுகாக்கிறது எண்டு சொன்னாய், மிச்சத்தையும் சொல்லன் " என்றார் செல்லையர்.

"மண் ஈரத்தைப் பாதுகாக்கிறதுக்கு பல வழியள் இருக்கண்ணை. ஒவ்வொண்டாய் சொல்லுறன்.

**01 ) உழுதல்**

மழை முடிஞ்ச கையோட தறையை உழுது பிரட்டி விடவேணுமண்ணை "

" உதென்ன பேய்க்கதை பறையிறாய். மண்ணை உழுது பிரட்டிவிட்டால் தறை காய்ஞ்செல்லே போகும்."

"அப்பிடித்தான் எல்லாரும் யோசிப்பினம். ஆனால் உண்மையில் நிலக்கீழ் ஈரம் இதாலை பாதுகாக்கப் படும்"

" என்ன விதானையார் புதுசாய் எல்லாம் சொல்லுறியள்" என்று பர்வதம் மாமியும் பேச்சில் கலந்து கொண்டார்.

" மழை பெய்து வாற தண்ணி எல்லாம் நிலத்துக்குள்ளை சின்னச் சின்ன குழாய் போன்ற அமைப்புக்குள்ளாலை இறங்குது."

" மயிர்த்துளைக் குழாய்கள் என்று ஓ.எல் சயன்சிலை படிச்சனாங்கள் விதானையார் " பர்வதம்மாமி தனது யூனியன் கொலிஜ் படிப்பை நினைவு கூர்ந்தார்.

"அதே ! அதே ! இந்த மயிர்த்துளைக் குழாய்கள் ஒரு சதுரஅடி மண்ணிலை ஆயிரக்கணக்கில் இருக்கும்.

இந்த மயிர்த்துளைக் குழாய்கள் மூலம்தான் வெள்ளம் மண்ணுக்குள்ளை போகிறது.

மழை முடிந்தபின்னும் இந்த மயிர்த்துளைக் குழாய்கள் திறந்தபடி இருக்கும்.

தைமாதம் மழை முடிந்து, மாசி வெய்யில் கொளுத்த, கீழை இருக்கிற ஈரப்பசை எல்லாம் இந்த மயிர்த்துளைக் குழாய்கள் மூலம் வெளியேறி ஆவியாகிப் போக நிலக்கீழ் ஈரம் எல்லாம் போய், தறை கலடு பத்தி வெடிக்கத் தொடங்கும்"

"உண்மையாய் விதானையார் இண்டைக்குத்தான் இதெல்லாம் கேள்விப்படுகிறன்."

"மழை முடிஞ்ச கையோடு, முள்ளுக்கலப்பையாலை மண்ணை ஒருக்கா மேலாலை உழுதுவிட்டம் என்றால் இந்த மயிர்த்துளைக் குழாய்கள் எல்லாம் அறுபட்டுப் போகும். இதாலை நிலக்கீழ் நீர் ஆவியாகேலாமல் மண்ணுக்குக் கீழ் உள்ள ஈரம் அப்பிடியே பாதுகாக்கப்படும்.

இதாலைதான் 'தைக்கொத்து தாய்க் கொத்து' எண்ணுறவை "

"உண்மையில புதுப் புது விஷயம் எல்லாம் சொல்லுறியள் விதானையார். நீங்கள் விதானை வேலைக்கு போகாமல் படிப்பிக்கப் போயிருக்கலாம் " பர்வதம் மாமி உண்மையான ஆதங்கத்துடன் கூறினார்.

" தலை எழுத்து எண்டு ஒண்டு இருக்கெல்லே?, அது அம்மா வடிவத்தில் வந்து என்னை விதானை வேலையில் கொழுவி விட்டது"

" அப்ப மண்ணை உழுது பிரட்டி விட்டால் கீழ் ஈரம் காயாமல் இருக்குமெண்ணுறாய் " என்றார் செல்லையர்

"அதேதான் அண்ணை. இது முதலாவது முறையும் பிரதானமான முறையுமாகும்"

" அப்ப மிச்சத்தையும் சொல்லன் மோனை "பர்வதம்மாமி அவித்த சோளப்பொத்திகளை ஓர் பெட்டியில் எடுத்து வந்தார்.

முற்றித் திரண்ட சோளப் பொத்திகள் பளபளப்பாக இருந்தன.

பொத்தியை உரித்து முத்துக்களை உதிர்த்து வாயில் போட்டுச் சப்ப, உப்புச் சுவையுடன் சோளப் பால் அமிர்தமாய் இருந்தது.

"எப்படி இருக்கு விதானையார்?" பர்வதம் மாமி ஆவலுடன் கேட்டார்.

"சொல்லி வேலையில்லை .அப்பிடி ஒரு ருசி"

"நீங்கள் எப்பவும் இப்பிடித்தானே பொய்யாய் சொல்லுறது "

" உண்மையாய்த்தான் சொல்லுறன். உங்கடை கைக்கு ஒரு தனி ருசி இருக்குது"

எனது புகழ்ச்சியில் மாமி பெருமிதப்பட்டு வெட்கச்சிரிப்பு சிரித்தார்.

செல்லையர், சோளம் பொத்தியை பல்லால் கறுவியபடி

" மற்றதுகளையும் சொல்லன் மோனை" என்றார்.

**2) பத்திரக்கலவை அல்லது மூடு படையிடல்**

இதை ஆங்கிலத்தில் Mulching என்று சொல்லுவார்கள்

"என்ன புதினமான சொல்லெல்லாம் சொல்லுறாய்"

"தென்னமரத்தின் அடியில் இருந்து ஆறுஅடிச் சுற்றுவட்டத்திலை, காய்ந்த தென்னோலை, அல்லது வைக்கல், அல்லது காய்ந்த புல்பூண்டுகள் அல்லது ,காய்ந்த இலைச் சருகுகள் என்பனவற்றை வட்டமாக போட்டு மேல்மண்ணை மூடிவிடுவதை பத்திரக்கலவையிடல் எண்டு சொல்லுறது "

"இதாலை என்ன நன்மை விதானையார்? " என்றா பர்வதம் மாமி. " இந்த பத்திரக்கலவை மண்ணை மூடி இருப்பதாலை மண்ணிலை இருந்து நீர் ஆவியாகிப்போகாது .அதோட இந்தப் பத்திரக்கலவை கொஞ்சம் கொஞ்சமாய் உக்கி பசளையாகி மண் வளத்தைக் கூட்டுது."

"மண்ணைப் 'பத்திரமாய்' பாதுகாப்பதாலை பத்திரக்கலவை எண்டு நல்ல பேர் வச்சிருக்கிறியள் விதானையார் " என்று சிரித்தார் பர்வதம்மாமி.

" ஆறடிப் பட்டம் ஏழடிப் பட்டம் என்னுமாப்போலை அதென்ன புது வியளமாய் ஆறடிச் சுற்று வட்டம் எண்டுகிறாய்" என்றார் செல்லையர்.

" அண்ணை சூரியன் நடு உச்சியிலை நிக்கேக்கை , ஒரு மரத்தின்ரை நிழல் பூமியிலை வட்டமாய் விழும்.

இந்த நிழல் வட்டத்துக்கைதான் அந்த மரத்தின்ரை துடிப்பான வேர்கள் (Active roots ) காணப்படும். இந்த துடிப்பான வேர்கள் இருக்கிற பகுதியை பத்திரக்கலவை கொண்டு மூடிப் பாதுகாத்தமெண்டால் மரம் செழிப்பாய் இருக்கும் .தென்னை மரத்தின் நிழல் வட்டம் ஆறடி சுற்றிலை விழும்.

அதாலைதான் ஆறடி சுற்று வட்டத்திலை பத்திரக்கலவை இடவேணுமெண்டனான்"

"விதானையாரிட்டைத்தான் இப்பிடியான புது விஷயங்கள் எல்லாம் அறிகிறம் " என்று எனக்கு புகழாரம் வைத்தார் பர்வதம்மாமி.

" மாப்பிளை பாக்கப் போகேக்கை உவற்றை தலை வெளிப்பை பாத்திட்டு , ராசு மச்சான் கொஞ்சம் தயங்கினவர். நான் தான் 'மச்சான் வெளிச்ச மண்டேக்கைதான் சரக்கிருக்கும்' எண்டு விடாப்பிடியாய் நிண்டு மருமோளுக்குச் செய்து வைச்சனான்" என்று வஞ்சப் புகழ்ச்சியாய் எனக்கு நளினம் வைத்தார் செல்லையர்.

நான் நேரத்தைப் பார்க்க "மிச்சத்தையும் சொல்லிப் போட்டு போ மோனை'' என இறங்கி வந்தார். "இல்லை அண்ணை, மகளை வகுப்பிலை இருந்து ஏத்திவரப் போக வேணும் .பேந்து ஒரு நாளைக்கு வந்து மிச்சத்தைச் சொல்லுறன்'' என்றவாறு மோட்டார் சைக்கிளைக் கிளப்பினேன்.

■

> **பொத்தியை உரித்து முத்துக்களை உதிர்த்து வாயில் போட்டு சப்ப உப்புச் சுவையுடன் சோளப் பால் அமிர்தமாய் இருந்தது . "எப்படி இருக்கு விதானையார்?" பர்வதம் மாமி ஆவலுடன் கேட்டார். "சொல்லி வேலையில்லை . அப்பிடி ஒரு ருசி"**



25

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை ①




## 1990 - 1995

○ தில்லைநாதன் கோபிநாத்


**1990**களின் யாழ்ப்பாணத்தில் மக்களுக்கு அரசியற் தெளிவூட்டவும், பரப்புரை செய்யவும் போர் வெற்றிகளைக் கொண்டாடவும், கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும் கலை இலக்கியப் பண்பாட்டுக் களங்களாகவும் செய்திகளை வழங்கவும் அறிவினைப் பகிர்ந்து கொள்ளவும் எனப் பல்வேறு நோக்கங்களுடன் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் புலிகளைச் சார்ந்த கட்டமைப்புக்களால் தொடங்கப்பட்டன. அந்த வெளியீடுகள் மக்கள் மத்தியில் பெரும் எண்ணிக்கையில் விற்பனையாகி எதிர்பார்த்த பலன்களை வெற்றிகரமாக வழங்கியதால் மென்மேலும் பரந்துபட்ட உள்ளடக்கங்களைக் கொண்ட இதழ்கள் தொடங்கப்படலாயின. 1995இல் இவ்வாறு தொடங்கப்பட்ட இதழ்களாக நாற்று, நிர்மாணி, சட்டத்தின் திறவுகோல், நுணுக்குக்காட்டி போன்றவை அமைகின்றன.

பெண்கள் தொடர்பானதும், பெண்விடுதலை தொடர்பானதுமான ஆய்வுசார் செயற்பாடுகளை முன்னெடுக்க உருவான தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனமானது, நூலகம் உள்ளிட்ட வளங்களுடன் கோப்பாய் கல்வியங்காட்டில் இயங்கிவந்தது. அந்த ஆய்வு நிலையத்தின் வெளியீடாக வெளியான சஞ்சிகையே நாற்று ஆகும். ஏற்கனவே பெண்கள் இதழாகச் சுதந்திரப் பறவைகள் வெளியாகிவந்த போதும் அது அரசியற் துறையினரின் மகளிர் பிரிவின் வெளியீடாகவே இருந்தது. நாற்று இதழானது, சமூக மட்டத்தில் பெண்களது உரிமைகள், பெண்விடுதலை பற்றிப் பேசிய இதழாக அமைந்தது.

நாற்றின் முதலாவது இதழ் 1995 தை-மாசி மாதங்களுக்குரியதாக ஏ5 அளவில் 60 பக்கங்களுடன் வெளியானது. ஆசிரியர் குழு விபரம் குறிப்பிடப்படவில்லை. முதலிதழின் இதழமைப்புக்கு எழுத்தாளர் சிதம்பர திருச்செந்திநாதன் பங்களித்திருந்தார். அடுத்தடுத்த இதழ்களின் இதழமைப்பு சிறீ வாணி என்பவரால் தொடரப்பட்டது. தயா, சிரித்திரன் சுந்தர் ஆகியோரின் ஓவியங்கள் நாற்று இதழ்களை அலங்கரித்தன.

உள்ளடகத்தைப் பொறுத்தவரை பெண்விடுதலை தொடர்பான பல்வேறு கட்டுரைகள் நாற்றில் வெளியாகின. பெண்விடுதலையைப் பேசும் கவிதைகள், முக்கிய ஆளுமைகளின் நேர்காணல்கள், சர்வதேசப் பெண்கள் அமைப்புக்கள் பற்றிய தகவல்கள் போன்றவையும் நாற்றில் இடம்பெற்றன.

அக்காலத்தில் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட தமிழீழச் சட்டங்கள் தொடர்பான தகவல்கள் நாற்றில் தொடர்ச்சியாக வெளியாகி வந்தன. குறிப்பாகப் பல்வேறு உண்மைச் சம்பவங்களும் அவை தொடர்பான சட்டங்களும், நீதிமன்ற முடிவு விபரங்களும் நாற்றில் வெளியாகின. அவ்வகையில் பெண்களுக்கு உள்ள சட்ட உரிமைகள், சட்டப்பாதுகாப்புக்கள் தொடர்பில் பரவலான விழிப்பு ணர்வை ஏற்படுத்த நாற்று முயன்றது எனலாம். பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நாற்றுக்கு எழுதியனுப்பிய போது அவற்றுக்கான பதில்கள் களையெடுப்பு என்ற பகுதியில் இடம்பெற்றன.




அக்காலத்தில் பெண்விடுதலை தொடர்பான செயற்பாடுகளையும் அவற்றின் குறை, நிறைகளையும் அறிந்து கொள்ள நாற்று இதழ்கள் உதவுகின்றன. 1995இல் இருமாத இதழ்களாக ஆகக்குறைந்தது நான்கு நாற்று இதழ்கள் யாழ்ப்பாணத்தில் வெளியாகின. ஐந்தாவது இதழும் யாழ்ப்பாணத்தில் வெளியானதா என்பது தெரியவில்லை. 1995 இடம்பெயர்வின் பின்னர் வன்னிக்கு நகர்ந்து அங்கிருந்து நாற்று தொடர்ந்து வெளியாகி வந்தது.

நாற்று இதழ்களில் தமிழீழச் சட்டங்கள் தொடர்பாகப் பல்வேறு தகவல்கள் வெளியானது பற்றிக் குறிப்பிடுகையில் அதற்கடுத்து சட்டங்கள் தொடர்பாகவே வெளியான இதழாக அமைவது "சட்டத்தின் திறவுகோல்" ஆகும். கோண்டாவிலில் அமைந்திருந்த நீதி நிர்வாக நடுவப் பணியகத்தின் வெளியீடான சட்டத்தின் திறவுகோல் இதழமைப்பிலும் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் பங்களித்திருந்தார். சட்டங்களின் அறிமுகம், சட்ட நூல்கள், உண்மை நிகழ்வுகளும் அவற்றுக்கான சட்டங்களும், உலக நீதி முறைமைகள் போன்ற பல்வேறு சட்டத்துறை தொடர்பான கட்டுரைகள் இந்த இதழில் இடம்பெற்றன. சட்டத்தின் திறவுகோல் முதலாவது இதழ் 1995 ஆனி மாதத்துக்குரியதாக வெளியானது. அதன்பின்னர் வேறு இதழ்கள் வன்னியிலிருந்து வெளியாகியிருக்கலாம்.

இதே காலத்தில் வெளியான இன்னொரு துறைசார் இதழ் 'நிர்மாணி' என்பதாகும். தமிழீழ நிர்வாக சேவையினரின் பொறியியல் பகுதியினரால் வெளியிடப்பட்ட நிர்மாணியின் முதலிதழ் 1995 மே 5ஆம் திகதி நாவலர் கலாச்சார மண்டபத்தில் வெளியிடப்பட்டது. 1995 சித்திரைஆனி மாதங்களுக்குரியதாக வெளியான இரண்டாவது இதழே அதன் கடைசி இதழாக இருக்கலாம்.

1995 புரட்டாதி மாதம் தமிழ்த்தாய் வெளியீடாக நுணுக்குக்காட்டி எனும் இதழ் தொடங்கப்பட்டது. தமிழ் மக்களின் அரசியல், போராட்ட, வரலாற்று நிகழ்வுகள் தொடர்பில் பல்வேறு தரப்பினரின் கருத்துக்களைப் பதிவுசெய்து ஆவணப்படுத்துவதை இவ்விதழ் தனது நோக்கமாகக் கொண்டிருந்தது. பல்வேறு பத்திரிகைகள், வானொலிகள், அறிக்கைகள் போன்றவற்றிலிருந்து சில வசனங்களை எடுத்துத் தொகுப்பதாக நுணுக்குக்காட்டி அமைந்தது. நுணுக்குக்காட்டியின் இரண்டாவது இதழ் வெளியானதா என்பது தெரியவில்லை. ■

---

மின் 'மினிக்கதை'

# கனவுதான் முதற்பிறவி

○ அகமது ஃபைசல்



தரையில் பாய் விரித்து உறங்குகிறேன். என்னுடன் வந்த கனவின் மேனியும் அருகிலே விழித்திருக்கிறது. யாரும் தனியே உறங்குவதில்லை. உறங்குகின்ற எல்லோருடனும் கனவின் மேனி துணைக்கு இருந்தே தீரும்.

"விர் விர்ரென பறந்து வந்து, எனது கனவின் மேனியெங்கும் தங்கிவிட்டன காட்டுத் தும்பிகள். உதட்டைக் கடித்துக்கொண்டும், கண்களை இறுக மூடிக்கொண்டும், முகத்தைச் சுழித்துக்கொண்டும் உறங்கிக் கிடந்தேன். கனவின் மேனி என் உடலைத் தடவிக்கொடுத்தது.

வானம் கீழே இறங்கி, கனவின் மேனியை மூடி, காட்டுத் தும்பிகளின் அடாவடித்தனங்களிலிருந்து என்னைக் காப்பாற்றியது. கனவின் மேனியழகைக் கண்ட ஆகாயம் நட்சத்திரங்களையும், மேகங்களையும் என் கண்கள் மீது பரப்பி கனவின் மேனியழகைக் கூடிக் கதைக்கத் தொடங்கிற்று. உறக்கம் கலைந்து சாமத்தில் கண்களைத் திறந்து பாயிலே எழுந்து அமர்ந்து விடுகிறேன். ஆகாயம் தலையில் தட்டுகிறது. நட்சத்திரங்கள் என் மடியில் விழுகின்றன. மேகங்கள் பாயிலே மிதக்கின்றன. ஆகாயத்தில் பறந்து வந்த ஒரு வெள்ளைப் பறவை கனவின் மேனியைக் கொத்திச் செல்கிறது. எனது அறையில் இருக்கும் எல்லாத் தளபாடங்களின் மீதும் மற்றும் சுவரில் தொங்கும் இலை ஓவியங்கள் மீதும் அமர்ந்த காட்டுத் தும்பிகள் தங்கள் கூத்தைக் காட்டுகின்றன.

எங்கோ இருந்து அறைக்கு வந்த குளிர் காற்று, என்னுடல் மீது முளைத்துப் படருகிறது. எந்த நாட்டு விமானமோ எனது நாட்டுக்குள் வந்து தரையிறங்கும் சத்தம், காட்டுத் தும்பிகளின் ராக்கூத்து என் காதுகளை வெடிக்கச் செய்கிறது. காதுகளை இறுக கைகளால் பொத்துகிறேன். ஆகாயம் மேலே எழுகிறது.

என் மடியில் ஒரு நட்சத்திரம் பெரும் ஒளியைச் சிந்தியவாறு கிடக்கிறது. இனி நான் உறங்கலாமா? விழித்திருக்கலாமா? நட்சத்திரத்தைக் கேட்கிறேன். அது மேகங்கள் கரைவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. என்னைச் சுற்றிலும் நீலம் சிந்திக் கிடக்கிறது. அது கனவின் மேனியின் காயங்களில் இருந்து வந்த நீலம்தான் என்று நம்பினேன். அதுவுமில்லை. வானத்தின் நீலம்தான் என நம்பினேன். அதுவுமில்லை. காலையில்தான் கண்டேன் வாசலில் ஒரு நீல ரோஜா பூத்திருப்பதை. என் முதற் பிறவி கனவுதான். நான் என் தாயின் கனவு. நீங்களும் உங்கள் தாயின் கனவே. ■

# மாணவர் கழகம்



**பெயர்:** பிரதீபன் ஆதிரை
**முகவரி:** 'சக்தி அகம்' அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
**பி. திகதி:** 2009.06.19
**பாடசாலை:** யா/ மகாஜனக் கல்லூரி.
218



222
**பெயர்:** றமேஸ் அஸ்ரின்
**முகவரி:** சித்திரமேழி இளவாலை.
**பி. திகதி:** 30.08.2015
**பாடசாலை:** யா/இளவாலை மெய்கண்டான் பாடசாலை.



219
**பெயர்:** பிரதீஸ் தேனுஷாந்,
**முகவரி:** சரசாலை தெற்கு , சாவகச்சேரி.
**பி. திகதி:** 17.09.2013
**பாடசாலை:** சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.



**பெயர்:** ரங்கன் மோனீஸ்,
**முகவரி:** இல.9, கலாமன்ற வீதி, பருத்தித்துறை.
**பி. திகதி:** 29.04.2015
**பாடசாலை:** வட இந்து ஆரம்பப் பாடசாலை.
220



**பெயர்:** நகுலன் லக் ஷகி,
**முகவரி:** காளி கோவிலடி, துர்க்காபுரம், தெல்லிப்பழை.
**பி. திகதி:** 27.02.2012
**பாடசாலை:** யா/ மகாஜனக் கல்லூரி.
221





நீங்களும் பங்கேற்க விரும்புகிறீர்களா?

சஞ்சீவி
**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ........................................
2. முகவரி: ........................................
........................................
3. பிறந்த திகதி: ........................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ........................................
5. கற்கும் தரம்: ........................................
6. தொலைபேசி இலக்கம்: ........................................

........................ ........................
பெற்றோர் ஒப்பம்

**உங்கள் புகைப்படங்களுடன்...**
*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

0773165555

# சொற்சிலம்பம் போட்டி 37

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | 6 |
| 7 | | ■ | 8 | 9 | ■ | 10 | |
| | ■ | 11 | | | 12 | | ■ |
| 13 | 14 | | | ■ | | ■ | 15 |
| ■ | 16 | | ■ | 17 | | 18 | |
| 19 | | ■ | 20 | | ■ | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |
| 24 | | ■ | 25 | | | | |

அனுப்புபவர் பெயர்:........................................
முழுமையான தபால் விலாசம்: ........................................
........................................
கையொப்பம்:........................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. இது எச்சரிக்கைக்கான அடையாளம் 4. இது உயர்ந்து வளரும் கிளைகள் இல்லாத மரம் 7. அதிகம் 8. மன்னன் 10. எண்சாண் உடம்புக்கு இது பிரதானம் 11. சேர்தல்/ கூடுதல்/ இணைதல்/ கலவி 13. கோள் 16. மண்ணுக்கு முந்தியது 17. முதல்வன்/ உரிமையாளன்/ தலைவன் 19. நசிக்கு மாறான ஏவல் 20. ஒருவருக்கொருவர் இதுவாக இருத்தலே கணவன்- மனைவி தத்துவம் 21. அதிக/ பாரமான 22. நித்திரை 23. அனைத்து/ எல்லாமுமான/ முழு 24. குத்து விழும் ஓசை. 25. மகாபாரதத்தில் பீஷ்மர் இப்பெயரால் குறிப்பிடப்படுவார்.

## மேலிருந்து கீழ்

1. காதில் மாட்டும் அணிகலன் 2. ரகம்/விதம் 3. மதங்களுடன் தொடர்புடைய புராதனக் கதைகள் 5. எதுவொன்றினதும் ஆரம்பம் 6. சொத்துக்கள்/ சீப்புக்கள் சேர்ந்திருப்பது 9. ரஷ்யாவை ஆண்ட மன்னர்கள் 11. உள்நுழைதல்/ தஞ்சமடைதல் 12. முன்னர் பிரபல்யமாயிருந்த தொடர்பாடல் முறைமையொன்று. 14. அடுத்தவர் அறியாது பேணப்படுவது. 15. அரசர் 17. நீர்நிலைக்குப் பாதுகாப்புக்காக கட்டப்படுவது. 18. கூறுவாயாக. 19. மண்டி (கச்சா) எண்ணெய். 20. ஒரு அழகான பூச்சியினம் 23. ஒரே அளவுடைய

### சொற்சிலம்பம் போட்டி 35 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. துவேசம் 4. கமுகு 7. ரோசம் 8. பருத்தி 9. கம்பளம் 10.தரை 11. பதம் 13. சம்சாரம் 16. பாதை 17. சம்பவம் 19. என 20. திம்பு 21. கரும்பு 22. புலி

**மேலிருந்து கீழ்**

1.துரோகம் 2. வேசம் 3. சம்பளம் 4. கரு 5. முத்தம் 6. குதிரை 8. பம்பரம் 12. தம்பதி 13. சதை 14. சாசனம் 15. அம்புலி 16. பாரி 18. வம்பு 19. எரு

**சொற்சிலம்பம் போட்டி இல.37**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**13.03.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 35 இல் வெற்றி பெற்றோர்

**1 ஆம் பரிசு**
**ஜீவராசா சதுர்சன்**
14ம் கட்டை, ஒட்டுசுட்டான்

**2 ஆம் பரிசு**
**பு.கோபிஷாந்**
1ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு

**3 ஆம் பரிசு**
**க.குமாரசிங்கம்**
39, சென்ற் லோரன்ஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 6

**4 ஆம் பரிசு**
**த.பரமேஸ்வரன்**
உபதபாலகம், கந்தரோடை, சுன்னாகம்.

**5 ஆம் பரிசு**
**ப.சின்னதுரை**
எ19, 164 பாடசாலை வீதி, உமையாள்புரம்

# "கண்டால் வரச் சொல்லுங்க, அழகியை கையோட கூட்டி வாருங்க"

சங்கேதன்


ரேவதி

கடந்தவாரம் பேஸ்புக்கில் திடீரென ஒரு வீடியோ வைரலானது. "என்ர அழகியைக் காணேலை , ஆரும் கண்டால் அவளை என்னட்டச் சேர்ப்பியுங்கோ. அவளுக்கு வலிப்பு வாறது. எங்கையாவது பதுங்கி நிப்பாள். அவளைப் பார்த்து ' அழகி, அழகி' எண்டுரெண்டு தரம் கூப்பிட்டுப் பாருங்கோ. அப்பிடிக் கூப்பிடேக்க திரும்பிப் பார்த்தால் அது எங்கட அழகி தான். அழகியைக் கண்டுபிடிச்சுத் தந்தால் உங்களுக்கு நான் என்ன வேணுமெண்டாலும் தாறன்"

இப்படி கண்ணீரோடு ஒரு பெண்ணின் கோரிக்கையே அந்த வீடியோ. அந்தப் பெண் குறிப்பிடும் அழகி அவரின் பிள்ளையல்ல, பிள்ளையைவிடவும் அவர் மேலாக நினைக்கும் அவரின் நாய்க்குட்டி. அவர் செல்லமாக வளர்த்த அழகியை தொலைத்து விட்டு, கண்டுபிடிக்கும் வழி தெரியாமல் கண்ணீரோடு அந்தப் பெண் பேசும் ஒவ்வொரு சொற்களும் மனிதம் உள்ள எவரையும் உள்ளம் கசியவைக்கும். அப்படி அந்த அழகியைத் தேடியலைந்த அந்தப் பெண்ணின் பெயர் கோபிராஜ் ரேவதி. சங்கானையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் இப்போது நாவற்குழியில் வசித்து வருகிறார். தன் உறவினர்களின் வீட்டுக்கு சென்ற போதே அவரில்லாத நேரம் அழகி எங்கோ ஓடித் தொலைந்திருந்தது .

அழகி மீண்டிருப்பாளா , இல்லையா என்ற ஆயிரம் கேள்விகளோடு அவர் வீட்டை அடைந்தோம். வாசலுக்கு வந்த ரேவதியின் முகத்தில் படர்ந்திருந்த சந்தோசமே அவரிடம் அழகி மீண்டும் வந்துவிட்டதைச் சொன்னது. அழகியை மடியில் வைத்து அணைத்தபடி ரேவதி எங்களுக்கு அழகிக்கும் தனக்குமான பந்தத்தைச் சொல்லத் தொடங்கினார்.

## அழகி வந்தாள்

ரேவதிக்கு சிறு வயதில் இருந்தே பிராணிகள் மீது அன்பு அதிகம். அது திருமணமான பின்னும் தொடர்ந்தது. ரேவதியின் கணவர் கோபிராஜும் அவரின் பிராணிகள் மீதான ஆர்வத்துக்கு தடை போடாமல், ஆதரவளித்தார். ஒரு தடவை சங்கானையில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தார். அங்கே போகும் போது ரேவதியிடம் ஏற்கனவே புரூஸ், நீலு என்று 2 நாய்கள் இருந்தன. கிட்டத்தட்ட அதே வர்ணத்தோடு இருந்த அழகியை ரேவதிக்கு பார்த்த மாத்திரத்திலேயே பிடித்துப் போனது.

"இதுவும் உன்னட்ட இருக்கிற நாய்க்குட்டியள் மாதிரியே இருக்குது. வேணுமெண்டால் கொண்டு போ என்று உறவினர்கள் பச்சைக்கொடி காட்ட, அன்றைக்கே அழகியை நாவற்குழிக்கு கொண்டுவந்துவிட்டார் ரேவதி. இப்போது அவர் வீட்டில் அழகிக்கு அமோக கவனிப்பு. அழகியின் உடல் முழுவதும் பரந்திருந்த தெள்ளு அகற்றப்பட்டு, குளித்து, நேரத்துக்கு சாப்பிட்டு, ராஜபோக வாழ்க்கை அழகிக்கு வாய்த்தது. ஆனால் யார் கண்பட்டதோ ? அழகிக்கு வந்தது ஆபத்து.

## அழகிக்கு வந்த ஆபத்து

அயல்வீட்டுக்காரர் மீன் வெட்டிக் கொண்டிருக்கும் போது, வெட்டியெறியப்படும் மிச்ச மீன்களை உண்பதற்காக அவருக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தாள் அழகி. ஆனால் அந்தநேரம் பார்த்து தென்னை மரத்தில் இருந்த தேங்காய், அழகியின் தலைமீது வீழ்ந்தது.

பலமான காயம். அழகி வலியால் துடித்தாள். கொரோனாக் கால ஊரடங்கு வேறு. நினைத்தபடி வெளியில் செல்லவும் முடியாது. அப்படியிருந்தும், நல்லூர் முத்திரைச் சந்தையடியில் உள்ள கால்நடை மருத்துவர் ஒருவரிடம் அழகியைக் கொண்டு சென்று காட்டினார்கள். அவரின் சிகிச்சையில் அழகியின் வலி குறையத் தொடங்கியது.

ஆனால் அந்தோ பரிதாபம், அவளின் கண்களும் , காதுகளும் செயற்பட மறுத்துவிட்டன. அத்தோடு அழகி உயிர் பிழைப்பதும் சந்தேகமே என கால்நடை மருத்துவரும் கைவிரித்து விட்டார்.

## அழகிக்காக நேர்த்தி

ரேவதிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பக்கத்தில் உள்ள ஆலயத்துக்கு ஓடோடிச் சென்றார். அழகியைக் காப்பாற்றும்படி,தெய்வத்திடம் கதறியழுது , நேர்த்தி வைத்து முறையிட்டார். என்ன அதிசயம், அவர் நேர்த்தி வைத்த இரண்டாம் நாளே அழகியின் கண்களும், காதுகளும் மீண்டும் செயற் படத் தொடங்கின. பழையபடி அவளால் பார்க்கவும், கேட்கவும் முடிந்தது. ரேவதியின் செல்லப்பிள்ளையாக அழகி மாறினாள்.

அவரையே வளைய வளைய அழகி சுற்றிவருவாள். ஆனாலும் கடுமையாகப் பயந்த சுபாவம், எவருக்கும் கடிக்கவோ, குரைக்கவோ மாட்டாள். பிற நாய்கள் குரைத்தால் ஓடிப்போய் எங்காவது பதுங்கி விடுவாள்.

## வலிப்பால் அவதி

மீண்டும் அழகிக்கு சோதனை. தேங்காய் விழுந்ததால் அழகியின் தலைக்குள் இரத்தக்கட்டி ஏற்பட்டு, நாளடைவில் அவளுக்கு வலிப்பு வரத்தொடங்கியது.வாயெல்லாம் நுரைதள்ள, வலியின் வதையால் என்ன செய்வதென்று தெரியாமல், தன் தலையை சுவரோடோ அல்லது தரையோடோ பலமாக அழகி அடிப்பாள். அவ்வாறு தலையை மோதுவதால் அவளின் மூளை நரம்பு வெடித்து அவள் இறக்கவும் கூடுமெனெ கால்நடை மருத்துவர்கள் சொல்ல, ரேவதியின் கவனிப்புக் கூடியது. ஆனால் ரேவதியை அழகி அவ்வளவு கஷ்டப்படுத்தவில்லை. தனக்கு வலிப்பு வரப்போவதை முன்னரே உணர்ந்து கொண்டு, அந்தச் சமயங்களில் ரேவதியிடம் அழகி ஓடி வந்துவிடும்.

ரேவதியும் நடுச்சாமம் என்றாலும் எழுந்து, அழகியை மடியில் போட்டு, ஆறுதலாகத் தடவி, தலையைப் பலமாக பற்றிப்பிடிப்பார். இரண்டு நிமிடங்களில் வலிப்பு நிற்க, அழகி பழையபடி விளையாடத் தொடங்கிவிடும். அழகியின் சுட்டித்தனங்களை ரசிப்பதே ரேவதியின் பொழுதுபோக்கு.

## அழகி தொலைந்து போனாள்



இப்படியிருக்கையில்தான் மீண்டும் சங்கானைக்குச் சென்றார் ரேவதி. வீட்டில் இருக்கும் போது அழகிக்கு வலிப்பு வந்தால் , அதனைக் காப்பாற்றமுடியாதே என்ற எண்ணத்தில், அவளையும் தன்னோடு கூட்டிச் சென்றார். உறவினர் வீட்டில் அழகியை விட்டு விட்டு, கடைக்குப் போய்வந்த ரேவதிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வீட்டுக் கேற்றை யாரோ திறந்து விட்டிருக்க, அழகியைக் காணோம்! பதைபதைப்போடு அன்று முழுதும் அழகியைத் தேடும் படலம் தொடங்கியது. இரவிரவாகத் தேடியும் அழகியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அடுத்த நாளும் தேடினார்கள்.

ம்கூம்.. அழகி கிடைத்தபாடில்லை. இந்த நிலையில் தான் ரேவதியின் கணவர் ஒரு யோசனை சொன்னார். பேஸ்புக்கில் அழகியின் புகைப்படங்களையும், ரேவதியின் கோரிக்கையையும் பதிவேற்றினால் அழகியைக் கண்ட யாராவது தகவல் தரக்கூடும் என்பதே அவரது யோசனை. ரேவதியும் சம்மதித்தார். அழகியைக் கண்டு பிடித்துத் தாருங்கள் என்ற ரேவதியின் கோரிக்கை பேஸ்புக்கில் வைரலாகி, பரவத்தொடங்கியது. அதைப் பார்த்த பலரும், அவரின் அன்பை நினைத்து ஆச்சரியப்பட்டு, காணொலியை பகிர்ந்தார்கள். இன்னொரு தரப்போ ரேவதியின் அழகி மீதான அன்பினைக் கிண்டலடிக்கவும் செய்தார்கள். ஆனால் ரேவதியும் கணவரும் அதைப்பற்றியெல்லாம் கணக்கில் எடுக்கவில்லை. அவர்கல் அழகியைக் கண்டுபிடிக்கும் வழிகளைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

**ஜோதிடத்துக்கு 10 ஆயிரம் ரூபா**

அழகி எங்கிருக்கிறாள் என அறிய ஜோதிடம் பார்க்கவும் போனார் ரேவதி. ஒவ்வொரு ஜோதிடரும் ஒவ்வொரு மாதிரிச் சொன்னார்கள். கிட்டத்தட்ட ஜோதிடம் பார்க்கவே பத்தாயிரம் ரூபா வரை ரேவதி செலவிட்டிருந்தார் ஒருவர் இன்று கிடைக்கும் என்றார். இன்னொருவர் அது மறைந்து விட்டது என்றார். இப்படி அவர் ஒரு நாய்க்குட்டிக்காக ஜோதிடம் பார்க்கப் போவதை அவரின் உறவினர்கள் சிலர்கூட, கேலி செய்தார்கள். ஆனாலும் அவர் அதைச் சட்டை செய்யவில்லை. கடைசியாக துன்னாலையில் ஒரு ஜோதிடர் "உன் அழகி நாளை மாலைப் பொழுதுக்கிடையில் உனது கைகளுக்கு கிடைப்பாள். நீ அவளைத் தேடத் தேவையில்லை என்று கூற , ரேவதிக்கு கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது. ரேவதியின் பயமெல்லாம் வலிப்பு வந்து, எங்காவது போய் தலையை மோதி ஏடகூடாமாக அழகிக்கு எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதே. அத்தோடு அவளுக்கு வீட்டுக்கு வரும் வழியும் தெரியாது. சாப்பாடும் இல்லாமல் எங்கெல்லாம் அலைகிறாளோ என்று மனதுக்குள் அவர் உருகினார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

# பொக்கிஷங்களின் பூமி முத்தையன்கட்டு!



○ சாதுரியன்

முத்தையன்கட்டு.
தொன்மையும், வீரமும்,வளமும் நிறைந்த வன்னியின் பெருமையைச் சொல்லும் ஊர். முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முத்தையன் கட்டு கிராமம், வரலாற்றாதாரங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது.

பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியில் ,புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து வலது பக்கமாக சுமார் பதினைந்து கிலோமீற்றர் பயணித்தாலோ, அல்லது யாழ்ப்பாணம் கண்டி ஏ-9 வீதியில் மாங்குளம் சந்தியிலிருந்து இடதுபக்கமாக சுமார் 24 கிலோமீற்றர் சென்றாலோ முத்தையன்கட்டை அடையலாம். வயல்நிலங்களும் ,வாழைகளும், தென்னையும்,கமுக மரங்களும், பலவிதபயிர்கள் கொண்ட தோட்டங்களும், ஆடுகளும் மாடுகளும் எருமைகளும் நிறைந்துள்ள பசுமைக்கிராமமான முத்தையன்கட்டு இன்றுவரை வரலாற்றாளர்களால் வரையறுத்துக் கூறமுடியாத பொக்கிஷங்கள் புதைந்துள்ள நிலம்.



முத்தையன் கட்டிய அணை

பலநூற்றாண்டுகளுக்கு முன்பு முத்தையன் என்கின்ற அரசன் பேராற்றங்கரையில் தனது அரண்மனையைநிறுவி வன்னியை ஆட்சி செய்துவந்தான். தனது ஆட்சியில் மக்கள் செழிப்புடன் வாழ, விவசாயத்துக்கு முன்னுரிமை அளித்த முத்தையனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கிராமங்களுக்குப் பொறுப்பதிகாரிகளாக உடையார் எனப்படுவோர் செயற்பட்டு வந்தனர். ( ஏராளமான நிலபுலன்களையும் கால்நடைப்பண்ணைகளையும் உடையவரே உடையார் எனப்படுவர் ). இந்தநிலையில் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு ஒருமுறை முத்தையன் போயிருந்தான். அங்கே அழகிய பெண்ணொருத்தியை அவன் கண்டான். அவளது அழகில் மயங்கிய முத்தையன் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய விரும்பினான். தனது அரச சபையின் சோதிடரான இராமலிங்கம் என்பவரிடம் அந்தப் பெண் தொடர்பில் தகவலைப் பெற்று, அவளைத் தனக்கு திருமணம் செய்துவைக்குமாறு பணித்தான்.

முத்தையனின் கட்டளையை சிரமேற்கொண்டு, அந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்களைத் திரட்ட ஆரம்பித்தார் சோதிடர் இராமலிங்கம். அந்தத் தேடலின் விளைவாக, வற்றாப்பளை கிராமத்தின் பொறுப்பதிகாரியான நந்தியுடையாரின் மகள்தான் அந்தப்பெண் என்பதை அறிந்து கொண்டார்.

நந்தி உடையாரிடம்சென்று முத்தையனுக்காகப் பெண் கேட்டார் சோதிடர். ஆனால் நந்தியுடையாருக்கு தன் மகளை முத்தையனுக்கு திருமணம் செய்துவைக்க துளியும் விருப்பமில்லை. அதானால் ஜாதகம் பொருந்தவில்லை என்று கூறி, முத்தையனின் கோரிக்கையை நிராகரித்து விட்டார். இதையறிந்த முத்தையனுக்கு கடுங்கோபம் ஏற்பட்டது. அந்தக் கோபத்தை தனக்குச் சாதகமாக மாற்ற முற்பட்டான் அரசசபை ஆலோசகனான குட்டி வன்னியன். அவனுக்கும் நந்தியுடையாருக்கும் ஏற்கனவே ஒரு பிணக்கு இருந்தது. எனவே இதுதான் சந்தர்ப்பம் என்று, உரையாரைப் பழிவாங்கத் திட்டமிட்டான்.

" அரசே, நந்தியுடையாரின் வயல்களுக்கு நீர் செல்லும் பேராற்றை மறித்தால், அவரது நெற்பயிர்கள் எல்லாம் வாடிவிடும். பெரும் பஞ்சத்தில் அவர் வாடி, உங்களுக்கு தன் மகளைத் திருமணம் செய்து தராமைக்கு வருந்தவேண்டும்" என்று யோசனை சொன்னான். ஆத்திரத்தில் அறிவிழந்திருந்த முத்தையனும் அவ்வாறே பேராற்றை மறித்து அணை ஒன்று கட்டினான். ஆயினும் பின்னர் நந்தியுடையாரின் மகள், முத்தையனி டம் வந்து குட்டி வன்னியன் பழிவாங்கவே இப்படி அணையைக் கட்டுவித்த விடயத்தை தெளிவுபடுத்தினாள். அதன் பின்னர் உண்மையை உணர்ந்து கொண்ட முத்தையன், குட்டி வன்னியை ஆலோசகர் பதவியில் இருந்து அகற்றியதோடு, தண்டனையும் வழங்கினான். நந்தியுடையாரின் மகளைத் தன் ஆலோசகராக்கி, நல்லாட்சி புரிந்தான்.

- இந்தச் செவிவழிக்கதையைச் சொன்ன முதியவர், " அன்றைக்கு முத்தையன் நந்தியுடையாரின் வயலுக்கு நீர் போகாமல் கட்டிய அணைக் கட்டு இருந்த இடமே இன்று முத்தையன்கட்டு என்று சொல்லபட்டுகின்றது" என அந்த ஊர்ப்பெயருக்கான காரணத்தையும் தெரியப்படுத்தினார்.

## சிதைந்த அரண்மனை

முத்தையன்கட்டு கிராமம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது . குளத்தின் இடப்பக்க நீர்ப்பாசன நிலம் இடதுகரை எனவும், வலதுபக்க நீர்ப்பாசனநிலம் வலதுகை எனவும் அழைக்கப்படுகிறது. ஒட்டுசுட்டான் வீதியிலிருந்து முத்தையன்கட்டு குளம் நோக்கி பயணித்தால், சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் இடது பக்கமாக ஒரு துர்க்கையம்மன் கோவில் தென்படும். அங்கு வாய்க்கால் ஒன்றின் மேல் போடப்பட்டிருக்கும் சாதாரண மரப்பாலத்தினூடாகத்தான் இந்த ஆலயத்துக்குச் செல்லமுடியும். அந்தக் கோயில் மிகவும் தொன்மையான கருங்கற்களாலான வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகே சுமார் நூறு மீற்றர் தூரத்தில் இயற்கையான கருங்கல் குன்றின் மேல் ஒரு சிதைந்த அரண்மனை.

அழிவுறும் நிலையில் காணப்படும் அந்த அரண்மனையும் கருங்கற்களால் தான் கட்டப்பட்டுள்ளது. கருங்கல் படிக்கட்டுகள், செங்கல்லால் அடுக்கிக் கட்டப்பட்ட கிணறு, மண்டப முற்றத்தில் இருக்கும் கல் மேடை, பேராற்றிலிருந்து அரண்மனையூடாகப் பாயும் கிளையாறு, அந்தக் கிளையாற்றுநீர் அரண்மனைக்குள்ளே போகும் விதமாக அமைக்கப்பட்டுள்ள மதகுக்கண்கள், அரண்மனையின் நான்கு பக்கவாசலிலும் இருக்கும் படிக்கட்டுச்சிதைவுகள், எல்லையில் நிற்கும் கற்கள் என்பவை அங்கு நிலவிய மகோன்னதமான ஆட்சியைச் சொல்லி நிற்கின்றன.

இதுவரை எந்த வரலாற்றாய்வாளர்களாலும் முழுமையாக ஆய்வுக்குட்படுத்தப்படாத நிலையில் காணப்படும் இந்த அரண்மனை, தன்னுள்ளே பல தொன்மையான, இரகசியக் கதைகளையும், ஆதாரங்களையும் கொண்டிருக்கிறது.



பழமையான துர்க்கை அம்மன் ஆலயம்...



## அழிந்துபோகும் வரலாற்றுத் தடங்கள்

விடுதலைப்புலிகளது ஆளுகை நிலவிய காலத்தில் இந்தப் பகுதியில் அம்மி செய்வதற்காக ஒருவர் கருங்கல் ஒன்றை உடைக்க முற்பட்டுள்ளார். "அப்போது என்னை புலிகள் தடுத்து நிறுத்தி எச்சரித்தனர்.இந்த வரலாற்று எச்சங்களை சிதையாமல் பேணுவது தொடர்பில் புலிகள் கரிசனை கொண்டிருந்தனர் .ஆனால் தற்போது வெளிமாவட்டங்களில் இருந்து இங்கு வரும் மர்மநபர்கள் புதையல் தோண்டுவதற்காக இந்தவரலாற்று ஆதாரங்களை அழிக்கிறார்கள்" என அந்த நபர் ஆதங்கப்படுகின்றார்.

தற்போதைய நவீன கால கனரக இயந்திரங்களின் மூலமாகக் கூட, இத்தையை அரண்மனையை அமைப்பதென்பது கடினமான காரியமே. ஆனாலும் எம்முன்னோர்கள் கலை அம்சத்தோடு இப்படி ஒரு அரண்மனையை , அதுவும் வசதிகளோ, விஞ்ஞான அறிவோ இல்லாத காலகட்டத்தில் அமைப்பதென்பது அசாதாரண காரியமே.

" இந்த வேலையை மனிதர்கள் செய்திருக்கமுடியாது. பூதங்களைக் கொண்டே இந்த அரண்மனை கட்டப்பட்டது. அந்தப் பூதங்களின் சக்தி இவ்வூர் மக்களுக்கும் கிடைத்ததால் அவர்கள் வலுவானவர்களாக இருந்தனர்" என்று கிராமவாசியான முதியவர் ஒருவர் சொன்னார். தங்கள் ஊரின் வீரத்தை சொல்லும் வகையில் வைரன் என்பவனின் கதையையும் அவர் சொல்லத் தொடங்கினார்.( அந்தக் கதையை பாட்டானார் அவருக்குச் சொல்லியிருந்தாராம்)

## வேலியும் பயிரும், மாடும் ஆளும்

முத்தையன்கட்டு குளத்தின் நீர்பாச னத்துக்குக் கீழன்றி மானாவாரியாக பயிர்ச் செய்கையில் ஈடுபடும்போது குறிப்பாக காலபோகச் செய்கையின்போது வேலியும் பயிரும், மாடும் ஆளும் என்னும் பொறிமுறையிலேயே விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. முத்தையன்கட்டு குடியிருப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து நடைமுறையிலிருந்து வரும் குறித்த பயிர்ச் செய்கையின் போது வயல்நிலங்களைச் சுற்றி வேலிஅடைத்து பயிர் செய்யப்படும். இதன்போது கால்நடைவளர்ப்பாளர் கள் தங்கள் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடும்போது ஒரு ஆள் கால்நடைகளுடன் நின்று மேய்க்கவேண்டும் . இதையே' வேலியும் பயிரும், மாடும் ஆளும்' என்கிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் பயிர்ச் செய்கையின்போது ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர், முத்தையன்கட்டு நீர்ப்பாசனத்தின் பொறியியலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் முத்தையன்கட்டுகுளத்தின் நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழுள்ள 16 கமக்கார அமைப்புக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் இடையில் இடம்பெறும் கலந்துரையாடல்மூலம் இந்த 'வேலியும் பயிரும், மாடும் ஆளும் 'என்ற பொறிமுறை நடைமுறைப் படுத்தப்படுவதால், முத்தை யன் கட்டு வன்னியின் வனப்போடும் வளத்தோடும் இன்னும் விளங்கு கின்றது. ■



## ஆடுமேய்ப்பவர் கண்டுபிடித்த குளக்கட்டு

முத்தையனின் காலத்துக்குப் பிறகு இந்த இடம் ஆட்சி மாற்றங்களாலோ அல்லது வேறு காரணங்களாலோ முக்கியத்துவம் இழந்து, காடாகியது.

அதன் பின்னர் நீண்ட காலத்துக்குப் பின்னர், ஆட்டு மந்தை வைத்திருக்கும் ஒருவர் தனது ஆடுகளை நீர்நிலைகளை அண்டி மேய்த்துக் கொண்டிருந்தார். கோடைகாலத்தில் தண்ணீர் வற்றிப்போகவே அவர் தண்ணீரைத்தேடி மந்தைக்கூட்டத்தை அழைத்துச்சென்றார் . அவ்வாறு அவர் கெருடமடு என்னும் இடத்திலிருந்து சில மைல்தூரம் போனபொழுது அங்கே குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டு, நீர்தேங்கியிருப்பதைகண்டார் . பின்னர் அந்தக்குளத்தருகில் அவரும் அவருடன் சிலரும் விவசாயச்செய்கையில் ஈடுபட்டனர். இந்த நிலையில் அவர்களது வம்சாவழியினர் ஐயம்பெருமாள், கொய்யாக்குளம் என்னும் இரண்டு கிராமங்களில் நீண்ட காலமாக வசித்து வந்தனர்.

## வைரம் பாய்ந்த கட்டை

"ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம். பண்டார வன்னிய மன்னனின் வீழ்ச்சிக்குப் பின்னர் முத்தையன்கட்டும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களான கற்சிலைமடு ,ஒட்டுசுட்டான் போன்றவையும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டு இருந்தபோது உடையார் ஒருவரே கிராமத்தின் அதிகாரியாக இருந்துள்ளார்.

மாதத்தில் ஒருதடவை கிராமத்துக்கு ஆங்கிலேய அதிகாரி ஒருவன் வருவான். அவனுடன் ஆங்கிலமொழியில் உரையாடிக் கூடியவல்லமை உடையாரிடமே இருந்தது. அந்தக்காலத்தில் வைரன் என்ற பெயர் கொண்ட ஒருவன் இருந்தான். அவன் மிகுந்த பலசாலி .அவன் உடையாருக்கு கட்டுப்படாமல் தன்னிச்சையாக இருப்பான். ஆனால் அவனிடம் கடுமையாக நடக்கவோ, தண்டிக்கவோ உடையாருக்குப் பயம். காரணம், அவனது உடற்பலம். அதனால் ஆங்கிலேய அதிகாரி மூலம் வைரனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க உடையார் திட்டமிட்டார்.

அந்தக் காலத்தில் இருப்பதற்கு கதிரைகள் பயன்பாட்டில் இல்லை. அதனால் ஆங்கிலேய அதிகாரி(வெள்ளைக்காரத்துரை) வரும்போது , காட்டுக் குழைகளால் பந்தல்போட்டு, உடையார் வீட்டின் உரலின் மேல் வெள்ளைத்துணி போர்த்தி இருக்கை தயார் செய்யப்படும் . அதில் அமர்ந்தே வெள்ளைக்காரத்துரை அவ்வூர்ப் பிரச்சினை களைக் கேட்டறிவான்.

ஒருநாள் இப்படி ஊருக்கு வெள்ளைக்காரத்துரை வந்தான். அன்றைக்கு வைரனுக்கு எதிராக வெள்ளைக்காரத்துரையிடம் முறையிட உடையார் தீர்மானித்தார். அதனால் அங்கு வைரனும் வரவழைக்கப்பட்டான். அப்போது " எல்லாரும் காலமைச் சாப்பாட்டை சாப்பிட்டு விசாரணையைத் தொடங்குங்கோ" என வைரன் சொன்னான். வெள்ளைக்காரத்துரை உட்பட எல்லோரும் அதற்குச் சம்மதித்தனர்.உணவு கொண்டு வந்து வைக்கப்பட்டது.

தேக்கம் இலையில், குரக்கன்மாப் பிட்டும் உரித்த நிலையில் ஆனால் உடைக்கப்படாத தேங்காய் ஒன்றும் இருந்தன.

அனைவருக்கும் வைரனே உணவுபரிமாறினான். வெள்ளைக்காரத்துரையின் இலையைத் தவிர மற்றவர்களின் இலையிலிருந்த உடைக்காத தேங்காயை தனது இருகைகளாலும் அமத்தி நசித்து உடைத்து, பிட்டின் மேல் தேங்காய்ப் பாலை ஊற்றிவிட்டான் வைரன். இதைப்பார்த்த வெள்ளைக்காரத்துரை வைரனின் உடற்பலத்தைக் கண்டு அதிசயித்து அவனுக்கெதிரான முறைப்பாட்டை வாங்க மறுத்தானாம்"

இந்தக் கதையை அந்தப் பெரியவர் சொல்லும்போதே, தங்கள் ஊர்ப் பலசாலிகள் பற்றிய பெருமை அவர் முகத்தில் பொங்கி வழிந்தது.



## இரு ஊர்களை மூழ்கடித்த முத்தையன்கட்டு

1967ஆம் ஆண்டு முத்தையன்கட்டுக்குளம் புனரமைக்கப்பட்டு வயல்நிலங்கள், மேட்டுநீர்ப்பாசனம் என்பவை அமைக்கப்பட்டு,யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் குடியேற்றப்பட்டனர். அச்சுவேலி, கைதடி சாவகச்சேரி, கோப்பாய், நெடுந்தீவு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களே இங்கு குடியேற்றம் செய்யப்பட்டனர் முத்தையன்கட்டுக்குளப் புனரமைப்பின்போது, ஐயன்பெருமாள், கொய்யாக்குளம் என்பவை நீரில் மூழ்கியுள்ளன .இதனால் அந்தகிராமத்திலிருந்த வன்னியின் ஆதிக்குடிகளில் சிலருக்கும் இந்தக்குடியேற்றத்திட்டத்தில் வீடுகள் வழங்கப்பட்டன. ஏனையோர் கற்சிலைமடுவில் வசிக்கின்றனர். முத்தையனின் பரம்பரையினர் தற்போது கற்சிலைமடுவிலும் அதைச் சுற்றியிருக்கும் ஆதிக்கிராமங்களிலும்உள்ளனர் எனக்கூறப்படுகிறது. வலதுகரை, இடதுகரை என இரண்டாகப் பிரித்து குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது.

வலது கரையில் ஆறுகண்டங்களும் ,இடதுகரையில் நான்கு கண்டங்களுமாக பத்துக்கண்டங்களைக் கொண்ட இந்தக்குடியேற்றத்திட்டத்தில் ஒருகண்டத்தில் நூற்று ஐம்பது வீடுகள் வீதம் ஆயிரத்து ஐநூறு வீடுகள் 1967 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளன. இப்பொழுது இரண்டாவது தலைமுறைக் குடும்பங்களைக்கொண்டுள்ள இந்தக் கிராமத்திற்குட்பட்ட பகுதியில் சாளம்பன்,வித்தியாபுரம் ,கணேசபுரம் போன்ற கிராமங்களும் உருவாகியுள்ளன.

> "ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம். பண்டாரவன்னிய மன்னனின் வீழ்ச்சிக்குப் பின்னர் முத்தையன் கட்டும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களான கற்சிலைமடு, ஒட்டு சுட்டான் போன்றவையும் ஆங்கிலேயரின் ஆட்சிக் குட்பட்டு இருந்தபோது உடையார் ஒருவரே கிராமத்தின் அதிகாரியாக இருந்துள்ளார்."

# என்று கிட்டும் நீதி?



வி.யசிந்தா

போர்க் காலத்தின்போது 'சிறுமி வன்புணர்வு' என்றவாறான செய்திகளை எப்போதாவது அரிதிலும் அரிதாகவே கேள்விப்பட்டிருப்போம்.

ஆனால் இன்று?. பச்சிளம் பாலகிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுகின்றமை தொடர்கதையாக மாறிவிட்டது. கேட்டுக்கேட்டுப் பழகிப்போன ஒன்றாகவும் அது மாறியுள்ளது. ஏன் இவ்வாறான துயரங்கள் தொடர்கின்றன?. இவ்வாறான இழிசெயல்களில் ஈடுபடும் காமக்கொடூரர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?. இந்தக் கலாசாரச் சீரழிவுகள் இடம்பெறாமல் இருப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பொறிமுறைகள் என்ன? இவை இன்று எம்முன்னே பரந்து விரிந்திருக்கும் மில்லியன் டொலர் கேள்விகள்.

புங்குடுதீவில் மாணவியொருவர் மீது பாலியல் வன்புணர்வு மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, சந்தேக நபர்களுக்கு எதிராகவும் நீதியை நிலைநாட்டுமாறும் தமிழர் தாயகம் கிளர்ந்தெழுந்தது. குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட நபர்களுக்கு எதிராகத் தக்க தண்டனையும் விதிக்கப்பட்டது.

புங்குடுதீவு மாணவிக்காக ஓரணியில் நின்று உரத்துக் குரல் கொடுத்த தமிழ்ச் சமூகம் அதைப்போன்று பேரெழுச்சியை அதன் பின்னரான துர்நடத்தைச் சம்பவங்களின் போதெல்லாம் ஏன் மேற்கொள்ளவில்லை? என்ற கேள்வி இங்கு தவிர்க்க முடியாததாக எழுகின்றது.

புங்குடுதீவு மாணவி படுகொலை செய்யப்பட்டதன் பின்னரும்கூட அவ்வாறான பல சம்பவங்கள் பதிவாகித்தான் உள்ளன. வவுனியா கனகராயன் குளத்தில் மாணவியொருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். கிளிநொச்சி எள்ளுக்காட்டில் மூன்று வயதேயான சிறுமியின் சடலமொன்று வயலுக்குள் இருந்து மீட்கப்பட்டது. அவர் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார் என்று உறுதிப்படுத்தப்பட்டது. பாடசாலை விடுப்பில் நின்ற மாணவி வவுனியாவில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அவரும் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதியானது. யாழ்ப்பாணம் சுழிபுரத்திலும் 6 வயதான மாணவியொருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அவரின் சடலம் கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டது.இப்படி இன்றுவரை ஏராளம் கொடூரங்கள் பதிவாகியபடியே உள்ளன.

ஆனால், இதன்போதெல்லாம் புங்குடுதீவு மாணவிக்கு நீதிகோரி வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்பும் ஆக்ரோசமும் எம்மால் வெளிப்படுத்தப்பட்டதா என்பதை இதயசுத்தியுள்ளவர்களாக நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். எம்மை நாமே சுயபரிசீலனை செய்ய வேண்டும்.

### பெண்கள் அமைப்புக்கள் எங்கே?

பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் பச்சிளம் பாலகிகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்து நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு பொதுமைப்பாட்டுக்குரிய விடயம்தான். ஆனால், பெண்கள் சார் அமைப்புக்கள் இந்த விவகாரத்தில் கூடுதல் கரிசனை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

மேற்சொன்ன படுகொலைகளுக்கு எதிராக இதுவரை தாம் மேற்கொண்ட நீதிநிலைநாட்டுப் பொறிமுறை தொடர்பில் காத்திரமான வகிபங்கை ஆற்றாதவர்களாகவே அந்த அமைப்புக்களின் பயணம் இதுகாறும் அமைந்துள்ளது என்பது வெள்ளிடைமலை. ஆகவேதான் நீதி என்பது இன்னும் தொலைதூரக் கனியாக பாதிக்கப்பட்ட தரப்புக்களுக்கு உள்ளது.

தனித்தனி அமைப்புகளாக பிரிந்திருந்து, பெண்களுக்கு எதிராக இடம்பெறும் அநீகளுக்கு எதிராகக் சிறுகுரல் கொடுப்பதில் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. பெண் சட்டத்தரணிகள் மற்றும் கல்வியியலாளர்களை உள்ளடக்கி காத்திரமான ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு அது வாராவாரம் ஒன்றுகூடலையும், செயற்பாடுகளையும் ஆற்றினால், அது பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டிக்கும் கருத்தியல்களையும் போராட்டங்களையும் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்ல வாய்ப்பாக அமையும்.

சட்டம் அனைவருக்கும் சமம் என்று அடிக்கடி கோடிட்டுக்காட்டும் நாம், சட்டத்தை நிலைநாட்டுவதற்கான பொறிமுறைகளில் எமது தராசுகளை ஏற, இறங்க வைத்திருத்தல் ஆகாது.

> **பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் பச்சிளம் பாலகிகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு பொதுமைப்பாட்டுக்குரிய விடயம்தான். ஆனால், பெண்கள் சார் அமைப்புக்கள் இந்த விவகாரத்தில் கூடுதல் கரிசனை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.**

# விளையாட்டு

ஆர்.லயனல்



## கர்ஜிக்குமா சி.எஸ்.கே.?

இந்த வருட ஐ.பி.எல். தொடருக்கான திகதி மற்றும் அட்டவணை என்பவை அறிவிக்கப்பட முன்னமே தனது பயிற்சிமுகாம் பற்றிய அறிவிப்பை விடுத்துள்ளது சென்னை சுப்பர் கிங்ஸ்.

இதன்படி இந்த மாதம் 11ஆம் திகதி பயிற்சி முகாமை சென்னை ஆரம்பிக்கின்றது. இந்தத் தொடரில் பங்கேற்பதற்காகவும், பயிற்சி முகாமில் கலந்துகொள்வதற்காகவும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவரான டோனி கடந்த மூன்றாம் திகதி இரவு சென்னைக்கு வந்துள்ளார். அடுத்தடுத்த நாள்களில் ரெய்னா உள்ளிட்ட ஏனைய வீரர்கள் அணியுடன் இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருட ஐ.பி.எல். தொடர் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்தப்பட்டது. இந்தத் தொடருக்கான பயிற்சி முகாமையும் ஏனைய அணிகளை விட காலதாமதமின்றி முன்னெடுத்தது சென்னை. ஆனாலும் ஏமாற்றம்தான் அந்த அணிக்கு மிஞ்சியது. ஐ.பி.எல். வரலாற்றில் முதல் முறையாக 'பிளேஓப்' சுற்றுக்குச் செல்லாமல் கடந்த வருடம் சென்னை வெளியேறியது. இதனால் இந்த வருடம் அந்த அணியின் மீது மிகப்பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. அத்துடன் இந்த வருட ஐ.பி.எல். தொடர்தான் டோனியின் இறுதித் தொடராகவும் இருக்கலாம் என்கின்றன தகவல்கள். அதனால் டோனியை வெற்றியுடன் வழியனுப்பவும், கடந்த வருட விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் மீண்டும் ஒரு மகுடம் சென்னைக்குத் தேவை. அது காலத்தேவையும் கூட.

**'விசில்கள் பறக்கட்டும்...'**


## தலைமைக்கு அழகு!



கோலி களத்தில் நின்றால், நிச்சயம் அங்கு இந்திய அணிக்கு எதிரான சீண்டல்கள், தூண்டல்கள் இருக்காது. அவ்வாறு எதிரணியினர் வாக்குவாதத்தில் ஈடுபட முனைந்தால், அதற்குத் தக்க பதிலடியை கோலி கொடுத்துவிடுவார். அப்படியொரு சம்பவம் இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் அஹமதாபாத்தில் இடம்பெற்றுவரும் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இடம்பெற்றுள்ளது. இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. சிராஜின் பந்தை எதிர்கொண்டார் ஸ்ரோக்ஸ். சிராஜ் பவுன்சராக அந்தப் பந்தை வீசினார். அப்போது ஸ்ரோக்ஸ் ஏதோ கூறினார். சிராஜ் அணித் தலைவர் கோலியிடம் முறையிட்டதையடுத்து உடனே கோலி தலையிட்டார். 'ஏதேனும் தேவைப்படுகிறதா?. அப்படியெனில் என்னுடன் தாராளமாகக் கதைக்கலாம்.' என்று கோலி தெரிவித்திருக்கிறார். பதிலுக்கு ஸ்ரோக்ஸும் ஏதோ சொன்னதையடுத்து விடயம் சிறிது சிக்கலுக்குரியதானது. கோலி, ஸ்ரோக்ஸ் இருவரும் காரசாரமாக விவாதித்தனர். பின்னர் நடுவரின் தலையீட்டால் விடயம் சுமுகமாக்கப்பட்டது.

இந்திய அணி இங்கிலாந்துத் தொடருக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடியபோது கோலி இடைநடுவில் விலகினார். கோலி விலகியதன் பின்னர் இடம்பெற்ற ஆட்டங்களில் இந்திய அணிக்கு எதிராகக் கடும் வார்த்தைப்போர் முன்னெடுக்கப்பட்டது. அதிலும் சிராஜ் மிகமோசமாக இனவெறிப் பேச்சை எதிர்கொண்டார். அப்போது பல முன்னாள் வீரர்கள் 'கோலி இருந்திருந்தால் ஆஸ்திரேலியா இவ்வாறு நடந்திருக்காது. நடந்திருந்தால் ஆஸ்திரேலியா நடத்தப்பட்டிருக்கும் விதம் வேறுமாதிரி இருந்திருக்கும்' என்று தெரிவித்திருந்தனர். குறிப்பாக கவாஸ்கர் இந்தக் கருத்தை முன்வைத்தார். தற்போது அது உண்மை என்று உரக்க உரைத்துள்ளார் கோலி.

**'சண்டைக்கோழி சீறும்..சீறும்'**



# வீடும் உயிர்ப் பிரச்சினையே!

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

வீடு என்பது பலருக்கும் ஒரு கனவு . ஆனால் உண்மையில் அதுதான் வாழ்க்கையின் முதலாவது பேறு. ஆன்மீகத்தில் அதை வீடுபேறு என்பார்கள். ஆன்மாவுக்கு நிறைவைத் தருவது என்பது இதன்பொருள். யதார்த்த வாழ்க்கையில் மிகப் பெரிய கனவுகளில் ஒன்றாக இருக்கும் வீட்டைக் கட்டுவதென்பது இலகுவான ஒன்றல்ல. மிகப்பெரிய சவால். மிகமிகக் கடினமான ஒன்று. அதுவும் ஊரில் கீழ்நிலைப் பொருளாதார வாழ்க்கையைக் கொண்டவர்களுக்கு இது இயலவே இயலாத காரியம். இதனால்தான் "வீட்டைக் கட்டிப் பார், கலியாணத்தைச் செய்து பார்" என்று சொல்வார்கள். இரண்டுமே அவர்களுக்குப் பெரிய விசயங்கள்.

இப்பொழுது "வீட்டுத்திட்டம்" என்ற ஒன்றால் சனங்கள் படுகின்ற பாடுகள் சாதாரணமானதல்ல. அது தற்கொலைவரை கொண்டு போய் விட்டுள்ளது. வெளியே பார்த்தால் அரசாங்கத்தின் மிகச் சிறப்பான கொடை இதுவென்றே தோன்றும். வீடொன்றைக் கட்டுவதற்கு அரசாங்கம் உதவுகின்றது என்ற மாதிரி , சில உதவிகளை வெளிநாடுகளும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பொது அமைப்புகளும் செய்கின்றன. ஆனால், இந்த உதவிகள் என்பது உதவி என்பதற்குப் பதிலாக உபத்திரத்திலேயே விட்டுள்ளன என்றே சொல்ல வேண்டும் போலுள்ளது. காரணம், இந்த வீட்டுத்திட்டம் அல்லது வீடமைப்புக்கான உதவி என்பது போரால் ஏற்பட்ட வீடழிவுக்கான இழப்பீடேயாகும்.

ஆகவே இது பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒரு இழப்பீடு. அப்படியென்றால் முதலில் பாதிப்பை மதிப்பீடு செய்திருக்க வேண்டும். அப்படி மதிப்பீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் அதற்கான இழப்பீடு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கான திட்டமிடலும் , ஆலோசனைகளும் நடந்திருக்க வேண்டும். இதில் மக்கள் அல்லது மக்கள் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், துறைசார் வல்லுநர்கள் எனப் பலரும் பங்கேற்றிருத்தல் அவசியம்.

ஆனால், அப்படி எதுவுமே நடக்கவில்லை. இதைப்பற்றி மக்கள் பிரதிநிதிகள் என்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் கவனத்திற் கொண்டு பேசவில்லை. நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை. ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்த மாகாணசபையும் கருத்திற் கொள்ளவில்லை. ஆனால் இது ஒரு எரியும் பிரச்சினை. உயிர் கொல்லும் விவகாரம். பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் மானத்தோடும் வாழ்க்கையோடும் சம்பந்தப்பட்ட சங்கதி.

இப்படி யாருமே பொருட்படுத்தாமல் விட்டதனால் 2010 க்குப் பின்னர் மீள் குடியேற்றத்தோடு ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டமானது இன்றுவரை பிரச்சினை களோடுதான் உள்ளது. ஏறக்குறைய பதினொரு வருடங்களாகக் கவனிக்கப்படாத பிரச்சினையாக இது நீண்டு கொண்டிருக்கிறது. இதொன்றும் ஐ.நா.வுக்குப் போய்த்தான் தீர்வைக் காண வேண்டிய ஒரு சங்கதியல்ல. அல்லது இதற்கு இயக்கம் ஒன்றை அமைத்துத்தான் போராட வேண்டும் என்றுமில்லை. ஆனால், தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை.

2010 இல் மீள் குடியேற்றத்தோடு தொடங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் (வீடமைப்பில்) அரசாங்கத்தோடு இணைந்து இந்தியா, நோர்வே, சுவிற்சர்லாந்து உள்ளிட்ட நாடுகள் பெருமளவு உதவிகளைச் செய்துள்ளன. இந்தியா மட்டும் 60 ஆயிரம் வீடுகளுக்கு உதவியது. இப்படித்தான் ஏறக்குறைய 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகளுக்கு சுவிஸ் உதவியுள்ளது. இங்கே பிரச்சினை என்னவென்றால் முதலில் இந்த உதவி போதாது என்பதேயாகும். இதன்போது வழங்கப்படும் நிதியானது ஒரு சாதாரண வீட்டைக் கட்டிக் கொள்வதற்குக் கூட போதுமானதாக இல்லை. ஆனால் திட்டத்தில் ஒரு பங்கை வீட்டுரிமையாளர்கள் அளிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதாவது, வீட்டைக் கட்டுவதில் அவர்களுடைய நிதிப்பங்களிப்போ அல்லது உடல் உழைப்புப் பங்களிப்போ இருக்க வேண்டும் என்பதாகும். இதை எல்லோராலும் செய்யவும் முடியாது. செலுத்தவும் முடியாது. காரணம் இந்த உதவி போரினால் பாதிக்கப்பட்டோருக்கானது. அப்படியானால் நிச்சயமாக குறிப்பிட்ட உதவியைப் பெறும் குடும்பத்தில் உழைப்பாளிகள் இருக்க மாட்டார்கள். அப்படி இருந்தாலும் அவர்கள் தங்களுடைய குடும்பச் சீவியப்பாட்டுக்கே உழைக்கச் சிரமப்பட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த நிலையில் அதை விட்டு விட்டு வீட்டுக்கு வேலை செய்து கொண்டிருக்க முடியாது, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளின் குடும்பத்துக்கு இது இரட்டை நெருக்கடி.

> இப்பொழுது வீட்டுத் திட்டம் என்ற ஒன்றினால் சனங்கள் படுகின்ற பாடுகள் என்பது சாதாரணமானதல்ல. அது தற்கொலை வரை கொண்டு போய் விட்டுள்ளது. வெளியே பார்த்தால் அரசாங்கத்தின் மிகச் சிறப்பான கொடை இதுவென்றே தோன்றும்.

ஆனால், திட்டத்தில் இந்த நிலைமை கவனத்தில் கொள்ளப்பட்டு உள்ளெடுக்கப்படவில்லை. நிதிப்போதாமையை ஈடு செய்வதற்கு செய்யப்பட்ட தந்திரமாகவே இதைக் கொழும்பு கையாண்டது. பாதிக்கப்பட்டோரின் நிலைமையைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? அதைத் தெரிந்தவர்களும் இதைப்பற்றிப் பேசவில்லை என்பதால் அரசாங்கத்துக்கு (கொழும்புக்கு) இது வசதியாகி விட்டது. ஆகவே அவர்கள் தொடர்ந்தும் இதே நடைமுறையைப் பின்பற்றுகிறார்கள். இதில் சில வீட்டுத்திட்டங்கள் ஓரளவுக்குச் சமாளிக்கக் கூடியவையாக இருந்தன. குறிப்பாக சுவிஸ் வீட்டுத்திட்டம். அதற்கு வழங்கப்பட்ட நிதியும் கூடுதல். அதன் நடைமுறைப்படுத்தல் நடைமுறைகளும் வேறு. கெடுபிடிகள் குறைவானது. ஏனையவை அப்படியல்ல. அவை கழுத்தில் சுருக்கை மாட்டுவதைப் போன்றவை. முதலில் வீட்டுத்திட்டத்துக்குப் பயனாளிகளைத் தெரிவு செய்வதிலேயே ஒரு போர் தொடங்கும். அதில் புள்ளி அடிப்படையிலேயே தேர்வு என்று சொல்லி ஒரு போர்க்கால நெருக்கடியைப் போன்ற பதற்றத்தைப் பயனாளிகள் மத்தியில் உருவாக்குவார்கள். இதில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கும் பொறுப்புண்டு. அப்படிப் புள்ளி அடிப்படையில்தேர்வு செய்யப்பட்ட பல வீடுகள் வெற்றிகரமாகக் கட்டப்பட்டு ஆள்களில்லாமல் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளன. அல்லது அவற்றில் பலவும் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. புள்ளி அடிப்படையில் தகுதியில்லை என்று தவிர்த்து விடப்பட்ட மக்கள் இன்னும் குடிசை களில் வீடற்றவர்களாகவே உள்ளனர். இதை அந்தந்தப் பகுதிகளில் உள்ள கிராம அலுவர்களில் இருந்து அபிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் என அனைவரும் அறிவர். அதைப் போல வீட்டுத் திட்டத்தைப் பெற்றுக் கட்டப்பட்ட வீடுகளில் ஆள்களில்லை. வீட்டுரிமையாளர் குறித்த பிரதேசத்திலேயே இல்லை என்பதையும் இவர்கள் அறிவர். அப்படியென்றால் இந்தத் தவறு நடந்ததற்கான காரணம் என்ன? இதற்கு யார் பொறுப்பு? இதைப்பற்றி ஒருங்கிணைப்புக்குழுச் சிங்கங்கள், நாடாளுமன்றத் தங்கங்கள் எல்லாம் என்ன சொல்லுகின்றன?

> இதுவரையும் நடந்து முடிந்த வீட்டுத்திட்டத்தினால் உழைத்தவை பெரும்பாலும் நுண்கடன் வழங்கும் நிறுவனங்களே. இது இரந்துகொண்டு வருவோரிடம் தட்டிப்பறிப்பதற்குச் சமனானது.

இதுவரையும் நடந்து முடிந்த வீட்டுத்திட்டத்தால் உழைத்தவை பெரும்பாலும் நுண்கடன் வழங்கும் நிறுவனங்களே. இது இரந்துகொண்டு வருவோரிடம் தட்டிப் பறிப்பதற்குச் சமனானது. நுண்கடன் திட்டத்தின் கொடுமையைப் பற்றி அவ்வப்போது தமிழ் எம்.பிக்கள் சிலர் நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள் தான். ஆனால், இந்த நுண்கடன் நிறுவனங்கள் வன்னியிலும் கிழக்கில் படுவான்கரை, வாகரை போன்ற பிரதேசங்களிலும் எப்படித் தாண்டவமாடுகின்றன என்பதை இவர்கள் ஆராய்ந்து பார்க்கவில்லை. வீட்டைக் கட்டி முடித்தாலும் (பல வீடுகள் இன்னும் முழுமைப்ப டுத்தப்படாத நிலையில் உள்ளன) இப்பொழுதும் கடன் கட்டப்படவில்லை என்று அலைக்கழிந்து கொண்டேயிருக்கின்றார்கள் பலரும்.

இந்தக் கடன் சாதாரணமான ஒன்றல்ல. வலைக்கண்ணியைப் போலப் பெரும் பொறியை உடையது. இதில் ஒருவர் மட்டும் சிக்குவதில்லை. ஒருவரோடு ஒருவராகப் பலரை இணைத்து இந்தப் பொறியை நிதி நிறுவனங்கள் உருவாக்கி விட்டிருப்பதால் கிராமமே அதற்குள் சிக்கிவிடுகிறது. இதனால் கிராமத்துக்குள்ளேயே அடிதடி சண்டையெல்லாம் உருவாகி மக்களின் ஐக்கியம், ஒருமைப்பாடு எல்லாம் சிதைக்கப்படுகின்றன. இதில் சிலர் கடன் சுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டதும் உண்டு.

ஏனையோர் கடனுக்குமேல் கடன்பட்டு கடைசியில் தங்களையே அடகு வைக்கும் நிலைக்குள்ளாவதும் நடந்திருக்கிறது. குறிப்பாக பெண்கள் படுகின்ற பாடுகள் கொஞ்சமல்ல. கடன் கொடுத்த நிறுவனங்களின் பணியாளர்களிலிருந்து கட்டடப் பொருட்களைக் கடன் கொடுத்த கடைக்காரர்கள், கட்டுமான வேலைகளைச் செய்யும் மேசன்மார் வரையில் (எல்லோருமல்ல) கொடுக்கின்ற தொல்லையால் பல பெண்கள் தங்கள் மானத்தையும் உள்ளத்தையும் நெருக்கடிக்குள்ளாக்க வேண்டியுள்ளது. இதையெல்லாம் இப்போதும் ஏன் சொல்ல வேண்டியுள்ளது என்றால் மேலும் பல வீடுகள் கட்டி முடிக்கப்படாமல் அரை குறையாக நிற்கின்றன. ஒதுக்கப்பட்ட இந்த அரை குறை நிதியைக் கூடக் கொடுக்க வழியற்று நிற்கிறது அரசாங்கம். இதற்குள் கடந்த அரசாங்கத்தின் திட்டமிடல் தவறு என்ற கதைகள் வேறு சொல்லப்படுகின்றன.

இதற்குள் மேலும் ஒரு தொகுதி புதிய வீடுகள் வழங்கப்படப்போகின்றன என்ற அறிவிப்பும் வந்துள்ளது. எனவே இந்தப் பிரச்சினையை இனியாவது - காலம் கடந்தேனும் - நம்முடைய மக்கள் பிரதிநிதிகள் அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று பேச வேண்டும். பேசியே தீர வேண்டும். அல்லது மக்களை இணைத்துப் போராட வேண்டும். ஏனென்றால் இதுவும் ஒரு உயிர்ப்பிரச்சினையே.



# பெண்களும் மரபுரிமைகளும்;

## எழுதப்படாத பக்கங்கள்



மரபுரிமைகளைப் பறைதல்

- வேண்டான் நம்பி



பால்நிலை அசமந்தம் ஆண் முதன்மை ஆகிய சமூக நிலவரங்கள் பலவேளைகளில் சமூக இயக்கத்தில் பெண்களது பங்களிப்புக்களை, தனித்துவங்களை அடையாளப்படுத்தாமல் விட்டுவிடுகிறன. இதனால் பெண்கள் உட்பட்ட சிறுபான்மைக் குழுக்களது, தனியடையாளங்கள், வரலாற்று வகிபாகங்கள் என்பவை சமூக பண்பாட்டு வரலாறுகளில் தொடர்ச்சியாக விடுபட்ட - எழுதப்படாத பக்கங்களாகவே உள்ளன. இந்த நிலைமையானது மரபுரிமைகள் பற்றிய வாசிப்புக்களில், எவ்வாறு ஒரு மேட்டுக்குடிமைத் தன்மை (elitism) இயங்குவதை அவதானிக்கிறதோ அதனை ஒத்ததாகத்தான் பால்நிலைப்பட்ட அசமந்தமும் அதனுள் மறைந்து காணப்படுகிறது. இந்தவகையில் பெண்கள் உட்பட்ட சிறுபான்மையினரை வரலாற்றிற் கண்டு கொள்ளாமல் விடுதல் என்பது சாதாரணமான ஒன்றாக நியம நிலைப்பட்ட (normalization) இயல்பானதொரு போக்காக சமூக பண்பாட்டுக் களத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. இது பண்பாட்டியக்கத்தின் கண்ணுக்கு புலப்படாத மேலாதிக்கம் அல்லது பண்பாட்டு அரசியலின் விளைவாகக் காணப்படுகிறது எனலாம். இந்த மரபுரிமையின் உள்ளடக்கப் போதாமை பற்றிய விமர்சனம் மரபுரிமை பற்றிய வாதவிவாதக் களத்தில் பெண்களுக்கான



இட ஒதுக்கீட்டைக் கோருவது அல்லது பெற்றுக் கொடுப்பது அல்ல பதிலாக அவர்களது சமூக வகிபாகத்தின் பிரதானமான அம்சங்கள் பங்களிப்புக்கள் என்பவற்றை முறையாகப் பிரதிநிதித்துவம் செய்யாமல் விட்டிருக்கும் ஆண் மேலாதிக்க கருத்தியலுக்குள் மறைந்துவிடுதலில் அல்லது மறைக்கப்பட்டுவிடுதல் என்பதில் இருந்து அவர்களை வெளி எடுத்தல் சம்மந்தப்பட்டதாகும். இது எமது மரபுரிமை பற்றிய பார்வையை தொடர்ச்சியாக மேலும் ஜனநாயகப்படுத்த உதவும். இது இன்னொருவகையில் நியமாக்கலினுள் சிக்குண்டுள்ள எமது பார்வைகளை விரிவாக்க - அதன் குறுகிய எல்லைகளைக் கடக்க உதவும்.

குறிப்பாக பண்பாட்டு மரபுரிமைகளது (Cultural Heritage) பேணுகைகள் அவற்றைச் சமூகக் கைமாற்றம் செய்தல் என்பனவற்றில் பெண்களது வகிபாகம் முதன்மையானது. இந்தக் கையளிப்பு முறைமுறைகள் அதற்கான பால்நிலை சார்ந்த பரிமாணங்களை உடையவையாகினும், அப்படிப்பட்ட உள்ளார்ந்த விடயங்கள் தொடர்பாக எமது பார்வைகள், ஆய்வுமுறைகள் இன்னும் விரிவாக்கம் கொள்ளவில்லை. அவர்களது அடிப்படைப் பங்குகள், பணிகள் பற்றியே இன்னும் எம்மிடம் சரியான மதிப்பீடுகளோ பார்வைகளோ இல்லாதபோது அதற்கடுத்த கட்டங்கள் பற்றிச் சிந்திக்க முயலுதல் சற்றதிகமான எதிர்பார்க்கையாகக்கூட இருக்கலாம். பண்பாட்டு மரபுரிமைகளிலும், குறிப்பாக 'தொட்டுணர முடியாத பண்பாட்டு மரபுரிமை ' (intangible cultural heritage) களத்தில் உலகளாவிய ரீதியில் பெண்களது வகிபாகம் முக்கியமானதாக எடுத்துக்காட்டப்படுகிறது. 1999 - 2001 காலப் பகுதியில் இது தொடர்பாக யுனெஸ்கோ அதிக கவனம் செலுத்தத் தொடங்கி இருந்தது. ஆனாலும் இரு தசாப்தங்கள் கழிந்தும் இச் செயற்பாட்டிலோ அல்லது ஒரு கோட்பாடாக அதனைக் கட்டி எழுப்புவதிலோ உலகம் கணிசமான தூரம் சென்றடைந்ததாகக் கூறுவதற்கில்லை. அதேசமயம் தமிழ் பண்பாட்டு மரபுரிமை மற்றும் பெண்ணிய கருத்தாடல் செயற்பாட்டுக் களத்திலும் இது தொடர்பான முன்னசைவுகள் எதுவும் குறிப்பிடும் படியாக நடந்தேறவில்லை.

பண்பாட்டு உருவாக்கத்தில்; வீடு - குடும்பம் என்பவை அடிப்படை அலகுகளாகும் என்பதுடன், இது பாரம்பரியமாகப் பெண்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட ஒன்றாகவும் காணப்படுகிறது. அவ்வகையில் பெண்கள் பண்பாட்டினது சமூகமயமாக்கலை கைமாற்றும், மீள உருவாக்கும், மாற்றியமைக்கும் செயற்பாட்டினைப் புரிபவர்களாக பிரதானமாக எடுத்து நோக்கப்படுகின்றனர்.

அவ்வகையில் பண்பாட்டின் பன்மைத்துவம் வேறுபாடுகள் மற்றும் சிறப்பாக உள்ளூர் பண்பாட்டைப் பேணுதல் என்பனவற்றில் பெண்களது வகிபாகம் முக்கியத்து வமுடைய ஒன்றாக யுனெஸ்கோவின் அறிக்கை ஒன்று எடுத்துக்காட்டுகிறது.

அதன் விரிவாக்கமாக பண்பாட்டுக் குழுமம் ஒன்றின் குழு அடையாளத்தை காவுவதில் பெண்கள் முக்கிய இடத்தில் இருக்கின்றனர் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

குறிப்பாக உடை உணவு மொழி சடங்குகள் விழாக்கள் வாய்மொழி மற்றும் ஆற்றுகை மரபுகள் என்பவை அவர்களது செயற்பாடுகளோடு பிரதானமாகக் கடத்தப்படுபவையாக எடுத்துக் காட்டப்படுகிறது. அதாவது பண்பாட்டின் நாளாந்தத்துவம் (everyday) என்பது பெண்களோடு அதிகபட்சம் பின்னிப்பிணைந்ததாக எடுத்துக்காட்டப்படுகிறது.

ஆனால் பெண்களது மேற்படி பண்பாட்டுச் செயற்பாடுகள் தொடர்பான முன்வைப்புக்களை விமர்சனபூர்வமாக நாம் அணுகவேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில், இவை ஒருவகையில் பால்நிலையின் வகைமாதிரித் (gender Stereotype) தன்மையை அழுத்தவும் அதன் அசமத்துவங்களை முன்னெடுப்பதற்கான களமாகவும் தொழிற்படாதிருக்க அவற்றைப் பற்றிய பகுப்பாய்வுடன் கூடிய கூர்மையான பார்வையொன்று எமக்குத் தேவைப்படுகிறது. அதாவது நடைமுறை யதார்த்தத்தின் பால்நிலை அரசியல் பற்றிய விரிவான விவாதங்களோடு கூடிய அதேநேரம் பெண்களது மரபுரிமைகளுடான சிறப்புத் தொடர்பையும் இணைத்து வாசிக்கத்தக்க ஒரு பார்வையை இது தொடர்பில் கட்டி எழுப்ப வேண்டும். இல்லாவிடில் பால்நிலை அசமத்துவத்தை மரபுரிமைக் கருத்தாடலுக்குள் கொண்டுவருதல் எனும் பெயரில், அதனை மீளவும் அதன் பாரம்பரியமான மேலாதிக்கம் வன்முறை ஆகியவற்றோடு முன்னிலைப்படுத்தி விட்டவராவோம். ஆகவே இந்த விடயம் தொடர்பில் இரட்டை எச்சரிக்கை தேவைப்படுகிறது. குறிப்பாக அரும்பொருளகங்கள் ஆவணக்காப்பகங்கள் பண்பாட்டு மையங்கள் கற்பித்தல் மற்றும் ஆய்வுப் புலங்கள் என்பவை பண்பாட்டு மரபுரிமைப் பேணுகை கைமாற்றுகை சம்பந்தப்பட்ட செகுற்பாடுகளது பிரதான பண்பாட்டு முகவர்களாவர் (cultural agents). ஆனால் இவை யாவுமே நடைமுறையில், ஆண் மேலாதிக்கக் கருத்தியலோடு அதிகபட்சம் இணைப்புற்றவையாகவே உள்ளன என்ற வகையில் பெண்களது மரபுரிமைச் செயற்பாட்டினை அங்கீகரிக்கவும் பதிவு செய்யும்போதும் ஏற்படக் கூடிய கருத்துநிலை சார்ந்த தடைகளைத் தாண்டத்தக்க பரந்த வேலைத்திட்டம் இல்லாதபோது நடைமுறையில் இத் திட்டம் அல்லது மரபுரிமைக் களத்தை ஜனநாயகமாக்கல் நடைபெறாமற் போய், அது வெறுமனே பால்நிலை சம்மந்தப்பட்ட மோதலாகக் குறிக்கப்பட்டு விடும். ஆகவே அரசுகள் இது தொடர்பில் கொள்கை (Policy) ரீதியான முடிவுகள் எடுக்க வேண்டும். அத்துடன் அது தொடர்பான பரந்துபட்டதும் இலக்குக் குழுக்களை நோக்கிய சிறப்புச் செயற்பாடுகளும் தேவைப்படுகின்றன.

அதுதான் பெண்களது பெளதீக மற்றும் கைவினைப் பாரம்பரியம் சார்ந்த மரபுரிமைப் பங்களிப்புக்களை, வாய்மொழி மரபுகள் இலக்கியம், கலை மற்றும் சமயரீதியான அவர்களது வெளிப்பாடுகள் உட்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் கவனப்படுத்தும் ஒன்றாக மாற்றும். அத்துடன், வரலாற்றுக் காலந்தோறும் நடைபெற்ற பண்பாட்டு மாற்றங்களைப் புத்தாக்கப் பயணங்களை ஆவணமாக்கும்.

அதே சமயம் பெண்களது சமூக இருக்கை சார்ந்த வேறுபாடுகள் வழிப்பட்ட வெளிப்பாட்டு மாற்றங்களை இதன்போது கவனத்தில் கொள்ள வேண்டும் இல்லை என்றால் பெணகள் என்ற பெருங்குடையின் கீழ் அனைத்தையும் ஒற்றையாக்கம் செய்வதற்கான வாய்ப்போ அல்லது மேட்டுக்குடிப் பெண்கள் முன்னுரிமை பெறுதலோ நடந்துவிடலாம். ஆகவே எமது ஆய்வு அறிவுகோல் மிகப்பரந்துபட்ட சட்டகத்தை நோக்கியதாக எப்போதும் இருக்கவேண்டும். அது பண்பாட்டின் அனைத்து அடுக்களையும் ஊடறுக்கும் ஒன்றாகவும் வேண்டும். இந்தப் பின்னணியில் தமிழ் மரபுரிமைப் புலத்தில், பெண்களது மரபுரிமைகள் மரபுரிமைப் பயில்வில் அவர்களது பங்களிப்பு என்பனவற்றை ஒட்டிய விவாதங்களும் செயற்பாடுகளும் ஆரம்பிக்க வேண்டும். அல்லாத பட்சத்தில் ஒரு புறம் எமது மரபுரிமைக் களத்தின் உள்ளீர்க்கப்பட வேண்டிய கூறுகளை மெல்ல மெல்ல காலத்தில் அழியவிட்டுவிடுவோம். அது எமது மரபுரிமையின் பரந்துபட்ட செழுமைமிக்க கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் வறியதாக்கி விடும். அதற்கும் மேலாக மரபுரிமையைக் கருத்தாடலை ஒரு அதிகார ஆதிக்கத்தின் பலவேறு குரல்களில் ஒன்றாக மீள மீள நிலைநிறுத்தும் கைங்கரியத்தை செய்தவராவோம்.

**பெண்களது பௌதீக மற்றும் கைவினைப் பாரம்பரியம் சார்ந்த மரபுரிமைப் பங்களிப்புக்களை, வாய்மொழி மரபுகள் இலக்கியம், கலை, சமயரீதியான அவர்களது வெளிப்பாடுகள் உட்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் கவனப்படுத்தும் ஒன்றாக மாற்றும்.**

அதேநேரம் இச்செயற்பாடுகள் மிகவும் விரிவான தளத்தில் பெண்களை வலிமையாக்கும் செயற்பாடும் சமூக பொருளாதார ரீதியான முன்னேற்றத்துக்கான திறவுகோல்களுள் ஒன்றாகவும் அடையும். அதுவே ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான அடித்தளம் ஆகும். மரபுரிமைகளை உள்ளடக்கிய அபிவிருத்தியே மிகச் சரியான உள்ளூரை பரந்துபட்ட தளத்தில் சமூக பொருளாதார பண்பாட்டு ரீதியாக மேம்பாடடைய வைக்கும் செயற்பாடாகும்.



# சாணக்கியன் எம்.பிக்கு....

## அவசரமா ஒரு கடுதாசி

வணக்கம்.

'பொ- பொ' களைப்பிலை இருந்து இன்னும் விடுபட்டிருக்க மாட்டியள் எண்டு நினைக்கிறன். 'பொ-பொ' நடந்த கையோடை ஜெனிவாக் கூட்டமும் துவங்கிவிட்டுது. அதுக்கு அரசாங்கத்துக்குப் பேதி குடுக்கிறதிலேயே எல்லாற்றை கவனமும் இருக்கிறதாத் தெரியிது. என்ன செய்யிறது? எங்கடை தலைவிதி அப்பிடி!

நாங்கள் சின்னப் பிள்ளையா இருக்கேக்க நடந்த தமிழரசுக் கட்சிக் கூட்டங்களிலை கேட்ட பேச்சுகள்தான் எங்களை உசுப்பினது. அதோடை மங்கை அக்கான்ரை பாட்டும் காசி அண்ணையின்ரை பேச்சும். அவர் அடிக்கடி உச்சரிக்கிறது "பாடையிலே படுத்திடினும் பசும் தமிழால் அழும் ஓசை கேட்க வேண்டும் " எண்டு எங்கட நாட்டுக் கவிஞர் பண்டிதர் சச்சிதானந்தப் புலவர் எழுதின கவிதை வரியள்தான். அப்ப உங்கடை பேரனாரை தமிழ் ஈழத்தின்ரை காவலன் எண்டு சொல்லுறவை. ஆனால் நான் அவரைப் பலமான கொங்கிறீற் தூண் எண்டு தான் சொல்லுவன். அந்த இரத்தம்தான் நீங்கள் எண்டு நினைக்கத் தேகம் புல்லரிக்குது.

நீங்களும் அவருக்கோ அல்லது அவற்றை கனவுக்கோ துரோகம் செய்யாமல் அரசியல் செய்ய வேணும் எண்டு நினைக்கிறதும் யோசிக்கிறதும் நல்ல சகுனமாத் தெரியிது. பிறரை மதிக்க வேணும், எல்லாரையும் ஒண்டாச் சேர்த்துக் கைபிடிச்சுக் கூட்டிக் கொண்டு போக வேணும் எண்ட மாதிரி யோசிக்கிறியளாம். அப்பிடி ஒரு எண்ணம் வந்தாலே நல்ல சகுனம்தான் . அதை நம்பிற மாதிரி 'பொ- பொ 'விலையும் நடந்து காட்டியிருக்கிறியள்.

'பொ-பொ'எண்டு சொல்லேக்கை 1961 இல உங்கடை பாட்டன் தலைமையிலை நடந்த அறவழிப் போராட்டம் தான் எனக்கு ஞாபகம் வருகுது.அதிலை அவர் கலந்து கொண்டதும் அதைக் கண்டு, அப்ப இருந்த அரசாங்கம் பயப்பிட்டதும் எனக்கு நினைவிருக்கு. அது இண்டைக்கும் என்ரை கண்ணுக்கை படமா ஒடுதெண்டால் அது இராசமாணிக்கம் ஐயாவின்ரை கெட்டித்தனத்தாலை நடந்ததெண்டுதான் நான் சொல்லுவன். அப்பிடிப்பட்ட ஒரு சிங்கத்தின்ரை வாரிசா நீங்கள் இருக்கிறியள். ஒருத்தற்றை வெருட்டுக்கும் பயப்பிட மாட்டியள் எண்டதை'பொ- பொ' ஊர்வலத்திலை கண்டனான். பொலிஸ்காரர் வெருட்டிக் கதைக்கேக்கையும், ஊருலகத்திலை ஒண்டும் நடக்காத மாதிரி ஜீப்புக்கை இருந்து கொண்டு சமோசா திண்டதையும் பாத்தனான்.

'பொ- பொ'வுக்குப் பிறகு உங்களுக்கு ஒரு புது ஞானம் பிறந்திருக்க வேணும். அது அரசியலிலை மட்டுமில்லை. உங்களைச் சுற்றி இருக்கிறவையளிலையுந்தான். அவையளிட்டை சுத்துமாத்து, கழுத்தறுப்பு, கண்கட்டு வித்தை.... எண்டு கனக்க இருக்கு. . அதுகளைக் கண்டுபிடிக்கிற படிப்பு உலகத்திலை ஒரு யுனிவசிட்டி யிலையும் இல்லை. அனுபவப்படிப்பாலை மட்டுந்தான் அதைக் கண்டுபிடிக்கலாம். புத்தகத்தைப் படிச்சுப் போட்டு வந்து நிண்டு கனக்கக் கதைக்கிற ஆக்களுக்கு அப்பு "எட மேனை ஏட்டுச் சுரைக்காய் ஒருநாளும் கறிக்குதவாதடா..." எண்டுதான் சொல்லுறவர்.

ஜே.ஆர் பிரதமரா இருந்த காலத்திலை கொழும்பிலை சென் அன்ரனீஸ் ஞானம் எண்டால் தெரியாத வியாபாரியள் இல்லை. ஆரம்பத்திலை கொழும்பிலை இருந்த அரசாங்கக் கந்தோருகளுக்குக் குண்டூசி வித்தவர். அப்பிடி ஒரு தொழில் செய்து பெரிய வியாபாரியா வந்து பிறகு ஒரு காலம் ஞானம் கையெழுத்து வைச்சாத்தான் இலங்கைக்குக் கடன் குடுப்பம் எண்டு உலக வங்கி சொல்லுற அளவுக்கு நிலைமை வந்திட்டுதெண்டால் பாருங்கோவன். அவருக்குக் கைகொடுத்தது புத்தகப் படிப்பு இல்லை. அனுபவம்தான் அவரை உயர்த்தினதெண்டு சொல்லுறவை.

இப்ப அதை நீங்கள் உணர்ந்தபடியாலைதான் கட்சியிலை உள்ள பெரிய ஆக்கள் உங்களை வழி நடத்த வேணும், வழிகாட்ட வேணும் எண்டு விரும்பிறியள். இந்த மாதிரியான சபை அடக்கம் இருந்தாலே போதும் பெரிய மனுசனா வந்திடலாம். அதை விட்டிட்டு "நான் கனக்கப் படிச்சனான், எனக்குக் கனக்கக் கதைக்கத் தெரியும். நான் கனக்க வெட்டி விழுத்தி னனான்" எண்டு எல்லாம் கதைக்கிறதிலை ஒரு அர்த்தமும் இல்லை.

ஆனால் கிழக்கிலை உங்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இருக்காம். உங்களை கிழக்கில தலைவர் எண்டு ஏற்றுக்கொள்ள எல்லாரும் ஆயத்தமா இருக்கினமாம்.அப்ப உங்கடை தாத்தா இருக்கேக்கை இருந்த மாதிரி வடக்கும் கிழக்கும் இணைஞ்ச அரசியலைத் திரும்பவும் கொண்டு வரவேணும் எண்டதுதான் எங்கடை விருப்பம்.இப்ப பாக்கேல்லையே பலவிதமான புல்லுருவியள் எல்லாம் இடையிலை வந்து நிண்டு கொண்டு கிழக்கைப் படுத்திறபாட்டை.

அது மட்டுமில்லை, எங்களுக்குள்ளை இருக்கிற சின்ன மயிரளவு வெடிப்பையும் பூதக்கண்ணாடியால பாத்து ,அதைப் பெருக்கிப் பிரிச்சு டைனமைற் வைச்சு வெடிக்கப்பண்ணி பெரிய ஓட்டையாக்கிற வேலையளை அரசாங்கமும், அவையளுக்கு பக்கப்பாட்டுப் பாடுறவையளும் செய்து கொண்டிருக்கினம். அதாலை திட்டமிட்ட குடியேற்றம் நடக்குது. அகழ்வாராச்சி செய்யிறம் எண்ட பேரிலை சரித்திரத்தையும் வரலாற்றையும் மாத்திற வேலையைச் செய்யினம். அதுக்கு இடம் குடுக்காமல் போராட வேணும் எண்டால் வடக்கையும் கிழக்கையும் மானசீகமாகப் பிரிக்க விடப்படாது. அதுக்கும் இடைஞ்சலாக் கொஞ்சப் பேர் இருக்கினம். கவனமா இருங்கோ

**இப்படிக்கு**
**அப்பாவி அன்னமுத்து**



## குழைக்காட்டு கதைகள் II

**கோகுலராகவன்**

மனிதனின் முதலாவது தேடல் உணவுதான். பின்னரே இந்தத் தேடல் என்ற வார்த்தை பல்வேறு விடயங்களுக்கும் பயன்படத் தொடங்கியது. விஞ்ஞானம், இலக்கியம் போன்றவற்றுக்கு தேடலே முதன்மைக் காரணி.

மனித வாழ்வின் பெரும்பான்மையான காலம் உணவு சார்ந்ததாகவே இருந்து விடும். "எல்லாம் ஒரு சாண் வயிற்றுக்கு" என்பார்கள்.

'பசி' என்ற சொல் தான் இன்னமும் உலகில் மிகவும் கடுமையான சொல்.

வேட்டையாடி உண்ட மனிதன் விவசாயத்துக்கு மாறிய போதும், அசைவ உணவுகளின் மீதிருந்த பிரியத்தை விட்டான் எனத் தெரியவில்லை. வேட்டை விலங்குகள் அருகிப் போக, கடல்சார் உணவுகளில் தனது பிரியத்தைத் திருப்பி விட்டிருந்தான். இது ஒரு மிகப் பெரும் தொழிலாகவும் அதற்குரிய கடுமையான மனித சக்தியை பயன்படுத்தவும் வழிவகுத்தது. மீன், இறால் போன்ற கடல் உயிரிகள் பலவகையாக மனித உணவுவகைகளிலும் இடம்பெறத் தொடங்கின. கடலில் ஒரு போதும் இதற்கு முன் சந்திக்காத மீன்களுக்கு மனிதன் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியது ஒன்றும் அண்மைக்காலமாக இருக்க முடியாது. மிக நீண்டகாலமாகவே அது வழிவந்திருக்க வேண்டும்.

மீனவர்கள் கடலுக்குத் தொழிலுக்குப் போவதை விட பெரிய விடயம் எங்களூரில் பத்து மணி போல மீன் வாங்க சந்தைக்குப் போவதுதான். அதற்கு ஒருவரைத் தேடிப் பிடிக்க வேண்டும். இல்லை என்றால் தகப்பனோ ,தாயோ பேரனோ, மாமனோ சந்தைக்கு மீனுக்குப் போக வேண்டும். முந்தி மீன் வாங்க 'உமல்' எனும் பனை ஓலைப் பையை கொண்டு போவார்கள். இது மீன் வாங்க, நண்டு வாங்க, இறால் வாங்க எனப் பலவகையான கடல் உயிரிகளையும் வாங்கி வர மிகப் பயனுடைய ஒரு வகை பை எனலாம். இதில் மீன் வாங்கினால் பழுதடையாமல் நீண்ட நேரம் இருக்கும். சூழல் மாசடையாமல் இருக்கவும் உதவும்.

அம்மாவின் தகப்பன்(பப்பா ) மீன் வாங்கினால், இந்த உமலில் தான் வாங்குவார். அவர் பார்த்து வாங்கிய மீன் தற்செயலாக பழுதடைந்து விட்டால் அந்த விடயத்தில் தான் தப்பித்துக் கொள்வதற்காக கோபமாக உமலைத் தூக்கி எறிவார்.

"எல்லாம் நாறிப் போச்சோ, ஏமாத்திப் போட்டான்"

அவரது சத்தத்தில் பயந்து போன வீட்டுக்காரர்கள் எதுவும் பேசாமல் மீனையோ இறாலையோ எடுத்து பொரித்துக் காய்ச்சுவார்கள். இது அம்மப்பா தான் தப்பித்துக் கொள்வதற்காக கையாளும் ஒரு வழிமுறை. மீன் நாறிப் போனதால் வீட்டில் சண்டை உருவாகி மண்டை உடைபட்டுப் போன குடும்பங்களும் உண்டு.

சின்ன வயதில் கடற்கரைக்கு இரவு நிலாவில் எனது தந்தையாரும் தம்பிமார் மூன்று பேரும் தகப்பனுடன் கடற்கரைக்கு ஏரல் கிண்டப் போவார்கள். இரண்டு, மூன்று உமல் கிண்டிக் கொண்டு வந்தால் மூன்று நாளைக்கு போதுமானதாக இருக்கும். ஏரல் காய்ச்சினால் இறைச்சிக் கறி போல் இருக்கும். ஒருநாள் இரவு ஏரல் கிண்டிக் கொண்டு நிற்கும் போது, தெரிந்தவர்கள் சிலர் அந்தப் பக்கமா வந்துவிட்டனர். ஏரல் கிண்டுவதை அவர்கள் பார்த்தால் சிரிப்பார்கள் என நினைத்து, அப்பாவும், தம்பிகளும் ஒளிந்து ஓடத் தொடங்கினர். ஆனால் அவர்களுடைய கெட்ட காலம். வந்தவர்கள் இவர்கள் ஓடுவதை, நிலவின் உதவியால் கண்டுவிட்டனர். உடனேயே உரத்த குரலில்,

"அங்க பாரடா, ஓடுதடா குட்டியும் தாயுமடா"

என்றிருக்கிறார்கள்.இரவு நிலவில் உருவங்கள் மாத்திரம் தெரியவே இவ்வாறு உருவகப்படுத்தி இருக்கிறார்கள்.

இவர்களுக்கு சிரிப்பு வரவே சிரித்து சிரித்து ஓடத் தொடங்கினார்களாம்.

இராமலிங்கம் மாமா வெள்ளிக்கிழமை தவிர மீன் கறி இல்லாமல் சாப்பிடவேமாட்டார். வெள்ளிக்கிழமை ஏழெட்டு கறி சோறு இருந்தாலும், அவருக்கு சாப்பாடு இறங்காது. மனைவி இராசம் மாமி தயிர், அப்பளம், மிளகாய் எல்லாம் கொடுத்தாலும் கொஞ்சம் வெறுப்பாகவே சாப்பாடு இறங்கும்.

சனிக்கிழமை காலை பத்து மணிக்கு 'விசுக் விசுக் 'என்று பளைச் சந்தை நோக்கிச் சென்று, பாரையோ, சுறாவோ மீனோடுதான் மனுசன் வீட்டுக்கு வருவார். மீன் வெட்டிக் கொடுத்து பொரியல், குழம்பு, புளித்தீயல் என ஒரு வெட்டு வெட்டுவார்.

சாப்பிடும் போது;

"ஆவின் பாலொடு அறுசுவை உண்டாலும்
ஒரு மீனின் வாலுக்கு ஈடாகுமோ"

*சொல்லிவிட்டு சிரிப்பார் மனுசன்.*






○ மாயன்

அற்புதத் தேனை விரைவாக எடுக்க வேண்டும் என்ற அவசரத்தில் பவளராணி, எதையுமே தீர யோசிக்காமல் மாயக்கண்ணாடி ஒன்றுக்குள் புகுந்திருந்தாள். ஆனால் அதில் புகுந்த சற்றைக்கெல்லாம் தவறிழைத்துவிட்டோம் என அவள் உணர்ந்து கொண்டாலும், அந்தத் தவறு தன் வாழ்க்கையையே திசைமாற்றப் போகின்றது என்பதை அவள் அறிய சில மணித்துளிகள் பிடித்தன.

தீபவர்மன் வந்து விழுந்த அதே சுனையில் தான் பவளராணியும் விழுந்தாள். அவளிடமும் அதே கேள்வியைத்தான் மர்மக்குரல் கேட்டது. தீபவர்மனைப் போலவே அவளும் தவறாகவே விடையளித்தாள். ஆனால் அவள் பெண் என்பதாலும், முதுமையால் வாடுபவள் என்பதாலும் கொஞ்சம் கருணை காட்டப்பட்டது.

" நீ இன்றுமுதல் எவரது கண்ணுக்கும் புலப்பட மாட்டாய். ஆனால் மற்றவர்கள் எல்லோரும் உன் கண்ணுக்குத் தெரிவார்கள். அதேவேளை உன் குரலும் எவருக்கும் கேட்காது" என்று அவளுக்கான தண்டனை அறிவிக்கப்பட்டது. பவளராணி அதைக்கேட்டு அதிர்ந்தாள்.

'எவரது கண்ணுக்கும் நான் தெரியாமல் மறைந்து போனால் யார் வந்து என்னை மீட்பார்கள்? உதவி கேட்டு குரலும் கொடுக்க முடியாதே' என்று கலங்கினாள். அப்படி அவள் குழப்பத்தின் பிடியில் இருந்தபோதுதான், அதே சுனையில் மாயக்கண்ணாடி வழியாக தீபவர்மனும் வீழ்ந்து, சவேந்திராசுரனாக மாறினான்.

அவனுக்கு சாபவிமோசனம் பற்றி மர்மக்குரல் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, பவளராணியும் தன்னையும் இந்தச் சாபத்திலிருந்து விடுவிக்கும் வழி பற்றி கெஞ்சிக் கேட்டாள்.

" பெண்ணே, உனக்கும் விமோசனம் உண்டு. இதோ இந்த சவேந்திராசுரன் என்று தன் பழைய உருவத்தைப் பெற்று தீபவர்மனாக மாறுகிறானோ, அப்போதுதான் உனக்கும் சாபம் நீங்கப்பெறும்" என அந்த மர்மக் குரல் சொன்னது. அன்றிலிருந்து அவள் சவேந்திராசுரனைப் பின் தொடரத் தொடங்கினாள். உருவத்தை இழந்ததால் பசி, தூக்கம், களைப்பு , தாகம் என எதுவுமே அவளுக்கு இருக்கவில்லை. அவள் மனம் முழுக்க முழுக்க சவேந்திராசுரனைப் பின் தொடர்வதிலும், தனக்கு சாபவிமோசனம் பெறுவதிலுமே ஒன்றித்திருந்தது. காலங்கள் பல உருண்டோட , இன்றைக்குத்தான் சவேந்திராசுரன் தீபவர்மனாக மாறினான். அவளும் பவளராணியாக உருவம் பெற்றாள்.

அவள் கதையைச் சொல்ல , உருவமற்ற நிலையில் பவளராணி எப்படியெல்லாம் அலைந்திருப்பாள் என்று சகலரும் ஆச்சரியப்பட்டனர்.

" ஒருவேளை இப்படி சாபத்தால் உருவமற்று அலைபவர்களைத்தான் நாம் ஆவி என்று நினைக்கிறோமா?" என்று துவாரகன் தன் சந்தேகத்தை எழுப்ப, அங்கு சிரிப்பொலி எழுந்தது. பவளராணியும், தீபவர்மனும் மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் சிரித்தார்கள். ஆனாலும் உள்ளூர ஒரு கவலை அவர்கள் இருவருக்குமே இருந்தது.

பரிவழுதிக்கு அந்தச் சோகம் ஏனோ பிடிக்கவில்லை.

" தீபவர்மரே, இனியுமென்ன சோகம்? அதுதான் சாபம் நீங்கிவிட்டதே" என்று கேட்டான்.

" இல்லை இளவரசரே, சாபம் நீங்கினாலும் வாழ்வு போய் விட்டதே. என் மனைவி, என் ராஜ்ஜியம் , என் இளமை எல்லாவற்றையும் தொலைத்து விட்டேனே" என்று அரற்றத் தொடங்கினான். அதை ஆமோதிப்பதுபோல பவளராணியும் தலையசைத்தாள். ஏனெனில் அவளுக்கும் அதே சோகம் தானே. ஆனால் அதற்கு காக்கை குப்தன் ஒரு வழியைச் சொன்னான். அதைக் கேட்டதும் தீபவர்மனினதும், பவளராணியினதும் விழிகள் வியப்பால் விரிந்தன.

" காக்கைகுப்தரே, நீங்கள் சொல்வதெல்லாம் நடக்குமா?" என்று கேட்கவும் செய்தான் தீபவர்மன்.

( புதிர்கள் தொடரும்)



# கண்டால் வரச் சொல்லுங்க...



(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கடவுளாக வந்த அழைப்பு

அழகி காணாமல் போய் ஏழாம் நாள்.
இரவு 10 மணி .
ஒரு தொலைபேசி அழைப்பு.

"உங்களுடைய அழகியை போல ஒரு நாய் சங்கரத்தை சந்திக்கு கிட்ட நேற்று நிண்டது. மற்ற நாயள் அதைக் கடிக்க வெளிக்கிட,நாங்கள் அதுகளைக் கலைச்சுப் போட்டு, தண்ணி தெளிச்சு ஒரு கார்ட்போர்ட் பெட்டிக்கு மேல் கிடத்தி விட்டு போனனாங்கள். இப்ப பேஸ்புக்கில வீடியோ பார்த்த பிறகுதான் அது உங்கட அழகியா இருக்குமெண்டு நினைச்சு கோல் பண்ணினம்"

என்று அழைப்பெடுத்தவர்கள் சொன்னார்கள்.

உடனடியாக ரேவதியும், கணவரும் அயலவரின் மோட்டார் சைக்கிளில் சங்கரத்தைக்கு விரைந்தனர். எனினும் தொலைபேசியில் குறிப்பிடப்பட்ட இடத்தில் அழகி இல்லை. சுற்றிவரத் தேடியும் அவள் இல்லை,.

அடுத்தநாள் காலை இன்னொரு தொலைபேசி அழைப்பு.

" எங்கட வீட்ட நாலு நாளா ஒரு நாய் வந்து பூனையளோட விளையாடிக்கொண்டு நிக்குது. அது உங்கட அழகியோ தெரியேலை. அதுதான் எண்டால் வந்து கொண்டு போங்கோ"என்று மறுமுனையில் பேசிய ஒருவர் தகவல் சொன்னார்.

சொன்னவுடன் ரேவதியும், கணவரும் அங்கு விரைந்தார்கள். ஆனால் வீட்டு வாசலில் தொங்கியது பூட்டு. அதனால் தமக்கு அழைப்பு வந்த தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டார்கள்.

" எனக்கு கிளினிக். அவரோட வந்திட்டன். நீங்கள் வேணுமெண்டால் பக்கத்தில இருக்கிற இலங்கை வங்கியில இருக்கிறவரிட்ட கேளுங்கோ, துறப்பு தருவார். கேற்றை திறந்து பாருங்கோ" என்று அவர்கள் தொலைபேசியில் அனுமதி கொடுத்ததும், இவர்கள் வீட்டு வளவுக்குள் போய் அழகியைத் தேடத் தொடங்கினர்.

அங்கே வீட்டின் பின்புறத்தில் ஒடுங்கிப் போய் அமர்ந்திருந்தாள் அவர்களின் அழகி. இவர்களைக் கண்டவுடன் ஓடி வந்தது அழகி. அதனைப் பார்த்த பின்னர் ரேவதிக்கு போன உயிர் திரும்ப வந்தது.இப்போது மீண்டும்ரேவதியின் குழந்தையாக அவரின் மடியில் தவழ்கிறது அழகி.



## எனக்கு இதுகளே போதும்!...

" எனக்கு ரெலிபோன்ல அழகி நிக்கிறதைச் சொன்னவாவை நான் இன்னும் காணேலை. ஆனா என்ர அழகியைத் திருப்பி என்னட்ட அவாதான் தந்திருக்கிறா, அதால அவாதான் எனக்கு கடவுள். அழகியைக் கண்டுபிடிச்சவுடன முதல் வேலையா, நான் நேர்த்தி வைச்ச கோயில்ல போய், தேங்காய் உடைச்சன். என்ர சொந்தக்காரரே நான் அழகியைத் தேடுறதை நக்கலாப் பாக்கேக்க, கனக்கப் பேர் பேஸ்புக்கில என்ர நிலையை அறிஞ்சு நான் கதைச்ச வீடியோவை செயார் பண்ணினவை. அவைக்கெல்லாம் என்ர நன்றி. அழகி கிடைக்க அவையும் தான் காரணம். அந்த வீடியோவைப் பார்த்த கன பேர் எனக்கு ஆறுதல் கூட சொன்னவை.

எனக்குப் பிள்ளைகள் இல்லை. எங்களுக்கு பிள்ளையளைத் தந்தால் நாங்கள் அவையைக் கவனிக்கிறதிலதான் கவனமா இருப்பம். எங்கட நாய்களைக் கவனிக்க மாட்டம் எண்டு தான் கடவுள் இன்னும் எங்களுக்கு குழந்தையைத் தரேல்லைப் போல. எப்ப கடவுள் நினைக்கிறாரோ அப்ப தரட்டும். எனக்கு இப்ப புரூஸ், நீலு, கட்டப்பா ,அழகி எண்டு நாலுபேர்(நான்கு நாய்கள்) குழந்தையள் மாதிரி இருக்கினம்" என்று சொல்லிக் கொண்டே தன் அழகியோடு பிரியத்தோடு விளையாடத் தொடங்கினார் ரேவதி.

# அம்மா அடிச்சாளோ ...?

(தொடர்ச்சி)

## சந்தேகம் 3

தங்களின் ஆவணங்கள் எல்லாம் தொலைந்து விட்டதாக ஏன் கனிஸ்டா பொய் சொல்ல வேண்டும்? குழந்தை பற்றிய சில உண்மைகள் பகிரங்கமாகக் கூடாது என்ற எண்ணத்தால் தான் அப்படி ஆவணங்கள் இல்லை என்று சொன்னாரா? இத்தனை நாள்களாகியும் குழந்தை பற்றி அந்தப் பகுதிக்கு பொறுப்பான குடும்பநல உத்தியோகத்தரிடம் கூடப் பதிவு செய்யாமல் இருப்பதன் காரணம் என்ன?



## என்ன தீர்வு?

கல்வியறிவின்மை, குழந்தை வளர்ப்பு பற்றிய புரிதலின்மை, மன உளைச்சல்,குடும்பத் தகராறு, அயலாரின் கிண்டல், கேலிகள் என்பவை மேரி கனிஸ்டாவை அன்றைக்கு அப்படி ஒரு செயலைச்செய்ய உடனடிக் காரணியாக இருக்கக் கூடும். என்னதான் கனிஸ்டாவுக்கு தண்டனை கொடுத்தாலும், அதனால் பாதிக்கப்படப் போவதென்னவோ ஏதுமறியாத அந்தக் குழந்தையே. கோபங்களையும், குடும்பச் சச்சரவுகளையும் குழந்தைகள் மீது காட்டும் வன்ம மனோபாவத்தை தூர எறியப் பழகினாலேயே இப்படியான சம்பவங்கள் மீளநிகழாமையை உறுதி செய்யமுடியும்.

## சந்தேகம் 4

தன் அப்பாவுக்கும், சகோதரர்களுக்கும் காட்டுவதற்காகவே அந்த வீடியோவை எடுத்ததாக மேரியின் தம்பி சொல்கிறார். ஆனால் அந்த வீடியோவை தன் கணவர் பார்த்து விட்டு , குழந்தைக்கு அடிக்க வேண்டாம் எனச் சொன்னதாக மேரி சொல்கிறார். ஆக, அந்த வீடியோ மேரியின் கணவரிடமும் உண்டு. அப்படியானால் மேரியின் தம்பி அனுப்பிய வீடியோவை அவரின் சகோதரர்களில் ஒருவர் வெளியிடாமல், மேரியின் கணவர் கூட சமூக வலைத்தளங்களில் பகிரவும் சந்தர்ப்பம் உண்டே?

## சந்தேகம் 5

மேரியின் குழந்தையை சகோதரர்கள் வளர்க்கக் கேட்டும் கொடுக்கவில்லை என்று தந்தை சொல்கிறார். ஓகஸ்ட் மாதமளவில் மேரியின் கணவரும் வரவிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருக்கையில் குழந்தை ஷாமை, மேரியின் சகோதரர்கள் தாங்கள் வளர்க்கத் தரும்படி ஏன் கேட்க வேண்டும்? குழந்தை ஷாமைச் சுற்றி வேறு ஏதும் இரகசியங்கள் உண்டா?